விலை ரூபா 20.00



தலைக்கு 10 கோடி 9



கூட்டம் வீழ்ந்து 13 பேர் பலி 10

ஒரு தடவை உற்றுப்பார் 15





200 ஐ தாண்டியது இலங்கை 25


www.onlineuthayan.com

பக்கங்கள்: 36

# உதயன்

சுடர் 27 கதிர் 53

வள்ளுவர் ஆண்டு 2043 | தை 04 புதன்கிழமை (18/01/2012) | UTHAYAN - A Lively National Tamil Daily


# 13 + திருத்தத்துக்கும் மஹிந்த அரசு தயார்!

## கிருஷ்ணாவிடம் நேற்றைய சந்திப்பில் உறுதிமொழி

*கொழும்பு, ஜனவரி 18*

இலங்கை அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் தொடரும் பேச்சுகளும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிந்துரைகளும், அரசியல் தீர்வுக்கு வழிசமைக்குமென நாம் நம்புகின்றோம். இதுதொடர்பாக இன்று (நேற்று) காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடினேன். அப்போது 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் செல்லத் தாம் தயாராகவே இருக்கின்றார் என ஜனாதிபதி மஹிந்த என்னிடம் உறுதியளித்தார்.

- இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்தார்.

அத்துடன், நல்லிணக்க ஆணைக்குழுவின் சமீபத்திய அறிக்கையில் அநேக காத்திரமான பரிந்துரைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றை நாம் அவதானித்தோம். இந்தப் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால், அது இலங்கை அரசு தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள நேர்மையான தேசிய நல்லிணக்கப்பாட்டுக்கான முன்னெடுப்புகளில் ஒரு முக்கிய படியாக அமையும். இலங்கை இந்த வாய்ப்பை நழுவ விட்டுவிடக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு உத்தியோக பூர்வவிஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா பத்திரிகையாளர் மாநாடொன்றில் நேற்றுப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசியவை வருமாறு:-

அரசியல் தீர்வொன்றை எட்டுவதில் தனக்குள்ள ஈடுபாட்டை இலங்கை அரசு

27



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை நேற்று அலரிமாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

### புதிய சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர்

கொழும்பு மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் அநுர சேனாநாயக்க சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த டிசம்பர் 14 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அரச சேவை ஆணைக்குழுவால் அநுர சேனாநாயக்க சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### வெலிகந்த முகாம் பகுதியில் வெடிப்பு

வெலிகந்த - சிங்கபுர இராணுவ முகாம் பகுதியில் நேற்றுக் காலை வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கபட்டது குறிப்பிட்ட இராணுவ முகாம் பகுதியில் இரும்பு சேகரிப்பில் ஈடுபட்டு இருந்த இளைஞர்கள் இரு வர் மர்ம பொருள் ஒன்றை எடுத்து கையாண்டபோதே அது பாரிய சத்தத்துடன் வெடித்ததாகக் கூறப்படுகிறது.

### கல்வி அமைச்சர் யாழ். வருகிறார்

பாடசாலைகளுக்கான போசாக்கு நிகழ்ச்சித் திட்டம் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது. இதற்கான நிகழ்வு நாளை காலை 10 மணிக்கு வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இதில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைக்கிறார். இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதிக் கல்வி அமைச்சர் காமினி விஜிதமுனி சொய்ஸா, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (த-207-236)

### நெடுந்தீவில் 'சமுத்திரா' யுத்தக் கப்பல்

இலங்கைக் கடற்படையின் யுத்தக் கப்பலான 'சமுத்திரா' இரண்டு நாள் பயணத்தை மேற்கொண்டு நேற்றுச் செவ்வாய்க்கிழமை நெடுந்தீவுக்கு வருகை தந்துள் ளது. இந்தக்கப்பலை பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பார்வையிட நெடுந்தீவுக் கடற்படை பொறுப்பதிகாரி கப்டன் சி.றூனா ரணசிங்க ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இதனையடுத்து நேற்று மாணவர்கள் உட்படப் பெருந்திரளான பொதுமக்கள் கப்பலைப் பார்வையிட்டனர். கப்பலில் உள்ள யுத்தக் கருவிகள், ஏனைய சாதனங்களின் இயக்க முறைகள் குறித்து கடற்படை அதிகா ரிகள் பார்வையாளர்களுக்கு விளக்கமளித்தனர். அந்தக் கப்பல் ஆறு அடுக்குகளைக் கொண்டதாகும். இதில் 126 பேர் பணியாற்றி வருகின் றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-7)

## இந்தியாவின் 150 வீடுகளில் 48 மட்டுமே கட்டிமுடிந்தன

யாழ்ப்பாணம், ஜன.18

இந்திய அரசின் உதவியில் அமைக்கப் பட்டுவரும் வீட்டுத் திட்டப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 14 மாதங்கள் நிறைவடையும் நிலையில், 150 வீடுகளில் 48 வீடுகளே பூரணமாகக் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ். மாவட்டத்தில் முன்னோடி வீட்டுத்திட்டத்தில் 150 வீடுகள் நிர்

27

## சமாதான பேரவையின் வாகனம் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன,18

நல்லூர் செட்டித்தெருவில் அமைந்துள்ள தனியார் விடுதியொன்றின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த இரண்டு வாகனங்கள் இனந்தெரியாதோரினால் அடித்துச் சேதப் படுத்தப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 11.15 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் சேதமடைந்த வானங்களில் ஒன்று தேசிய சமாதானப் பேரவைக்குச்சொந்தமானது எனத் தெரி விக் கப்பட்டது..

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

நல்லூர் செட்டித்தெருவில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நேற்று மதியம், ஜே.வி.பியின்

27

## இணை மருத்துவ சேவையாளர் இன்று சுகவீன விடுப்பில்

யாழ்ப்பாணம், ஜன.18

இணை மருத்துவ சேவையாளர்கள் 8 அம்சங்களை முன் வைத்து நாடாளாவிய ரீதியில் இன்று புதன்கிழமை காலை 8 மணி முதல் நாளை வியாழக் கிழமை 8 மணி வரை சுகவீன விடுப்புப்போராட்டத்தில் குதிக் கின்றனர்.

இந்த 8 கோரிக்கைகளையும் நிறைவேற்றும் படி கூறிச் சுகாதார அமைச்சுக்கு முன்பாக நேற்று நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத் துக்கு உரிய தீர்வு எட்டப்படாத தனையடுத்தே அவர்கள் இன்று சுகவீன விடுப்புப் போராட்டத் தில் குதிக்கின்றனர். இன்று இதற்குரிய தீர்வு காணப்படாத பட்சத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி மீண்டும் இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக யாழ். மாவட்ட இணை மருத்துவ சேவைகள் சங்கத் தலைவர் மருந்தாளர் றஜீவன் தெரிவித்தார்.

27

## ஓமந்தைச் சோதனைச் சாவடிக்கு நேற்று சில மணி நேர 'மூடுவிழா'

கொழும்பு, ஜன.18

வவுனியா -ஓமந்தை ஏ-9 வீதியூடான போக்குவரத்துக்கு நேற்றுச் சில மணிநேரம் படையினர் தடை விதித்தனர்.

இதனால் பயணிகள் பெரும் சிரமத்துக்குள்ளானதுடன், பாதை பூட்டியதற்கான காரணமும் தெரியாமல் திகைத்தனர்.

நேற்று மாலை 2 மணியளவில் எந்தவித முன்னறிவிப்புமின்றி, ஓமந்தைச் சோதனைச் சாவடி படையினரால் திடீரென இழுத்து மூடப்பட்டது.

இவ்வாறு பாதை பூட்டப்பட்டதால் வடக்கிலிருந்து தென்பகுதிக்கும், தென்னிலங்கையில் இருந்து வடபகுதிக்கும் பயணித்த வாகனங்கள் மேற்கொண்டு நகர முடியாமல் நீண்டவரிசையில்

27

## அரசு – கூட்டமைப்பு பேச்சு நேற்று நடைபெறவில்லை

### இன்று இடம்பெறுமா என்பதும் சந்தேகம்

கொழும்பு, ஜன.18

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சு நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெறவில்லை. [illegible] பதைப் போன்று இன்றும் பேச்சு இடம்பெறுவது சந்தேகமே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

27


யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்னும் 2 நாட்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டம் நடத்த வந்தவர்கள் படையினரால் தடுக்கப்பட்டனர்

## ஓமந்தையோடு திரும்பியது மக்கள் போராட்ட அமைப்பு

யாழ்ப்பாணம், ஜன,18

யாழ்.நகரில் ஆர்ப்பாட்டம் செய்யவென நேற்று தென்பகுதியிலிருந்து 13 பஸ்களில் வந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வடக்கில் ஆறு இராணுவ சோதனை நிலையங்களில் பல மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டனர். இதனால் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டத்தை இராணுவத்தினர் திட்டமிட்டுத் தடுத்து விட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மதவாச்சி தொடக்கம் புளியங்குளம் வரையான ஆறு இராணுவச் சோதனை நிலையங்களில் பல மணிநேரம் தாம் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக மக்கள் போராட்டக் குழுவைச் சேர்ந்த உதுல் பிரேமரட்ண தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் மக்கள் போராட்டக் குழுவைச் சேர்ந்த லலித், குகன் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்யக்கோரி நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆர்ப்பாட்டத்துக்கு ஒழுங்கு செய்யப்பட்டது. மக்கள் போராட்டக்குழுவின் ஏற்பாட்டில் நாம் இலங்கையர் அமைப்பு உள்ளிட்ட 15 இற்கும் மேற்பட்ட அமைப்புகளின் ஒத்துழைப்புடன் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற இருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவென வந்தவர்களே இராணுவ நிலையங்களில் பல மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

பாலம் உடைந்துள்ளது, பாலத்தில் குண்டு வைக் கப்பட்டுள்ளது என இராணுவம் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு காரணங்களைக் கூறி அவர்களின் பயணத்துக்கு முட்டுக்கட்டை போட்டுள்ளது.

மதவாச்சி, இரட்டைப் பெரிய குளம், வவுனியா நகர், ஓமந்தை -புளியங்குளம் உள்ளிட்ட இடங்களில் இவர்கள் தடுக்கப்பட்டதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறினார்கள்.

''இராணுவம் சதித் திட்டம் போட்டே எம்மை யாழ்.நகருக்குச் செல்லவிடாது தடுத் துள்ளது. ஓமந்தையில் 'இது தான் யாழ்ப்பாணம் செல்லும் வழி' என்று படையினர் எமது பஸ்களை காட்டுப் பாதை யொன்றால் செல்ல வழி காட்டினர்.''

யாழ்ப்பாணத்துக்குத் தம்மைச் செல்ல விடாமல் தடுப்பதை நோக்காகக் கொண்டே பல தடைகளைக் கூறி இராணுவம் தடுத்து விட்டதாக 'உதுல் பிரேமரட்ண' கூறினார்.

இவர்களைப் படையினர் புளியங்குளத்தில் மாலை 4 மணியளவில் தடுத்து நிறுத்தினர். எனவே மேற்கொண்டு பயணித்து யாழ்ப்பாணத்துக்குச் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது முடியாதென்பதால், ஆர்ப்பாட்டக்காரர்களின் திட்டம் மாற்றப்பட்டது. புளியங்குளத் திலேயே 'திடீர்' ஆர்ப்பாட்டமொன்றை அரை மணித்தியாலத்துக்கு அவர்கள் மேற்கொண்டனர்.

இதன்போது ''இராணுவ அடக்குமுறையை நீக்கு'' ''கைது செய்யப்பட்ட-கடத்தப்பட்டவர்களை - உடனடியாக விடுதலை செய்'' என்பன போன்ற வாசகங்களை ஏந்தியவாறு அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் தாம் ஈடுபட்டதாகவும் உதுல் பிரேமரட்ண மேலும் கூறினார்.

யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்கு தம்மை இராணுவம் நேற்று மாலை வரை அனுமதிக்காத நிலையிலேயே புளியங்குளத்தில் ஆர்ப்பாட்டம் செய்துவிட்டுத் திரும்பிவிட்டதாகவும் அவர் கூறினார்.

''உண்மையில் ஏ-9 வீதியில் பாலங்கள் எதுவும் உடையவில்லை.இராணுவம் சதித் திட்டம் போட்டே எம்மை யாழ்.நகருக்குச் செல்லவிடாது தடுத் துள்ளது. ஓமந்தையில் 'இது தான் யாழ்ப்பாணம் செல்லும் வழி' என்று படையினர் எமது பஸ்களை காட்டுப் பாதையொன்றால் செல்ல வழி காட்டினர். எனினும் சிறிது நேரத்தில் நிலைமையை அறிந்து நாம் அந்தப் பாதையால் செல்லும் முடிவைக் கைவிட்டோம்.'' என்று உதுல் பிரேமரட்ண கடுமையாக இராணுவத்தைச் சாடினார்.

இதேவேளை ஆர்ப்பாட்டம் நிகழலாம் என்ற எதிர்பார்ப்பில் நேற்று முற் பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் வரை யாழ் நகர் பஸ் நிலையம் முன்பாக கலகம் அடக்கும் பொலிஸார் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப் பட்டிருந்தனர்.

### தாக்குதலுக்கு கண்டனம்

யாழ்ப்பாணம்,ஜன,18

கீரிமலை சேந்தாங்குளம் பகுதியில் டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்த பொது மக்கள், பிரதேச சபைத் தலைவர் மீதும் கடற்படையினர் நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டித்துள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் விடுத்த கண்டனக் குறிப்பில்-

தமிழர் தாயகம் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் வரை, தமிழர்கள் நிம்மதியாகவோ, இயல்பு நிலையுடனோ வாழ முடியாது என்பதையே இந்தச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கைக்குக் குந்தகமான முறையில் நிலை கொண்டுள்ள ஆயுதப்படையினர் வெளியேற வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறோம் - என்றுள்ளது. (ஒ-14)

### காரைநகர் பிரதேச சபையின் தலைவர் பணிப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜன.18

பிரதேச சபைக்கான ஆளணி வளத்தைப் பூர்த்தி செய்து தருமாறும் வாகன வசதியை ஏற்படுத்தித் தருமாறும் கோரி காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வி. ஆனைமுகன் நேற்று நண்பகல் முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளார்.

சபையின் இந்தத் தேவைகளுக்குத் தீர்வு கிடைக்கும் வரை தான் சபைக்குச் செல்வதில்லை என்றும் அவர் முடிவெடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் தெரிவித்தவை வருமாறு:

ஆளணி வளம் இல்லாமலும் வாகன வசதியின்றியும் பிரதேச சபைச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதுள்ளது. சபையின் செயலாளர் எமக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குப் பின்னடித்து வருகின்றார். இதுவும் சபை செயற்பாட்டுக்கு பெரும் சவாலாக உள்ளது.

உள்ளூராட்சி அமைச்சர் உள்ளூராட்சி மன்றங்களின் ஆளணி வளத்தை பூர்த்தி செய்ய அனுமதி மறுத்துக் கடிதம் அனுப்பியுள்ளார்.

வரி வசூலிப்பாளர், வருமான வரி மேற்பார்வையாளர், நூலக உதவியாளர், தொழில் நுட்ப உதவியாளர் ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. அது மட்டுமன்றி சபைத் தலைவருக்கான வாகனமும் இதுவரை வழங்கப்படவில்லை. இவை தொடர்பாக உள்ளூராட்சி அமைச்சுக்கும், அரச அதிகாரிகளுக்கும் பலமுறை தெரியப் படுத்திய போதும் எந்தப் பய னும் இல்லை.

இதனைக் கட்சியின் தலைமைக்கு கூடத் தெரியப்படுத்தினோம். அவர்களும் எமது தேவையைப் பூர்த்தி செய்து தர நடவடிக்கை எடுக்காமல் இருப்பது மனவேதனையை அளிக்கிறது. தேவைகள் பூர்த்தி செய்யப்படும் வரை சபைக்கு சமூகமளிக்காது பணிப்பு றக் கணிப்பு செய்யவுள்ளேன் - என்றார். (த-14)



யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சமாதானப் பேரவையின் வாகனத்தின் மீது நேற்று தாக்குதல் நடத்தப்பட்டது. மக்கள் போராட்ட அமைப்பினரின் வாகனம் என்று எண்ணியே இதன் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிகிறது.

### சைக்கிள் திருடிய சிறுவன்

யாழ்ப்பாணம், ஜன,18

குருநகரில் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட உரும்பிராயைச் சேர்ந்த சிறுவன் கையும் மெய்யுமாக நேற்றுப் பிடிபட்டான். அவன் யாழ். பொலிஸில் ஒப்படைக் கப் பட்டுள்ளான். அச்சிறுவனை இன்று நீதிமன்றில் முற்படுத்தப் போவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4)

### சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படுத்திய 6 பேருக்கு அபராதம் ரூபா 9 ஆயிரம்

யாழ்ப்பாணம், ஜன,18

நுளம்பு பெருகுவ தற்கு ஏதுவாக நீர் தேங்கும் வகையில் கழிவுப் பொருள்களை வைத் திருந்த குற்றத்துக்காக 6 பேர் யாழ். நீதிமன்றில் ஒன்பதாயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்.

யாழ். நகரப் பகுதியில் இவ்வாறான குற்றத்தைப் புரிந்த இவர்களுக்கு எதிராக பொலிஸார் மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இவர்கள் நேற்று தமது குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அதை அடுத்து நீதிவான், மூவருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா வும், ஏனைய மூவருக்கும் தலா 1,000 ரூபாவும் அபராதம் விதித்தார்.

இதேவேளை யாழ் நகரில் மது போதையில் பொது மக்களுக்கு இடை யூறு விளைவித்த குற்றத் துக்காக மானிப்பாயைச் சேர்ந்த ஒருவர் மூவாயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

அவ்வாறே யாழ். நகரில் நடைபாதையில் போக்குவரத்துக்கு இடையூறாக கூடைகளை வைத்து விற்பனை செய்த குற்றத்துக்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் மன்றில் ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தினார். (ஒ-4)

### உள்ளூர் உற்பத்திகளை மதிக்க தவறிவிட்டார் யாழ். மேயர்

#### சாடுகிறார் பனை அபிவிருத்திச்சபைத் தலைவர்

யாழ்ப்பாணம், ஜன,18

யாழ் மாநகர சபையின் ஏற்பாட்டில் நடைபெற்று முடிந்த ''யாழ்ப்பாணத் திருவிழா'' பொங்கல் நிகழ்வில் உள்ளூர் உற்பத்திகளுக்கு முதன்மை கொடுக்காது இரண்டாம் நிலையில் நோக்கியதாக கடும் அதிருப்தி தெரிவிக்கின்றார் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரட்ணம்.

யாழ். மாநகர சபை முதல்வர் உள்ளூர் உற்பத்தித் துறைகளை உதாசீனமாக நோக்குவதாகவும் அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ் மாநகரசபையின் ஏற்பாட்டில் கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை யாழ் நகரில் ''யாழ்ப்பாணத்திருவிழா'' பொங்கல் நிகழ்வு இடம் பெற்றது.

இதில் உள்ளூர் உற்பத்தித் துறையினரும் தமது உற்பத்திகளைக் காட்சிப் படுத்தி விற்பனை செய்வதற்கு அனுமதி அளிக்கப் பட்டிருந்தது.

அந்த அடிப்படையில் பனை அபிவிருத்தி சபைக்கு அனுப்பப்பட்ட அழைப்பிதழ் தொடக்கம் காட்சிப்படுத்த வழங்கப்பட்ட இடம் வரை பனம்சார் உள்ளூர் உற்பத்தி துறைக்கு முன்னுரிமையளிக் காது உதாசீனம் செய்யப்பட்டு இருந்ததாகப் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் கூறினார். (ஒ-14)

### கரவெட்டியில் குடும்பப்பெண் கொலை: கணவனுக்கு 12 வருட கடூழியச்சிறை

யாழ்ப்பாணம், ஜன,18

கரவெட்டியில் குடும்பப் பெண்ணைக் கொலை செய்த குற்றத்துக்காக பிரஸ்தாப பெண்ணின் கணவனுக்கு 12 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் ஐயாயிரம் ரூபா அபராத மும் வழங்கி யாழ். மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப் பளித்தது.

2007 ஆம் ஆண்டு பெப்ரவரியில் கரவெட்டியில் இடம்பெற்ற இக் கொலையில் கிருபாகரன் என்பவரே தனது மனைவியைக் கொலை செய்தார் என்று வழக்குத் தாக்கலாகியிருந்தது.

இவர் மீதான குற்றப் பத்திரமும் மன்றில் சமர்ப்பிக் கப்பட்டு, அது சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருந்தது. பின்னர் திணைக்களத்தினால் இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப் பட்டிருந்தது.

பின்னர் பிணை அடிப் படையில் சந்தேக நபர் யாழ். மேல் நீதிமன்ற உத்தரவுக்கமைய பருத்தித் துறை நீதிமன்றினால் விடுவிக் கப்பட்டு, அவர் மீதான வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் நடை பெற்று வந்தது.

இந்நிலையிலேயே சந்தேக நபர் குற்றவாளி யென மன்றில் நிரூபிக்கப்பட்டதையடுத்து அவருக்கு மேற்படி தண்டனை விதித் துத் தீர்ப்பளித்தத் மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.பரமராஜா. எதிரி சார்பாக சட்டத்தரணி சி.சிவனேசனும் அரச தரப்பு சார்பாக சட்டத்தரணி வி.திருக்குமரனும் வாதாடினர். (ஒ-4)

### குடாநாட்டிலும் இனி குட்டைப் பனைகள்

#### 8 வருடங்களில் காய்த்துக் குலுங்கும்!

பதினைந்து அடி உயரத்தில்காய்க்கக்கூடிய குட்டைப் பனைமர இனங்கள் இந்தியாவிலிருந்து எடுத்து வரப் பட்டு குடாநாட்டில் நடப்படவுள்ளன.

அதற்கான முன் ஆயத்த வேலைகள் மற்றும் பரீட் சித்துப் பார்த்தல் போன்ற நடவடிக்கைகள் விரைவில் இடம் பெறவுள்ளன என்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரட்ணம் கூறினார்.

குட்டைப்பனை மரம் 8 அல்லது 9 வருடங்களில் காய்க்கக் கூடியதாகும். ஒரு குலையில் 75 இற்கு மேற்பட்ட காய்கள் காய்க்கக்கூடியது. இந்தக் குட்டைப் பனை மரங்கள் ஏற்கனவே கற்பிட்டிப் பகுதியில் நடப்பட்டுள்ளன.

இந்தப் பனை மரங்கள் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளன. அவை பயன் தரவும் ஆரம்பித்து விட்டன.

இந்தியா தமிழ் நாட்டில் காயல்குடி, காயல்பட்டினம் ஆகிய பகுதிகளில் குட்டைப் பனைகள் செழிப்பாக உள்ளன. அங்கிருந்தே இந்த இனப் பனை மரங்கள் எடுத்து வரப்பட்டு குடாநாட்டிலும் நடுகை செய்யப்படவுள்ளன-என்றார் சீவரட்ணம். (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இலங்கை அரசாங்கத்தை இந்தியாவால் அசைக்க முடியுமா?

இலங்கையில் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாது தொடரும் அந்நாட்டில் வாழும் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காக இந்தியா பாடுபடும். அது, இலங்கை மீது கொண்டுள்ள நலன் சார்ந்ததாகும்.

அந்நாட்டின் தமிழர்களுக்கும் அரசுக்கும் இடையில் நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு முடிவு கட்டப்பட்டு அரசியல் தீர்வு ஒன்று எட்டப்படும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, தாம் இலங்கைபுறப்படுவதற்கு முன்னர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

நேற்று முன்தினம் கொழும்பு வந்த கையோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்துள்ளார். இன்று யாழ்ப்பாணம் வருகிறார். அவர் 2010 ஆம் ஆண்டு நவம்பரிலும் இலங்கை வந்திருந்தார்.

அமைச்சர் கிருஷ்ணாவின் இப்போதைய இலங்கை விஜயம், இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தையைத் துரிதப்படுத்தும் முயற்சியைப் பிரதான நோக்கமாகக் கொண்டு அமையும் என்று பரவலாக நம்பப்பட்டது.

அதனைச் சரியாக்குவது போன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியிருந்தார். கடந்த வருடத்தில், அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் விட்டுவிட்டு நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் ஓர் அங்குலம் தானும் உயர்ந்து முன்னேற்றம் அடையவில்லை.

அரசு-கூட்டமைப்புப் பேச்சுவார்த்தை சரியான தடத்தில் செல்வதற்கு, தொடர்வதற்கு இந்தியாவின் கரிசனையுடனான உந்துதல் தேவை என்று உணரப்பட்ட வேளையிலேயே அமைச்சர் இங்கு வந்துள்ளார்.

ஆனாலும் தமிழர் தரப்பின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் கிருஷ்ணாவின் நடவடிக்கைகள், நடத்தைகள் அமையுமா என்பதனைச் சாதகமான முறையில் எதிர்வு கூற முடியவில்லை. இந்திய அரசால் தமிழ்ப் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்டறிவதும், இரண்டு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதாரத் தேவைகளை நெருக்கமாகப் பேணுவதற்கான பேச்சுக்களை நடத்துவதுமே இந்திய அமைச்சரது விஜயத்தின் பிரதான நோக்கம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

எப்படியோ, போர் முடிவுற்று சகஜ நிலையும் சமாதானமும் உண்டாகியுள்ள இக்காலத்திலேனும், நீண்ட நெடுங்காலமாகப் புரையோடிப் போயுள்ள தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதில் இந்தியா வெளித்தோற்றத்துக்கேனும் கொண்டுள்ள அக்கறையை மெத்தவும் தாழ்த்திப்பார்க்க முடியாது.

இலங்கை, தனக்கு மிக அருகில் அமைந்துள்ள நாடுகளில் ஒன்றாக மட்டுமன்றித் தமிழகம், அந்த மாநில மக்கள், பிரிவின்றி ஒன்றிநிற்கும் நிலை (ஞூச்ஞிஞணிஞூ) தவிர்க்க முடியாததும் கருத்திலும் கணக்கிலும் எடுக்க வேண்டிய ஒன்றாக விளங்குகிறது. அதனால், இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் குறித்த நலன் நாடிச் செயற்படுவதாகக் காண்பிக்க வேண்டிய தேவையும் இந்தியாவுக்கு உண்டு என்பதனை மறைக்க இயலாது. அவற்றை விடவும் பிராந்திய மேலாண்மையில் போட்டி போட்டு உயர்ந்து நிற்க வேண்டும் என்ற ராஜீக (ஈடிணீடூணிட்ச்ஞடிஞ்) அத்தியாவசியத் தேவை யும் பாரத நாட்டுக்கு உண்டு.

இத்தகைய பின்புலங்கள், பின்னணிகள் சார்ந்து, இலங்கை இனப்பிரச்சினை இலங்கைக்குள்ளேயே, அதன் அரசாங்கத்தினாலும் தமிழர் தரப்பினாலும் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதில் இந்திய அரசு தனது செல்வாக்கை, ஆளுமை அதிகாரத்தைப் பயன்படுத்த முனைந்துள்ளது எனலாம்.

எப்படியோ, போர் முடிவுற்ற பின்னரும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் கொழும்பு அரசு உள்ளார்ந்த அக்கறை காட்டாதிருந்த தருணத்தில், இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சு நடத்துவதற்குக் கன்னிக்கால் நட்ட பங்கு இந்திய மத்திய அரசுக்கு உண்டு என்பதனை மறந்து விடுவதற்கில்லை.

எனினும், இந்திய அரசின் அனுசரணையுடன் 1987 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டத்துக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில் உள்ள காணி, பொலிஸ் உரிமைகளைக்கூட மாகாண சபைகளுக்கு வழங்க முடியாது என்று இலங்கை அரசு அடம்பிடித்து வருகிறது. அதனால் அரசு-கூட்டமைப்புப் பேச்சுவார்த்தை வெறும் காலங்கடத்தும் தந்திரமாகவே மாறிவிட்டது.

ஒரு கட்டத்தில், அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று 13+ என்ற வகையில் நியாயமான அதிகாரங்களை வழங்கப் போவதாகத் தம்பட்டம் அடித்த மஹிந்த அரசு, இப்போது பதின்மூன்றில் குறித்துரைக்கப்பட்ட அதிகாரங்களைத்தானும், வழங்க முடியாது என்று மறுத்து வருகிறது; மெத்தவும் அடம் பிடிக்கிறது.

இலங்கை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவாதக் கட்சிகள், அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் இந்தியாவினால் திணிக்கப்பட்டது. அதற்கு சிங்கள மக்களின் ஆதரவு கிட்டாது என்றும், இந்தியாவின் தேவைகளுக்காக அதனை நடைமுறைப்படுத்தக் கூடாது என்றும் எக்காளமிடுகின்றன.

அது மட்டுமன்று. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் திருட்டுத் தனமாகப் பேசிப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலேயே பேச வேண்டும் என்று கொட்டிக் குழப்பும் பாத்திரத்தையும் ஜாதிக ஹெல உறுமய ஏற்றுள்ளது.

இத்தகைய ஒரு சகதி அரசியலுக்குள் தோய்ந்துள்ள இலங்கை அரசாங்கம், தமிழர்களுக்குரிய நியாயமான உரிமைகளை, அதிகாரங்களை தாராண்மையுடன் வழங்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

தனது சொந்தப் பொருளாதார, மற்றும் பிராந்திய நலன்களைப் பேணும் வகையில் இலங்கையை - அதன் அரசை - தனது பக்கம் ஈர்க்கும் பொருட்டு, நன்கு திட்டமிட்ட முறையில் விளைநலன் வியூகம் வகுத்துச் செயற்படும் இந்திய உபகண்டம் இந்நாட்டரசு புரியும் செப்படி வித்தைகளை முழுமையாகவே முழுங்கிக்கொள்ளும் என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் உண்டு என்பதனை இங்கு வந்துள்ள அமைச்சர் அறிவாரோ என்னவோ...?

இந்திய அரசும், இலங்கை அரசின் புருடாக்கள் குவிந்துள்ள பாதையில் தடம் பதித்தால், அமைச்சர் கிருஷ்ணா புதுடில்லியை அடையும்போது, 'போனமச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோடே' என்ற நிலைக்கு எதிர்மறையான தாற்பரியங்களே தலையெடுக்கும். அவ்வளவன்றி, வேறென்ன...?

# இரணைமடு குடிதண்ணீர் தாங்கிகளுக்கு இடங்கள்

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ் செயலகத்தில் நடைபெற்றது.

இரணைமடு குளத்திலிருந்து யாழ். மாவட்டத்துக்கு தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தில், குறிப்பிட்ட சில இடங்களில் அதற்கான நீர்த்தாங்கிக் கோபுரம் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

இதற்காக காணிகள் பெற்றுக் கொள்வதற்குச் சில இடங்கள் கொள்கை அளவில் அனுமதிக்கப்பட்டதோடு ஏனைய இடங்களுக்கான அனுமதியும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

இதில் இனங்காணப்பட்ட இடங்கள் வருமாறு:-

கட்டுடை (தனியார் காணி), வேலணை (பிரதேச சபைக்குச் சொந்தமான காணி) நாவற்குழி (தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான காணி) புங்குடுதீவு (தனியார் காணி) அராலித்துறை (காரைநகர் பிரதேச செயலகத்துக்குரியது), கொடிகாமம் (வைத்தியசாலைக்குரியது), கல்லுண்டாய் (மாநகர/ சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குரியது ), மூளாய் (சங்கானை பிரதேச செயலகம்) பழைய பூங்கா, நல்லூர் (கோயில் காணி) அனலைதீவு (தனியார்) எழுவை தீவு (மீனவர் சமாசத்துக்குச் சொந்தமானது), மீசாலை, பொம்மை வெளி (மாநகரசபை), புத்தூர் (கோப்பாய் பிரதேச செயலகம்), கோண்டாவில் (மாநகரசபை), பூநகரி (பிரதேச செயலகத்துக்கு சொந்தமானது), பளை (தனியார் காணி).

இவற்றில் பழைய பூங்காவில் தாங்கியை அமைக்காமல் அதற்கு மாற்றீடாக வேறு இடம் பார்க்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கோரினார் இதனால் அந்தத் தெரிவு கொள்கையளவில் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டது கல்லுண்டாயில் வேறு பல பல அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதால் அதற்கும் கொள்கையளவில் மட்டும் இணக்கம் காணப்பட்டது. மேலும் நல்லூரில் கோயில் நிர்வாகம் காணி தர மறுப்பதால் வேறு இடம் பார்க்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்திய அரசால் வழங்கப்படவுள்ள சைக்கிள் களுக்கான முதற் கட்ட பெயர்ப் பட்டியல் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் அனுமதியளிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் 50 பேரும், கிளிநொச்சியில் 50 பேரும் முதற்கட்டப் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு 1,500 சைக்கிள்களும் கிளிநொச்சியில் 2,000 சைக்கிள்களும் வழங்கப்படவுள்ளன.

இவற்றில் முதற்கட்டமாக இன்று வழங்கப்படவுள்ளவர்களுக்கான பெயர்ப்பட்டியலே அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்திய வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகளின் தெரிவுக்கும் மாவட்ட அபிவிருத்திக் குழு அனுமதியளித்துள்ளது. இதேவேளை யாழ்.மாவட்டத்துக்கு 7400 வீடுகள் ஒதுக்கப்பட்ட போதும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு இதுவரையில் வீடுகள் ஒதுக்கப்படவில்லை.

மேலும் வட மாகாணத்துக்கு எவ்வளவு வீடுகள் என்பதும் இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த-15)

# ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் வடக்கில் கடந்த ஆண்டு 1371 பேர்

யாழ்ப்பாணம், ஜன.18

வடமாகாணத்தில் கடந்த ஆண்டில் 1371 பேர் ஊழியர் சேமலாப நிதி திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர் என்று வடமாகாணப் பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களில் 410 நிறுவனங்கள் கடந்த ஆண்டு சேமலாப நிதித் திட்டத்தில் இணைந்துள்ளன. 901 ஆண் பணியாளர்களும், 470 பெண் பணியாளர்களும் இத்திட்டத் தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்தப் பதிவுப் பணிகள் கடந்த ஆண்டில் இடம் பெறவில்லை.

கடந்த ஆண்டு சேமலாப நிதித் திட்டத்தில் இணைக்கப்பட்டவர்களில் யாழ்.மாவட்டமே முன்னணியில் உள்ளது. யாழ்.மாவட்டத்தில் 726 பேர் இந்தத்திட்டத்தில் பதிவு செய்துள்ளனர். இரண்டாவது இடத்தில் வவுனியா மாவட்டம் உள்ளது. இந்த மாவட்டத்தில் 436 பேர் இணைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டு இந்தச் செயற்பாடுகள் இடம்பெறவில்லை. எனினும் தற்போது முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் உதவித் தொழில் ஆணையாளர் அலுவலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது- என்றார் அவர். (த-17)

| மாவட்டம் | பதிவு செய்த தொழிலகங்கள் | ஆண் பணியாளர் | பெண் பணியாளர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 242 | 483 | 243 | 726 |
| கிளிநொச்சி | 81 | 144 | 38 | 182 |
| வவுனியா | 76 | 258 | 178 | 436 |
| மன்னார் | 11 | 16 | 11 | 27 |
| முல்லைத்தீவு | 0 | 0 | 0 | 0 |
| | 410 | 901 | 470 | 1371 |

# தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்கான படிவங்கள் நேரடியாகத் தபாலில்

யாழ்ப்பாணம், ஜன.18

2011 ஆம் ஆண்டு டிசம்பரில் முடிந்த காலாண்டுக்குரிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்கான விபரத்திரட்டும், பணம் அனுப்புகைப் படிவமும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமைக் காரியாலயத்தால் வரி செலுத்துனர்களுக்கு இம்முறை நேரடியாகவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய பிரதி ஆணையாளர் பி.சிவாஜி அறிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறித்த சிலருக்கான விவரத்திரட்டும் பணம் அனுப்புகைப் படிவமும் வேறுபடுவதாக நாம் அறிகின்றோம். ஆதலால் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி செலுத்துநர்கள் தமக்குரிய விவரத் திரட்டுடன் பணம் செலுத்துகைப் படிவத்தை மிக அவதானமாகப் பரிசீலித்து அதற்குரிய கொடுப்பனவை வங்கியில் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். இதற்கு வரி விபரத்திரட்டிலும் பணம் செலுத்துகைப் படிவத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தைப் பரிசீலனை செய்தல் வேண்டும்.

பூரணப்படுத்திய விவரத்திரட்டினையும், பணம் செலுத்துகைப் படிவங்களையும் இம் மாதம் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

மேலும் இவ் வரிக்கு பதிவு செய்யப்பட்டவர்களுக்கு வரி விவரத்திரட்டு மற்றும் வரி செலுத்துகை படிவம் இதுவரையில் கிடைக்கவில்லையாயின் உடனடியாக யாழ்.பிராந்திய அலுவலகத்தில் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவற்றைத்தவிர காலாண்டுக்கு மொத்த விற்பனைப் புரழ்வு 5 லட்சம் ரூபாவை மிஞ்சும். இவ் வரிக்கு ஏற்கனவே தம்மைப் பதிவு செய்யாதவர்கள் எமது அலுவலகத்தில் பதிவு செய்து உரிய வரியினை செலுத்துவதன் மூலம் தண்டப் பணம் செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்றார். (த)

# வைத்தியர் நியமனம்

வடமராட்சி,ஜன.18

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக டாக்டர் சிவபாதம் சுதோகுமார் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனத்துக்கு முன்னர் இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணிபுரிந்திருந்தனர். (த-236)

# அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.18

கொக்குவில் குளப்பிட்டி சந்தையின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். 19 மில்லியன் செலவில் இரண்டு மாடிக் கட்டடமாக புதிய சந்தை அமையும் என நல்லூர் பிரதேச சபை தெரிவித்துள்ளது. (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘பட்ஜெட்’ உரையில் ஜனாதிபதி உறுதியளித்த சம்பள உயர்வு 2,500 ரூபா எப்போது?

உள்ளூர் அதிகார சபைகள் - விசேட ஏற்பாடுகள் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் மூன்றாவது தடவையாகவும் பிற்போடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகள் இதனை ஆட்சேபித்தபோதும் இந்தச் சட்ட வரைவுகளில் மேலும் பல திருத்தங்கள் செய்யப்பட வேண்டியுள்ளதால் பிற்போடப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக அரசு கூறுகின்றது.

நாடாளுமன்றம் நேற்றுப்பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

2012ஆம் ஆண்டில் முதலாவது அமர்வு நேற்று ஆரம்பமானது.

வழமைபோல் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்பட்ட பின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபாநாயகரின் அனுமதியுடன் கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றை முன்மொழிந்தார்.

### தூர வைக்கப்பட்ட கரு ஜயசூரிய

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரின் தரப்பு இருக்கைகளில் வழமையாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு அடுத்த ஆசனம் கரு ஜெயசூரியாவுக்கு ஒதுக் கப்பட்டு அதில் அமர்ந்திருப்பார். அவருக்கு அந்த ஆசனம் கட்சியின் பிரதித் தலைவர் என்ற பதவி வழியாக ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆனால் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரடியாகத் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்ததால் பிரதித் தலைவர் கூட இல்லாமல் ஒரு சாதாரண உறுப்பினராகிவிட்டார். இதனால் ரணில் விக்கிரமசிங்கவின் ஆசனத்தில் இருந்து ஐந்தாவது ஆசனத்துக்குத் தள்ளப்பட்டிருந்தார்.

வழமைபோல் சபைக்கு வந்த கரு ஜயசூரிய பழக்க தோஷத்தில் பழைய ஆசனத்துக்கு அருகில் சென்றுவிட்டுப் பின்னர் நிலைமையைச் சுதாரித்துக் கொண்டு தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் போய் அமர்ந்து கொண்டது பரிதாபமாக இருந்தது.

### உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு தொடர்பாக ஜனாதிபதியும் பொறுப்புக் கூற வேண்டும்

2011 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகள் தொடர்பாக நாட்டில் பெரும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது. அமைச்சர்களும், அதிகாரிகளும் வார்த்தை ஜாலங்களால் மூடி மறைக்க முடியாது. கல்வி அமைச்சர்கள் இருவர் உட்பட ஜனாதிபதியும் பொறுப்புக் கூற வேண்டும்.

மாணவர்களின் எதிர்பார்ப்புகளும் நம்பிக்கையும் வீண்போய் விட்டன.

### கல்விக் கொள்கையில் மாற்றம் வேண்டும்

நாடளாவிய ரீதியில் ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் 45 வீதமான மாணவர்களில் 4 வீத மாணவர்களே உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். ஆனால் வளர்ச்சியடைந்த நாடுகளில் 75 வீதமானவர்கள பல்கலைக்கழகங்களுக்குச் செல்கின்றனர். நமது நாட்டுக் கல்வி முறையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும். தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

### இஸட் புள்ளி முறை ஒவ்வாத ஒன்று

இஸட் புள்ளி முறை என்பது நமது நாட்டுக்கு ஒத்துவர முடியாத ஒன்று என்பதால் இதனை இல்லாதொழிக்க வேண்டும் என்று நாம் மூன்று வருடத்துக்கு முன்பே கூறினோம்.

இரண்டு விதமான பரீட்சைத் தாள்கள் தயாரிக்கப்படுகின்றன. இரண்டு விதமாகப் பரீட்சை நடத்தப்படுகின்றது என்பது அமைச்சர், பரீட்சை ஆணையாளர் மற்றும் அதிகாரிகள் உட்பட அனைவரும் அறிந்ததே. இப்போது தரப்படுத்தலைக் கணினியில் உட்புகுத்தும் போதே தவறு ஏற்பட்டதாகச் சாட்டுக் கூறுகின்றனர். அப்படியானால் கணினியில் உட்புகுத்தத் தெரியாத அதிகாரிகளா கல்வி அமைச்சில் இருக்கிறார்கள் என்றும் ரணில் கேள்வி எழுப்பினார்.

### 60 வீதமான மாணவர்கள் மீளாய்வுக்கு விண்ணப்பம்

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 60 வீதமானவர்கள் தமது பெறுபேறுகளை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என விண்ணப்பித்துள்ளனர். அப்படியானால் அறுபது வீதமானவர்கள் முடிவினை ஏற்றுக்கொள்ளவில்லை என்று உறுதியாகிறது.

இரண்டு விதமாகத் தனித் தனியாக நடத்தப்பட்ட பரீட்சைக்கு ஒரே வகையில் இஸட் புள்ளிகளை வழங்க முடியாது. வழங்கவும் கூடாது என்று இஸட் புள்ளி முறையை உருவாக்கிய விற்பன்னரே கூறியுள்ளார்.

இந்தக் குழறுபடிகளும் குழப்பமும் பல இலட்சம் இளம் சமூதாயத்தினரின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

**சபையில் கேட்டவை**

இரா.புத்திரசிகாமணி

எனவே உடனடியாக இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை ஒன்றையும் முன்வைத்தார்.

### ஜோன் அமரதுங்கவுக்கு பேசத்தடை

ரணில் விக்கிரமசிங்கவின் கூற்றைத் தொடர்ந்து எதிர்க்கட்சிக் கொறடாவான ஜோன் அமரதுங்க தானும் சில விடயங்களை முன்வைக்க எழுந்தார். ஆனால் ஆளும் தரப்பினர் இதனை ஆட்சேபித்தனர். எதிர்க்கட்சித் தலைவர் விசேட உரைதான் நிகழ்த்தினர். அதனை ஒரு விவாதமாக மாற்ற முடியாது என்று கூக்குரலிட்டனர்.

### எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்

இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவுக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அதனை நாம் பரிசீலனை செய்வோம். இப்போது கல்வி அமைச்சரைப் பதிலளிக்க இடம் விட்டு, நீங்கள் ஆசனத்தில் அமருங்கள் என்று கூறிச் சமாளித்தார் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ.

### பரீட்சை முடிவுகளில் எந்தத் தவறும் இல்லை

எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுகளை முற்றாக மறுத்தார் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன.

### 364 பகிரங்கப் பரீட்சைகள்

இலங்கையில் தற்போது 364 பகிரங்கப் பரீட்சைகள் நடைபெறுகின்றன. இதில் வெளிநாட்டுப் பரீட்சைகள் 40. இப்பரீட்சை முடிவுகளில் அரசோ, அமைச்சர்களே தலையீடு செய்வதில்லை. மிகவும் நேர்மையான முறையிலேயே செயற்படுத்தப்படுகின்றன.

உயர்தரப் பரீட்சை குறித்துப் பலரும் சந்தேகம் எழுப்பிய போது அனைத்துப் பல்கலைக்கழகங்களில் உள்ள கணிதப் பேராசிரியர்களை உள்ளடக்கிய விற்பன்னர்கள் குழு ஒன்றை ஏற்படுத்தி பரிசீலனை செய்தோம். அவர்கள் மிகவும் அக்கறையுடன் பரிசீலனை செய்து தமது முடிவை வெளியிட்டுள்ளனர்.

எந்த விதமாக மோசடிகளோ, தவறுகளோ இடம்பெறவில்லை என்றும் கல்வி அமைச்சர் கூறினார். இதே கருத்தை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவும் அடித்துக் கூறினார்.

### மூன்றாவது தடவையாகவும் பிற்போடப்பட்ட உள்ளூராட்சி சபை விதிகள்

நேற்றைய நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலின்படி, உள்ளூராட்சிச் சபைகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் திருத்தச் சட்டம் பரிசீலனை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் சபை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வா இந்த இரண்டு சட்ட விதிகளும் இன்று விவாதிக்கப்பட மாட்டாது. வேறு ஒரு தினத்தில் விவாதிக்கப்படும் என்று சபையில் கூறினார். இதனை எதிர்க்கட்சிகள் ஆட்சேபித்தனர்.

இந்தச் சட்டவரைவுகள் தொடர்பாகப் பல திருத்தங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஐ.தே.க. பிரதித் தலைவர் சஜித் பிரமதாசாவும் சில திருத்தங்களை முன்வைத்துள்ளார். எனவே அவை எல்லாம் பரிசீலனை செய்யப்பட வேண்டும். இதனால்தான் பிற்போட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்று விளக்கம் அளித்தார் அமைச்சர் சிறிபால.

### 2,500 ரூபா சம்பள உயர்வு எப்போது?

வரவு - செலவுத் திட்ட உரையின்போது ஜனாதிபதி சகல அரச ஊழியர்களுக்கும் 2,500 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும் என்று கூறினார். ஆனால் இன்று வரை வழங்கப்படவில்லை. அதை எப்போது வழங்கப் போகிறீர்கள்? என்று சபை ஒத்திவைப்பு வேளையில் ஒரு கேள்வியைப் பிரேரணையாக முன்வைத்தார் ஐ.தே.க. உறுப்பினரான ஜோசப் மைக்கல் பெரேரா. அதனை வழிமொழிந்தார் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன.

அப்போது ஆளும்கட்சியினர் பல ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பி அடிக்கடி இடையூறு செய்தனர்.

### அஸ்வரின் காட்டம்

ஆளுங்கட்சி உறுப்பினர்களான ஏ.எச்.எம். அஸ்வர் ‘சுடர் ஒளி’ பத்திரிகையுடன் எழும்பினார். ‘சுடர் ஒளி’ பத்திரிகை சுடச் சுடச் செய்திகள் வழங்கும் ஒரு நல்ல பத்திரிகை. இப்போது நல்ல பிரிண்டிங்.

இன்றைய பத்திரிகையில் கூட்டமைப்பு உறுப்பினர் ஈ.சரவணபவனின் பேச்சு ஒன்று வெளிவந்துள்ளது.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி ஒரு மேதை. அவரை வானுயரப் புகழ்ந்து பாராட்டிப் பேசியுள்ளார். அதேவேளை கடுமையாக எச்சரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளார். அந்த மேதையை எப்படி இவர் மிரட்ட முடியும் என்றும் அஸ்வர் கேள்வி எழுப்பினார்.

சம்பள உயர்வைப் பற்றித்தான் ஏதோ பேசப் போகிறார் என்று எல்லோரும் நினைக்க, சரவணபவனைச் சாடிவிட்டு அமர்ந்துவிட்டார் அஸ்வர். (ஓ-உ)

# பேச்சுமூலம் அரசு எம்மை ஏமாற்றுமாக இருந்தால் தமிழ் மக்களைத் திரட்டிப் போராடுவதே ஒரே வழி

## அரியநேந்திரன் எம்.பி. தெரிவிப்பு

இலங்கை அரசு தொடர்ந்து பேச்சுமூலம் எங்களை ஏமாற்றுமாகவிருந்தால் வடக்கு, கிழக்கு மக்களுடன் புலம்பெயர்ந்த மக்களையும் அணிதிரட்டி மாபெரும் அகிம்சை ரீதியான கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்துவதை தவிர வேறு வழியில்லை - என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, மண்முனை வடக்கு கல்விப் பிரிவுக்குட்பட்ட அமிர்தகழி சித்திவிநாயகர் மகா வித்தியாலயத்தில் நடந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு-

எமது வடக்கு ,கிழக்கில் கடந்த 30 வருட காலமாக ஒரு போராட்டம் இடம்பெற்றது. போராட்டம் இடம்பெற்றாலும் கூட வடக்கு, கிழக்கில் ஒழுக்கம் என்பது மிகவும் கட்டுப்பாடாக இருந்துகொண்டிருந்தது.

> தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஒரு இக்கட்டான காலகட்டத்தில் இருந்துகொண்டிருக்கிறது. இந்த 2012ஆம் ஆண்டு என்ன நடக்கும் என்று தமிழர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இப்போது கலாசார சீர்கேடுகளை எமது தமிழ்ச் சமூகத்தில் பரப்புவதற்குப் பல சக்திகள் திட்டமிட்டு சதிசெய்துகொண்டிருக்கின்றன. இவர்களுக்கு நாங்கள் ஒருபோதும் துணைபோகக்கூடாது.

எமது கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தமட்டில் இந்த அரசிற்கு எதிர்க் கட்சியாக இருந்துகொண்டிருக்கிறோம். நாங்கள் அபிவிருத்திக்காக நாடாளுமன்றம் செல்லவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஒரு இக்கட்டான காலகட்டத்தில் இருந்துகொண்டிருக்கிறது. இந்த 2012ஆம் ஆண்டு என்ன நடக்கும் என்று தமிழர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த 2011ஆம் ஆண்டு பேச்சு என்ற நாடகத்திலே நாங்கள் இறங்கியிருந்தோம். 17 சுற்றுப் பேச்சால் காலத்தை கடத்தியிருந்தோம். எங்களை இலங்கை அரசு ஏமாற்றியிருக்கின்றது.

எமது தமிழர் உரிமைக்கான போராட்டம் என்பது இலங்கைக்கு அப்பால் சர்வதேச சமூகத்திடம் சென்றிருக்கிறது. சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் இலங்கை அரசு பேசிக்கொண்டிருகின்றது. தொடர்ந்தும் அரசு எங்களை ஏமாற்றிக்கொண்டிருக்குமாக இருந்தால் பேச்சிலிருந்து விலகிச்செல்வது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

கடந்த 62வருட காலத்திலே எமது மிதவாத அரசியல் தலைவர்கள் நடத்திய அகிம்சைப் போராட்டம் அதற்குப் பின் நடந்த ஆயுதப் போராட்டம் என்பவற்றிலிருந்து வித்தியாசமாக அரசு எங்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றது. அரசிற்கு அழுத்தம் கொடுத்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை பெற்றுத்தரும்படி சர்வதேசத்திற்கு அழுத்தம் கொடுக்கின்ற நடவடிக்கையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எடுப்பது தவிர்க்க முடியாது போகும்.

வடக்கு, கிழக்கு மக்களுடன் புலம்பெயர்ந்த மக்களையும் அணிதிரட்டி மாபெரும் அகிம்சை ரீதியான கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்துவதை தவிர வேறு வழியில்லை. இந்த வழியை இலங்கை அரசு எம்மீது சுமத்துமாக இருந்தால் அதை சகித்துக்கொள்ள வேண்டிய தேவை அதற்கு இருக்கிறது. சர்வதேசத்திற்கும் இருக்கின்றது.

ஏனென்றால் ஆயுதப்போராட்டத்தை அடக்கியதாக கூறும் 20 நாடுகளுக்கும் எமது தமிழ் மக்களுக்கான உரிமையை தர வேண்டிய கடப்பாடு இருக்கின்றது. போராட்டத்தை அடக்கிவிட்டு அவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தர வேண்டிய காலகட்டத்தில் அவர்கள் இருக்கின்றார்கள்.

இந்த 2012ஆம் ஆண்டு அந்த காலகட்டத்தில் தான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பயணித்துக் கொண்டிருக்கின்றது. பல விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் எங்கள் மீது சுமத்தப்படுகின்றன.

ஜனாதிபதியை எந்த வகையில் தென்னிலங்கை சிங்கள மக்கள் ஆதரித்து தலைமை தாங்க விட்டார்களோ அதே வகையில் வடகிழக்கிலே இருக்கின்ற தமிழ் மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு தலைமை தாங்குவதற்குரிய ஆணையைத் தந்திருக்கின்றார்கள்.

அந்த ஆணையை தொடர்ந்து பாதுகாக்க வேண்டிய கடப்பாடு எங்களுக்கு இருக்கின்றது - என்றார் அவர். (ங-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலங்களை இடை மறித்து வலை போடுவதற்குத் தடை

யாழ்ப்பாணம், ஜன.18

கடற்கரையில் உள்ள பாலங்களை மூடி சிறகு வலை பயன்படுத்திக் கடற்தொழில் செய்வதற்கான கால அவகாசம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னரும் அவ்வாறு தொழில் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்டக் கடற்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆர். ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**நீரோட்டங்களை மறித்து கடற்தொழில் செய்யும் முறைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சிறிய வலை பயன்படுத்துவதற்குத் தடை**

பொன்னாலைப் பாலத்திலிருந்து 50 மீற்றர் தூரத்துக்கு அப்பாலும், பண்ணைப் பாலத்திலிருந்து 15 மீற்றர் தூரத்துக்கு அப்பாலுமே சிறகு வலைத்தொழில் செய்ய முடியும். ஆனால் தற்போது இந்தப் பாலங்களுக்கு அருகில் சிலர் தொழில் செய்து வருகின்றனர். வெள்ளிக்கிழமைக்குப் பின்னர் இவ்வாறு தொழில் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள விடயம் இரண்டு பாலங்களையும் அண்டிய பகுதிகளில் தொழில் புரியும் கடற்தொழில் அமைப்புகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதே போல நீரோட்டங்களை மறித்துக் கடற்தொழில் செய்யும் முறைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகச் சிறிய வலை பயன்படுத்துவதற்குக் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானங்கள் கடற்தொழிலாளர் அமைப்புகளின் பிரதிநிதிகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் எமது திணைக்களத்தால் இதற்கு எதிராகச் செயற்படுவோர் மீது நடவடிக்கை எடுக்க முடியும்.

கடற்தொழிலாளர்களின் நன்மை கருதியே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றார் அவர். (த-14)

## எம்.ஜி.ஆர்.பிறந்த நாளில் வறியவருக்கு உதவிகள்




யாழ்ப்பாணம், ஜன.18

மக்கள் திலகம் எம்.ஜி. ஆரின் பிறந்தநாள் நிகழ்வுகள் நேற்றுக் காலை திருநெல்வேலிப் பொதுச்சந்தைப் பகுதியில் இடம் பெற்றன.

இந்த நிகழ்வு ஏற்பாட்டாளர் இ.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதில் 50 க்கும் மேற்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு உடுபுடைவைப் பொதிகள் வழங்கப்பட்டன.

ஊனமுற்ற பத்துக்கும் மேற்பட்டவர்களுக்கும் உடுபுடைவைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வலி.கிழக்குப் பிரதேச சபையின் உப தலைவர் க.தர்மலிங்கம் இந்த உடுபுடவைப் பொதிகளை வழங்கினார். (த-17)

## சேந்தாங்குளம் தாக்குதல் தமிழரசுக்கட்சி கண்டனம்

யாழ்ப்பாணம்.ஜன.18

கீரிமலை சேந்தாங்குளம் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள், வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலை இலங்கைத் தமிழரசுக்ட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது குறித்து இந்தக் கட்சியின் இணைச் செயலாளர் சீ.வி.கே.சிவஞானம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடற்படை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கண்மூடித்தனமான தாக்குதல் கண்டிக்கத் தக்கதும், கவலைக்குரியதுமாகும்.

டெங்கு ஒழிப்பு என்பது நாடளாவிய ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டமாகும். இந்தத் திட்டத்தை வட பகுதியில் மாத்திரமின்றி தென்னிலங்கையிலும் தடையின்றி மேற்கொள்ள அரசு வழிசெய்துள்ளது.

எனவே இத்தகைய விழிப்புணர்வுச் செயற்பாட்டுக்கு ஊக்கமளிக்க வேண்டுமே தவிர அதனைத் தடுக்கக் கூடாது. டெங்குநோயினால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ள இடமாகத் தெல்லிப்பழைப் பிரதேசமே இனங்காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்தப் பகுதியின் டெங்கு ஒழிப்பில் ஈடுபட்டிருந்த மக்களையும் அவர்களுக்கு ஆதரவாக இருந்த வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவரையும் கடற்படை அதிகாரிகள் தாக்கிய செயல் ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றல்ல.

ஜனநாயக ரீதியான தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சிமன்றப் பிரதிநிதிகளை கடற்படையினர் தாக்கியமை ஜனநாயகத்தின் மீது விழுந்த அடியாகவே கருதுகிறோம்-என்றுள்ளது.

(ஙு-14)

# சிறகு வலைத் தொழிலுக்கு கடற்படையினர் கட்டுப்பாடு

சுழிபுரம் திருவடிநிலைக் கடற்கரைப் பகுதியில் சிறகு வலைத் தொழிலை மேற்கொள்ளக் கடற்படையினர் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். இதன் காரணமாக இந்தத் தொழிலை நம்பி வாழும் குடும்பங்கள் பெரும் வருமான இழப்பைச் சந்தித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

திருவடிநிலைப் பகுதிக்குப் பொறுப்பாகப் புதிய கடற்படை அதிகாரி ஒருவர் வந்த பின்னரே இவ்வாறு கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகக் கடற்தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

கடற்கரைப் பகுதியில் நடமாடிச் சிறகு வலைத் தொழிலில் ஈடுபட முடியாது எனக் கடற்படை கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளது. அத்துடன் இறங்குதுறை ஊடாகவே கடலுக்குச் சென்று தொழில் செய்ய வேண்டும் எனவும் கடற்படை அறிவித்துள்ளதுடன் கடலில் மீனவர்கள் செல்வதைத் தடுத்துக் கம்பித் தடுப்பும் போடப்பட்டுள்ளதாக மீனவர்கள் கூறுகின்றனர்.

திருவடி. நிலைக் கடற்கரைப் பகுதியில் காலம் காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த சிறகு வலைத் தொழிலுக்குக் கடற்படை கட்டுப்பாடு விதித்துள்ளமை தொடர்பாகக் கடற்படை உயர் அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக அந்தப் பகுதிக்குரிய கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் எஸ். தெய்வேந்திரம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாகத் தலைவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 10 ஆம் திகதி சிறகு வலை போடப்போன போது திருவடி நிலையிலுள்ள கடற்படை அதிகாரி ஒருவர் அதற்குத் தடை விதித்தார். கடலுக்குள்ளே படகில் சென்று தொழில் செய்யுமாறு கூறினார். சிறகு வலைத் தொழில் என்பது கடற்கரையில் நின்று கடலில் வலை எறிந்து மேற்கொள்வதாகும்.

யுத்த காலம் தொடக்கம் சிறகு வலைத் தொழில் செய்த எமக்குப் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர்க்குமாறு கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோரின் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் ஒன்றைக் கடற்படை அதிகாரிக்கு வழங்கியுள்ளோம். கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிய கடிதத்துக்கு பதில் இல்லை என்றார். (த-14)

## வலி.கிழக்கு வீதிகளுக்கு 150 மின் விளக்குகள்

யாழ்ப்பாணம், ஜன.18

வலி கிழக்குப் பிரதேச வீதிகளுக்கு 150 வீதி விளக்குகளைப் பொருத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் 100 வரையான வீதி விளக்குகள் தற்போது பொருத்தப்பட்டுள்ளன.

பிரதான வீதிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்த வீதி விளக்குகளைப் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருவதாக பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இப்பிரதேச வீதிகளுக்கு 150 வீதி விளக்குகள் முழுமையாகப் போதாது. வீதிகள் அனைத்துக்கும் இவ்வாறு பொருத்துவதாயின் 1000 க்கும் மேற்பட்ட

**வலி.கிழக்கில் உள்ள வீதிகளை முழுமையாக ஒளியூட்ட ஆயிரம் மின் விளக்குகள் தேவை.**

விளக்குகள் தேவை என்றார் அவர்.

இதேவேளை பருத்தித்துறை வீதி, இராச வீதி ஆகியன வீதி விளக்குகள் இன்றி இருளில் மூழ்கி காணப்படுகின்றன இதனால் இந்த வீதிகளில் பயணிக்கும் மக்கள் இரவில் சிரமப்பட்டே தமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். (த-17)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் முழுநேர வெளிநோயாளர் பிரிவு

தென்மராட்சி, ஜன.18

சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் பகல் வேளைகளில் முழுநேர வெளிநோயாளர் பிரிவு நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரை வெளிநோயாளர் பிரிவு திறந்திருக்கும்.

இந்த வைத்தியசாலைக்கு வடமராட்சி கிழக்கு, பூநகரி, கிளிநொச்சி, பளை போன்ற பிரதேசங்களிலிருந்து வரும் நோயாளர்களின் நலன் கருதி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரனின் வழிகாட்டலில் முழுநேர வெளிநோயாளர் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அடுத்ததாக 12 மணி நேரத் தொடர் வெளி நோயாளர் பிரிவு இந்த வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அடுத்த தாக 12 மணி நேர தொடர் வெளி நோயாளர் பிரிவு சாவகச்சேரி வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

மாகாணப் பணிப்பாளரின் வழிகாட்டுதலில் வட மாகாணத்தில் முதல் தடவையாக பல்வேறு கிளினிக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதனால் தென்மராட்சிப் பகுதி நோயாளர்களின் சிரமங்கள் வெகுவாகக் குறையும் என எதிர்பார்க்கப் படுகிறது. (த-207)

# 'டைனமற்' பாவித்து மீன்பிடி: உபகரணங்களுக்கு பிணை

யாழ்ப்பாணம்.ஜன.18

'டைனமற்' பயன் படுத்தி மீன் பிடித்த குற்றச் சாட்டுத் தொடர்பான வழக்கு யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது அதற்குப் பயன்படுத்திய உபகரணங்களைப் பிணையில் எடுத்துச் செல்ல நீதிமன்றம் அனுமதியளித்தது.

'டைனமற்' மீன்பிடிக்குப் பயன்படுத்திய படகு, படகு இயந்திரம், வலை உள்ளிட்ட உபகரணங்களை 10 லட்சம் ரூபா பிணைக் கூலியிலும், மீன் விற்பனைக்குப் பயன்படுத்திய இரண்டு வாகனங்களை இரண்டு மில்லியன் ரூபா பிணைக் கூலியிலும் கொண்டு செல்ல மன்று அனுமதியளித்தது.

அடுத்த மாதம் 27 ஆம் திகதி வரை இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை சட்ட விரோதமாக 'டைனமற்' பயன்படுத்தி மீன்பிடித்த குற்றச்சாட்டில் 8 பேரும், பிடிக்கப்பட்ட மீனை விற்பனை செய்ய உடந்தையாக இருந்த வாகனச் சாரதிகள் இருவருமாக 10 பேரும் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களது உடைமைகள் தொடர்ந்தும் மன்றினால் தடுத்துவைக்கப்பட்டிருந்தன. இந்நிலையிலேயே அவற்றைப் பிணைக் கூலியில் கொண்டு செல்ல மன்று நேற்று முன்தினம் அனுமதித்தது.

யாழ்.கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளினால் இவை கைப்பற்றப்பட்டு மன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த வழக்கு நேற்று முன்தினம் ஆரம்பமான போது சந்தேகநபர்கள் 10 பேரும் தம் மீதான குற்றச்சாட்டை நிராகரித்திருந்தனர். இதனையடுத்து இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதனால் சந்தேகநபர்கள் மீதான குற்றப்பத்திரத்தை மன்றில் சமர்ப்பிக்கும்படி மன்று உத்தரவிட்டுள்ளது. சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி மு.றெமீடியஸ் வாதாடினார்.

இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் இதற்கான குறைந்த பட்சத் தண்டனையாக ஒரு லட்சம் ரூபா அபராதமும், மூன்று வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என மன்றில் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த நிலையிலேயே இந்த வழக்கு அடுத்த மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தொடர்ச்சியாக டைனமற் முதலான தடைசெய்யப்பட்ட மீன்பிடியில் ஈடுபடுவோருக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்படவுள்ளதாக கடல்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலி-வேலணை கடற்பாதை புனரமைப்புக் குறித்து மௌனம்

யாழ்ப்பாணம், ஜன.18
அராலி - வேலணை கடற்பாதையைப் புனரமைப்பது குறித்து இது வரை வெளிப்படுத்தப் படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சியில் இடம் பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பண்ணைப் பால வீதிக்கு மாற்றீடாகஅராலி-வேலணை கடற்பாதை புனரமைப்புக் குறித்து ஆராயப்பட்டது.

**கடற்பாதைப் புனரமைப்புக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது, எப்பொழுது அபிவிருத்தி ஆரம்பமாகும் என்பது குறித்து ஆராயப்பட்டதா என்ற தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை**

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் அராலி - வேலணைக் கடற்பாதை அபிவிருத்தி தொடர்பாக ஜனவரி 6 ஆம் திகதிக் கூட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும் என உறுதியளித்தனர். ஆனால் மேற்படி கூட்டம் கடந்த 6 ஆம் திகதி கொழும்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அராலி - வேலணை கடற்பாதை புனரமைப்புக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது, எப்பொழுது அபிவிருத்தி ஆரம்பமாகும் என்பது குறித்து ஆராயப்பட்டதா என்ற தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. கிளிநொச்சிக் கூட்டத்தில் உறுதியளித்தபடி அமைச்சர் மற்றும் ஆளுநர் இது குறித்துத் தெளிவுபடுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த)

## படையினரின் பொங்கல் விழா




தென்மராட்சி, ஜன.18
தென்மராட்சி பிரதேச 522, 523 ஆகிய படையணிகளின் பொங்கல் விழாவும் கலாசார நிகழ்வுகளும் கடந்த 15 ஆம் திகதி சாவகச்சேரி சிவன் கோவிலடியில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்கு 52 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ரி.ஏ.டபிள்யு.அனுர சுதசிங்க கலந்து கொண்டார்.

காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் முன்றலில் 523 ஆவது படையணியின் சிவில் நிர்வாக அதிகாரி கேணல் ஹர்ஷா அபேரத்ன தலைமையில் பொங்கல் நிகழ்வு இடம் பெற்றது. தொடர்ந்து கோவிலில் இடம்பெற்ற விசேட பூஜைவழிபாடுகளில் மக்கள் கலந்து கொண்டனர். பின்னர் சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலாசார மண்டபத்தில் தைப்பொங்கல் கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. இந் நிகழ்வில் தமிழ், சிங்கள கலாச்சார நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் சாவகச்சேரி பூரணா கலாலயாவின் நாட்டிய நிகழ்வுகளும் உசன் இராமநாதன் ம.வி மாணவர்களின் கலாசார நாட்டிய நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(த-207-131)

## மண்டைதீவில் டெங்கு ஒழிப்பு

**வீடு, வீடாகச் செல்லும் சுகாதாரப் பகுதியினர் விழிப்புணர்வுச் செயற்பாட்டை முன்னெடுக்கின்றனர்.**

யாழ்ப்பாணம், ஜன.18
மண்டைதீவுப் பகுதியில் டெங்குத் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கையில் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

இப் பிரதேசத்தில் வீடு, வீடாகச் செல்லும் சுகாதார பகுதியினர் விழிப்புணர்வுச் செயற்பாட்டை முன்னெடுப்பதுடன் சுகாதார விதிமுறைகள் பற்றியும் மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றனர்.

குடியிருப்பாளர்களின் வீட்டுச் சுற்றாடல்களைப் பார்வையிடுவதுடன் குப்பைகள் தேங்கியுள்ள பகுதிகளை இனங்கண்டு அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர். (த-17)

## யாழ். ரயில் நிலையப் பகுதி துப்புரவு

யாழ்ப்பாணம், ஜன.18
யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகைதரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா யாழ்.ரயில் நிலையத்தில் இந்தியாவின் உதவியுடனான ரயில் பாதைப் புனரமைப்பை ஆரம்பித்து வைக்கிறார். இந்த வைபவத்துக்காக யாழ். ரயில் நிலையப் பகுதி நேற்று கனரக வாகனகளின் உதவியுடன் துப்புரவு செய்யப்பட்டது.

ரயில்வே திணைக்கள அதி காரிகளின் மேற்பார்வையில் இந்தப் பணிகள் அவசர அவரசமாக மேற்கொள்ளப் பட்டன. இந்தப் பணியில் பெருமளவு பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(த-17-86)



வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சமுர்த்திப் பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. வேலணைப் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மீரா திசைநாயகம் பயனாளி ஒருவருக்கு வாழ்வாதார உதவி வழங்குகிறார். (த-7)

## சமுர்த்தி பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

சமூர்த்தி வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் வேலணைப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுக்கு சுயதொழில் முயற்சிக்கென 27 பயனாளிகளுக்கு 6 லட்சத்து 42 ஆயிரம் ரூபா செலவில் நீரிறைக்கும் இயந்திரங்களும், 3 பயனாளிகளுக்கு மருந்து தெளிகருவிகளும் கைத்தொழில் முயற்சிக்கென 118 பயனாளிகளுக்கு 20 லட்சம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரங்களும் 136 மீன்பிடிப் பயனாளிகளுக்கு 22லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களும் வழங்கப்பட்டன.(த-7)

## மாணவருக்கு கற்றல் உபகரணம்

அனலைதீவு மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபை அங்குள்ள பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியது. முன்பள்ளிச் சிறார்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் என சுமார் 450 பேர்கள் வரை கற்றல் உபகரணங்களைப் பெற்றுக்கொண்டனர்.

அனலை தீவைச் சேர்ந்த ஜேர்மனியில் வசிக்கும் மக்கள் இதற்கென ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை மேற்படி ஆலய பரிபாலன சபையிடம் வழங்கியிருந்தனர். (த-7)

## மாணவர்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம் , ஜன.18
லண்டன் வாழ் கைதடி ஒன்றியத்தின் நிதியுதவியுடன் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகம் இவ்வாண்டு பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு புத்தகப் பைகள் வழங்கும் நிகழ்வு ஒன்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை 3 மணிக்கு கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத் தலைவர் லயன் ப.செல்லத்துரை தலைமையில் கைதடி வளர்மதி கல்விக்கழக மண்டபத்திலே நடத்தியது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக டென்மார்க் நாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் ஜெயசீலன் ஜெயரூபா தம்பதிகளும், கனடா நாட்டிலிருந்து வந்துள்ள செல்வராசா ரதி தம்பதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (த-288)

## சுகாதார நிலையத்துக்கு நகரசபையின் உதவி

தென்மராட்சி, ஜன.18
சாவகச்சேரி நகர சபையினர் தமது சபை எல்லைக்குள் இயங்கும் நுணாவில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குரிய தளபாட வசதிகளை வழங்க முன்வந்துள்ளனர்.

அத்துடன் எதிர்காலத்தில் நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரத் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்படும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மற்றும் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பு நடவடிக்கை ஆகியவற்றுக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குவதாகவும் ,

**டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மற்றும் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பு நடவடிக்கை ஆகியவற்றுக்கு ஒத்துழைக்கிறது நகரசபை.**

சபை எல்லைக் குட்பட்ட பகுதியில் இயங்கும் உணவு தயாரிப்பு நிலையங்கள் , உணவு கையாளும் நிலையங்கள் போன்றவை சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக இருப்பதைக் கண்காணித்தல், நகரசபை சிற்றூழியர்களை மாதாந்தம் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துதல் போன்றவற்றை மேற்கொள்ள உள்ளதாகவும் நகரசபைத் தவிசாளர் இ.தேவ சகாயம்பிள்ளை தெரிவித்தார்.

கடந்த வாரம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம் பெற்ற காலாண்டு [illegible] தெரிவித் தார். (த-207)

## சுதுமலை அம்மன் ஆலயச் சூழலில் டெங்குநோய் பரவக்கூடிய அபாயம்

சண்டிலிப்பாய், ஜன.18
சுற்றுச்சூழலைப் பாதுகாத்துச் சுகாதார விதி முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய இந்தக்கால கட்டத்தில் சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படும் வகையிலும் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய வகையிலும் சுதுமலை அம்மன் ஆலயச் சூழல் காணப்படுவதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆலயத்தில் நாளாந்தம் சேரும் குப்பைகளையும் திருமண மண்டபத்தில் குவியும் இலைகள், ஐஸ்கிறிம் கப், வாழைத்தண்டுகள் உட்படக் கழிவுப் பொருள்களையும் வாகனத்திலேற்றி மழை வெள்ளம் தேங்கி நிற்கும் வாய்க்காலிலும் வயல் வெளிகளிலும் மக்கள் நடமாடும் வீதியோரங்களிலும் கொட்டுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அதிருப்தியும் கவலையும் அடைந்துள்ள பொதுமக்கள் டெங்கு நோயைப் பரப்பக்கூடிய நுளம்புகள் உற்பத்தியாவதற்கு முன்பு மழை வெள்ளத்தில் குவிக்கப்பட்டிருக்கும் கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளனர்.

உயிர்க்கொல்லி நோயான டெங்கு நோய்ப் பரம்பல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்த முன் வந்துள்ள அரசு தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை ஆரம்பித்து நாடு முழுவதும் நடைமுறைப் படுத்தி வருகிறது.

இந்த நிலையில் பிரபல்யமான ஆலயங்களில் ஒன்றான சுதுமலை அம்மன் ஆலயத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகள் அருகாகிலுள்ள மழை வெள்ளம் தேங்கி நிற்கும் வாய்க்காலில் கொட்டப்படுகின்றன. இது மட்டுமல்ல திருமண மண்டபத்தில் சேகரிக்கப்படும் இலை ஐஸ்கிறீம் கப், வாழைத்தண்டு உட்பட சகல கழிவுப் பொருள்களும் லான்மாஸ்டரில் ஏற்றப்பட்டு மழை வெள்ளம் தேங்கி நிற்கும் நெல் வயல்களிலும் மக்கள் நடமாடும் வீதியோரங்களிலும் கொட்டப்படுகின்றன.

இது குறித்து இந்தப் பகுதி மக்கள் ஆலயத்துக்கு வருகை தரும் அடியார்கள் சண்டிலிப்பாய் பிரதேச சுகாதார உத்தியோகத்தர்களுக்கு நேரில் சென்று முறையிட்ட போதும் தலத்துக்கு விரைந்து சென்று பார்வையிட்ட பரிசோதகர்கள் மழை வெள்ளத்தில் குவிக்கப்பட்டிருந்த கழிவுப்பொருள்களை அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் தொடர்ந்தும் அப்பிரதேசத்தில் குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன.

(த-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் கல்வியை அழிக்க சில தீய சக்திகள் முயற்சி

**62 வருட உரிமைப் போராட்டத்தில் சகலதையும் இழந்த நாம் கல்வியை மட்டும் இழக்கக்கூடாது. தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்குவதற்காக இலங்கை அரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேசி வருகின்றது. ஆனால் எந்தப் பயனும் இதுவரை கிடைக்கவில்லை என்கிறார் அரியநேத்திரன் எம்.பி.**

மட்டக்களப்பு,ஜன.19

கிழக்கு பகுதிகளில் பாடசாலை மாணவர்களிடையே கலாசார சீர்கேட்டை ஏற்படுத்தி தமிழ் மக்களின் கல்விச் செல்வத்தை பூண்டோடு அழிப்பதற்காக சில தீய சக்திகள் தொடர்ந்து முயற்சிக்கின்றன என்று கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டு. அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்தில் ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் அங்குராப் பணவைபவத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப்புலிகளுடனான போர் மௌனிக்கப்பட்டதன் பின் இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்களிள் கலை, கலாசாரங்கள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகின்றன. குறிப்பாக பாடசாலை மாணவர்களிடையே கலாசார சீர்கேட்டை ஏற்படுத்தி தமிழ் மக்களின் கல்விச் செல்வத்தை அழிப்பதற்காக சில தீய சக்திகள் களமிறக்கப்பட்டுள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு மாணவருடைய பெற்றோரும் தங்களது பிள்ளைகளின் கல்வி தொடர்பாக கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் பெற்றோர்களின் கையில்தான் மாணவர்களின் கல்வி தங்கியுள்ளது. 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தங்களது பிள்ளைகள் சித்தியடைந்துவிட்டால் தங்களின் பொறுப்பு முடிந்துவிட்டதாக பெற்றோர்கள் நினைக்கிறார்கள். இது தவறு. அவ்வாறு சித்தியடைந்த பிள்ளைகளில் எத்தனைபேர் பல்கலைக்கழகம் செல்கிறார்கள் என்றால் அது மிகவும் குறைவாகவேதான் இருக்கின்றது.

பெற்றோர்கள் பிள்ளைகள் பட்டப்படிப்பு படிக்கும் வரையில் அவர்களின் மேல் அதிக அக்கறை காட்டி அவர்களை ஊக்குவிக்க வேண்டியது பெற்றோர்களின் கடமையாகும்.

62 வருட உரிமைப் போராட்டத்தில் சகலதையும் இழந்த நாம் கல்வியை மட்டும் இழக்கக்கூடாது. தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்குவதற்காக இலங்கை அரசுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பேசி வருகின்றது. ஆனால் எந்தப் பலனும் இது வரை கிடைக்கவில்லை.

எனவே சர்வதேச ரீதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டியது தமிழ் மக்களினது கடமையாகும். இதற்கு சகலரும் தங்களது ஆதரவை வழங்க வேண்டும்- என்றார். (ச)

# பணம் செலுத்தியும் மின் இணைப்பு இல்லை

**தாண்டியடி, சங்கமன் கிராமத்தில் யானைகளின் அச்சுறுத்தல் உள்ள நிலையில், இங்குள்ள மக்கள் இரவு வேளைகளில் மின்சார வெளிச்சமின்றி இருப்பது மிகவும் ஆபத்தானது என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**

அம்பாறை,ஜன.18

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தாண்டியடி சங்கமன் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் சிலர் - தமது வீடுகளுக்கு மின்சார இணைப்பினைப் பெறுவதற்காக கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் மின்சார சபையின் அக்கரைப்பற்று அலுவலகத்தில் விண் ணப்பங்களைச் சமர்ப்பித்து அதற்கான பணத்தைச் செலுத்தியுள்ளபோதும் அவர்களுக்கான மின்சார இணைப்பு இதுவரை வழங்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக மின்சார சபையின் அக்கரைப்பற்று அலுவலகத்துக்குச் சென்று தமக்கான மின்சார இணைப்பினை வழங்கும் படி உரிய அதிகாரிகளிடம் பலதடவை கோரிக்கை விடுத்துள்ள போதும் உரிய பலன் கிடைக்கவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர். மின்சார இணைப்பினைப் பெறுவதற்கான பணத்தினைச் செலுத்துவதற்காக - நகை களை அடகு வைத்தும், வட்டிக்குப் பணம் பெற்றுமே நாம் பணத்தினைத் திரட்டினோம். ஆனால், பணம் செலுத்தி 4 மாதங்களாகிவிட்டன. இன்னும் இணைப்புக் கிடைக்கவில்லை. அதேவேளை, இணைப்பைப் பெறுவதற்காக வட்டிக்கும், அடகு வைத்தும் பெற்ற பணத்துக்கான மாதாந்த வட்டியை நாம் செலுத்த வேண்டியுள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

சங்கமன் கிராமத்திலிருந்து மின்சார சபையின் அக்கரைப்பற்று அலுவலகம் 25 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

இந்த அலுவலகத்துக்கு தினமும் சென்று வருவதென்பது எமக்கு அலைச்சலையும், மேலதிக பணச் செலவினையும் ஏற்படுத்துகிறது என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தாண்டியடி, சங்கமன் கிராமத்தில் யானைகளின் அச்சுறுத்தல் உள்ள நிலையில், இங்குள்ள மக்கள் இரவு வேளைகளில் மின்சார வெளிச்சமின்றி இருப்பது மிகவும் ஆபத்தானது எனத் தெரிவிக்கும் பொதுமக்கள், தமக்கான மின்சார இணைப்பினை இனியும் காலம் தாழ்த்தாது, உடனடியாக வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

# கிராம சேவகர் தாக்கப்பட்டதாக முறைப்பாடு

**கடமை நிமித்தம் வீட்டைவிட்டு வெளியே சென்ற போது மூன்று பேர் கொண்ட ஒரு குழுவினர் தன்னைத் தாக்கிய தாகக் கிராம சேவகர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.**

சாய்ந்தமருது,ஜன.18

சாய்ந்தமருது 14 ஆம் பிரிவு கிராம சேவகரான எம்.என்.எம்.சஜாவை கடந்த சனிக்கிழமை ஒரு குழுவினர் தாக்கியதாக கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடமை நிமித்தம் வீட்டைவிட்டு வெளியே சென்ற போது மூன்று பேர் கொண்ட ஒரு குழுவினர் தன்னைத் தாக்கியதாக இந்த முறைப்பாட்டில் கிராம சேவகர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்படும் குழுவிலிருந்த ஏ.ஜே.எம். ஜவாத்தை குறித்த கிராம சேவகரான சஜா தாக்கியதாகவும் கல்முணைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கிராம சேவகர் சஜா தாக்கப்பட்டமை தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சாய்ந்தமருது பிரதேச செயலர் ஏ,எல்.எம்.சலீம் கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரான் பெரேராவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)



தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அம்பாறை மாவட்டத்திலுள்ள பல பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தநிகழ்வில் பொலிஸார், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில்

நுவரெலியா,ஜன.18

இந்த மாதம் வழங்கப்படவேண்டிய சம்பளப் பணம் வழங்கப்படாமையைக் கண்டித்து கண்டிதெற்குஇலங்கை போக்குவரத்துச் சபை டிப்போவைச் சேர்ந்த 278 ஊழியர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

மாதாந்தம் 10ஆம் திகதி வழங்கப்பட்டுவரும் சம்பளப் பணம் 10ஆம் திகதி கடந்தும் இன்றுவரை வழங்கப்படாதுள்ளதாகவும் தமக்கான சம்பளப் பணத்தை உடனடியாகப் பெற்றுத்தர வேண்டுமெனவும் கோரி இவர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்தப் பணிப்பகிஷ்கரிப்புக் காரணமாக கண்டி நகர பஸ் சேவைகளும் கண்டி-கொழும்பு உட்பட 17 நெடுந்தூர பஸ் சேவைகளும் தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மீன் பிடிக்கச் சென்ற வயோதிபர் எங்கே?

திருகோணமலை, ஜன.18

திருக்கோவில், கஞ்சிக்குடியாறு குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை காணாமற் போயுள்ளார் என்று திருக்கோவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஈ.பி. சமிந்த ஜெயசூரிய தெரிவித்தார்.

கஞ்சிக்குடியாறு பிரதேசத்தைச் சேர்ந்த செல்லத்துரை நடேசப்பிள்ளை (வயது-62) என்பவரே காணாமற் போயுள்ளார். இவர் சம்பவ தினம் மாலை 5 மணிக்கு வழமைபோல கஞ்சிக்குடியாறு குளத்தில் மீன்பிடிக்க சென்றவர் இரவு 7 மணியாகியும் வீடு திரும்பாததையடுத்து உறவினர்கள் தேடிச்சென்றுள்ளனர்.

இதன்போது குளத்தின் கரையில் கல் ஒன்றின் மீது வலை இருப்பதையும் தோணி தண்ணீரில் மூழ்கிய நிலையில் காணப்படுவதையும் அவர்கள் அவதானித்துள்ளனர். இந்த மீனவரை எங்கு தேடியும் காணவில்லை என்று உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

பொலிஸார் அங்கு தேடுதல் நடத்தியும் அவரைக் கண்டுபிடிக்கவில்லை. குளத்தில் நீர்மட்டம் அதிகரித்து இருப்பதால் கடற்படையின் உதவியுடன் குளத்தில் தேடுதல் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# இலத்திரனியல் கிராமம் உருவாக்க நடவடிக்கை

கண்டி,ஜன.18

கண்டி, நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் ஒன்பது இலத்திரனியல் கிராமங்களை உருவாக்க மத்திய மாகாண சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள கிராமங்களுக்கு 2012 ஆம் ஆண்டு மாகாண சபை வரவு- செலவுத்திட்டத்தின் மூலம் தலா ஐம்பது லட்சம் ரூபா வீதம் நிதியொதுக்கீடு செய்யவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் வெலம்பொடை, விதுலிபுர, வலப்பனை, பன்விலை, மஹலகொடுவ, களுக்தென்ன, அங்கும்புர ஆகிய பகுதிகளில் ஆரம்ப கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த இலத்திரனியல் கிராம அபிவிருத்தித் திட்டம், பிரதேச பாடசாலைகளை மையப்படுத்தி பிரதேச மக்களைத் தொடர்புபடுத்தும் வகையில் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மொனராகலையில் மிளகுச் செய்கை

தியத்தலாவை, ஜன. 18

மொனராகலை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 44 ஹெக்ரெயர் நிலத்தில் மிளகு பயிரிட ஏற்றுமதி அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இந்த மாவட்டத்தில் பின் தங்கிய மேட்டு நிலங்களில் மிளகு பயிரிட்டு, ஏற்றுமதிக் கிராமங்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ் பிபிலை, மெதகம, நன்னப்புராவ, மடல்கும்புர, மொனராகலை, மடுல்ல ஆகிய கிராமங்களில் 44 ஹெக்ரெயர் காணி அடையாளமிடப்பட்டுள்ளது. (ச)

# மூவர் காயம்

நுவரெலியா,ஜன.18

இலங்கைஅஞ்சல்திணைக்களத்துக்குச் சொந்தமான அஞ்சல் பொதிகளை ஏற்றிச் செல்லும் வான் ஒன்று நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானதில் வானில் பயணித்த மூவர் படுகாயமடைந்துள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vacancy



- Advertisment Manager
- Advertisment Collector

(Basic + Commision)

விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிவரக் கோவையை மின்னஞ்சலில் 21.01.2012 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

**Online Uthayan**

359, Kasthuriyar Road, Jaffna

T.P 0215672222

Email : it@uthayan.com


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



17.12.2011 அன்று கொழும்பு ஜோன் டீ சில்வா ஞாபகார்த்த கலையரங்கில் நடைபெற்ற அரச விருது வழங்கும் விழாவில் இலக்கியத்திற்காக கலாபூஷண விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட எம் மதிப்பிற்குரிய

**கே. ஆர். டேவிட்**

அவர்களை வாழ்த்தி அவர் மேலும் பல சிறப்புக்களைப் பெற்றிட ஆசிக்கின்றோம்.

வாழ்த்துவோர்
வி. எல்விஸ் பிறஸ்லி
இரவிந்திரன் - கவுந்தினி உமோஸ் - மரீனா.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை தங்கம்மா

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல 695, இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது சாந்தசோலை வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தங் கம்மா நேற்று முன்தினம் (16.01.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலம்சென்றவர்களான ஆறுமுகம்- சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலம்சென்றவர்களான சோமசுந்தரம், கணபதிப் பிள்ளை, மனோன்மணி, செல்லம்மா, கனகாம்பிகை மற்றும் கிருஸ்ண சாமி, பராசக்தி, சங்கரலிங்கம், தருமலிங்கம் ஆகியோரின் சகோதரியும் கனகராசா, கமலவேணி, செல்வராசா, காலஞ்சென்றவர்களான விஜய ரெத்தினம், அன்னசோதி மற்றும் யோகம்மா, மங்கையற்கரசி, நாக லட்சுமி, கேதீஸ்வரராசா, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும், பராசக்தி, காலஞ்சென்ற குணரெத்தினம், தருமராசா மற்றும் மகேஸ்வரி, இராஜராஜேஸ்வரி, செல்லத்துரை, மகேந்திரன், சுமித்திரா, ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2012) புதன்கிழமை மாலை 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாந்தசோலை மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

## மேர்வினின் அடாவடிகள் தொடர்பில் வாக்குமூலம்

கொழும்பு,ஜன.18

அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கும், களனி பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் இடையிலான மோதல் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு களனிப் பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர்களிடம் பொலிஸார் வாக்கு மூலங்களை பதிவு செய்யத் தீர்மானித்துள்ளனர்.

கப்பம் கோரல், மோசடி, பாதாள உலகத் தொடர்பு, கடத்தல் உள்ளிட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்திக் கொண்டுள்ளனர்.

களனி சம்பவம் குறித்து அமைச்சர் பசில் ராஜபக்ஷ விசாரணை நடத்தவுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர் பில் விசாரணை நடத்தி ஒழுக்காற்று குழுவினரு டன் அவர் பேச்சை நடத் தவுள்ளார்.

அமைச்சர் தரப்பும், பிரதேச சபைத் தலைவரின் தரப்பும் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோனிடம் நேரடியாக முறைப்பாடு செய்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (ச)

## அதிவேக நெடுஞ்சாலையில் கல் வீச்சு 57 வாகனங்கள் சேதம்

கொழும்பு,ஜன.18

தெற்கு அதிவேக நெடுஞ் சாலையில் கஹதுடுவ எனும் இடத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கல்வீச்சுக்களினால் நான்கு வாகனங்கள் சேதமடைந் துள்ளதாக பொலிஸ் ஊட கப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இந்த நெடுஞ்சாலை யில் பயணிக்கும் வாகனங் கள் மீது கற்களை வீச வேண்டாம் என்று பொலிஸ் எச்சரித்த அதே தினத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

இந்த நெடுஞ்சாலை திறக்கப்பட்ட பின் இத்த கைய கல்வீச்சுகளால் 57 வாகனங்கள் சேதமடைந் ததுடன் 18 பேர் காயம டைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற் றால் 1969 எனும் தொலைபேசி இலக்கத் தின் மூலம் உடனடியாகத் தகவல் தருமாறு போக்கு வரத்துப் பொலிஸார் கோரி யுள்ளனர். (ச)

### கிளாலியில் கூட்டுறவுக் கிளை

கிளாலிப் பகுதியில் மீள் குடியமரும் மக்களின் நலன்கருதி பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் தற்காலிகக் கிளையினை ஆரம்பித்துள்ளனர்.

கிளாலிப் பகுதியில் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டு வருவதால் வெகுவிரைவில் சங்கம் நிரந்தரமாக இயங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

### பிக்குகளுக்கு தனி நீதிமன்று; அமைச்சரவை நிராகரிப்பு

பௌத்த பிக்குகளுக்கு தனியான நீதிமன்றங்களை அமைக்க வேண்டியதில்லை என்று அமைச்சரவை தீர்மா னித்துள்ளது.

மதகுருமார் தொடர்பு பட்ட வழக்குகளையும் சாதாரண நீதிமன் றங்களில் விசா ரணை செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

பௌத்த பிக் குகளுக்கு தனியான நீதிமன்றம் ஒன்றை அமைக்க வேண் டும் என்று பிரதமர் டி.எம். ஜயரட்ண யோசனை ஒன்றை முன் வைத்திருந் தார். எனினும் இந்த யோசனை அமைச் சரவை அங்கீகாரத் துக்காக சமர்ப்பிக் கப் பட்ட போது அவ்வாறு அமைச் சரவை நிராகரித் துள்ளது. (ச)




உங்கள் வீட்டுத் திருமணத்தை
சரவணாவின்
பட்டுச்சேலைகளால் அலங்கரியுங்கள்

**சரவணா ரெக்ஸ்**



526,529, பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி), யாழ்ப்பாணம். தொ.பேசி: 021 222 1723.

770, 772, கே.கே.எஸ்.வீதி, (தட்டாதெருச் சந்தி), யாழ்ப்பாணம். தொ.பேசி: 021 222 0421. பக்ஸ்: 222 0421.

இல.210 ... வீதி, ... தொ.பேசி: 021 226 2992.


## இதய அஞ்சலி



பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் வளர்ச்சியில் பக்கத்துணையாய் நின்று உதவிய பளை, அல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் செல்லப்பா கயிலாயபிள்ளை**

அவர்களின் மறைவுக்கு எமது இதயபூர்வ அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவை, கண்டி வீதி, முல்லையடி, பளை.

தலைவர் செயற்குழு உறுப்பினர்கள் போதனாசிரியர்கள், ஊழியர்கள்.

## கண்ணீர்க் காவியம்

### கனகராயர் சிவபாலன்



பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தான அன்னதான சபைத் தலைவரும் திருமண மண்டப நிறுவுனரும் தேர்த்திருவிழா பங்கு உபயகாரருமாகிய கனகராயர் சிவபாலன் அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்புடன் அவரது ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல கற்பக விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

பன்னாலை, தெல்லிப்பழை.

ம. மகேந்திரசர்மா, ஆதீன கர்த்தா, வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்.

## மரண அறிவித்தல்கள்

### ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை



புலோப்பளை மேற்கு, பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை நேற்று (17.01.2012) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காணிக்கைமுத்து அவர்களின் அன்புக் கணவரும் திருமதி உ. யூட் வினித்தா (ஆசிரியை, யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), ஹென்றி (ஜேர்மனி), காலஞ்சென்ற மெரியாஸ் (இ.போ.ச. சாரதி), இம்மானுவேல் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயகுமாரன் (அதிபர், யா/கச்சாய் அ.த.க. பாடசாலை), சுவேந்தினி ஆகியோரின் அன்பு மாமனும் அபின்சா, தேனுகானி, அனோஜன், கஜித், சங்கீர்த்தன், சாந்துஸ், யுனைஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பளை புனித மரியன்னை தேவாலயத்தில் இன்று (18.01.2012) புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு இடம்பெற்று மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
புலோப்பளை மேற்கு, பளை.
க. உதயகுமாரன் (அதிபர், யா/ கச்சாய் அ.த.க பாடசாலை)

### சதாசிவம் சந்திரேஸ்வரன்

காரைநகர், எண்ணாங்கப்பிட்டி சல்லையைப் பிறப்பிடமாகவும் வந்தாறு மூலையை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கர் அரிசி ஆலையின் உரிமையாளரான சதாசிவம் சந்திரேஸ்வரன் நேற்று முன்தினம் (16.01.2012) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், வசந்தாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி-சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், மல்லிகா, தவமலர், சண்முகராஜா (காரைநகர் உ.அ.அ. பனிமனை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தியாகராஜா, சிவலிங்ககுமார், புஸ்பலதா, வரதராஜன், செல்வராஜா, காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் விஜியராணி (கனடா), சறோஜாதேவி, கிருஷ்ணரூபி, சிவகுமார், விக்னேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், நமேஸ் (சுவிஸ்), சுஜிதா, விஜித்தா, சிவராஜா, கஜன், சுசீலா, பகிதரன், பிரியங்கா ஆகியோரின் அன்பு மாமனும், அனோஜா, லங்கஜன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 9.00 மணிக்கு வந்தாறு மூலை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கர் அரிசி ஆலை, வந்தாறு மூலை, மட்டக்களப்பு.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தென்கொரியக் கப்பலில் தீ 5 பேர் உடல் கருகிச் சாவு



சியோல்,ஜன.18

தென்கொரியாவில் சரக்குக் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தில் கப்பல் இரண்டாக உடைந்துள்ளது. இந்தச் சம்பவத்தில் ஐந்து பேர் பலியாகினர்.

தென் கொரியாவின் வடபகுதியில் இன்ஷியோன் துறைமுகத்தில் இருந்து 32 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஜவோல் தீவுக்கு அருகில் நேற்று தென் கொரியாவைச் சேர்ந்த ஒரு எண்ணெய் சரக்குக் கப்பலில் திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் கப்பலில் இருந்த ஒரு மியன்மார் நாட்டவர், இரு தென் கொரியாவினர் உள்ளிட்ட ஐந்து பேர் தீயில் கருகிப் பலியாகினர். எண்ணெய் வைக்கப்பட்ட பகுதியில் ஏற்பட்ட வாயுக் கசிவினால் இந்தத் தீ விபத்து நிகழ்ந்துள்ளது. தீ விபத்தை அடுத்து ஏற்பட்ட அதிர்வில், கப்பல் இரண்டாக உடைந்தது. இதுகுறித்து தென் கொரிய அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முஷாரப் தலைக்கு ரூபா 10 கோடி

**முஷாரப்பை கொலை செய்யும் நபருக்கு, 10லட்சம் ரூபா ரொக்கப் பணமும் 10கோடி ரூபா மதிப்புடைய பங்களாவும் பரிசாக அளிக்கப்படும். மேலும் அந்த நபருக்கு முழுப் பாதுகாப்பும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது**



இஸ்லாமாபாத், ஜன.18

இந்த மாத இறுதியில், பாகிஸ்தானுக்கு அதன் முன்னாள் அதிபர், பர்வேஸ் முஷாரப் வரப்போவதாக அறிவித்துள்ள நிலையில், அவரது தலைக்கு 10 கோடியே 10 லட்சம் ரூபா பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. பலுசிஸ்தான் தலைவர் அக்பர் புக்தி கட்சி பாகிஸ்தானில் சுயாட்சி அல்லது பிரிவினை கோரி நீண்ட காலமாக, பலுசிஸ்தான் போராட்டம் நடத்தி வருகிறது. அந்த மாகாண முதல் வரும், பாகிஸ்தானின் முன்னாள் உள்துறை இணை அமைச்சருமான, நவாப் அக்பர் கான் புக்தி, இந்தப் போராட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

கடந்த 2006 இல், அப்போதைய அதிபர் முஷாரப்பின் உத்தரவின்படி மேற்கொள்ளப்பட்ட ராணுவ நடவடிக்கையில், பலுசிஸ்தானில், இவரும் வேறு சிலரும் கொல்லப்பட்டனர். இதற்கிடையில், இந்த மாதம் 27 முதல் 30 ஆம் திகதிக்குள், பாகிஸ்தான் திரும்பப் போவதாக முன்னாள் அதிபர், முஷாரப் அறிவித்துள்ளார். இதுகுறித்து, புக்தியின் பேரன் ஷாஜெய்ன் புக்தி நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில், முஷாரப்பை கொலை செய்யும் நபருக்கு, 10 லட்ச ரூபா ரொக்கப் பணமும், 10 கோடி ரூபா மதிப்புடைய பங்களாவும் பரிசாக அளிக்கப்படும். மேலும், அந்த நபருக்கு முழுப் பாதுகாப்பும் வழங்கப்படும் என அறிவித்தார்.

மேலும் அவர், எனது தாத்தா மட்டுமல்லாமல், லால் மசூதியில் இருந்த நூற்றுக்கணக்கான அப்பாவிகளையும், முஷாரப்கொன்று குவித்துள்ளார். நாடு திரும்பும் போது, அவர் அரசால் கைது செய்யப்படாவிடில், மோசமான விளைவுகள் ஏற்படும் எனவும் எச்சரித்தார். முஷாரப் நாடு திரும்பும் பட்சத்தில், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனசிர் புட்டோ கொலை வழக்குத் தொடர்பாக, கைது செய்யப்படுவார் என, உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ந)

## தலிபான் தலைவர் சாவு



தாரிக் இதலிபான் என்ற பாகிஸ்தானி தலிபான் தீவிரவாத அமைப்பின் தலைவர் ஹக்கீமுல்லா மெத், அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதலில் பலியானார் என தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், இதை அந்த அமைப்பு மறுத்துள்ளது.

பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு மிகப் பெரும் சவாலாக விளங்கும் பாகிஸ்தானி தலிபான் அமைப்பின் தலைவர் ஹக்கீமுல்லா மெத், கடந்த 12ஆம் திகதி, வடக்கு வஜிரிஸ்தானின் டட்டாகெல் என்ற பகுதியில் நடந்த அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதலில் பலியானார் என அமெரிக்க அதிகாரிகள் சிலர் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தனர்.

ஆப்கன் எல்லையை ஒட்டிய அந்தப் பகுதிக்கு அவர் வாகனம் ஒன்றில் சென்று கொண்டிருந்த போது கொல்லப்பட்டதாக, தலிபான் அமைப்பினர் தந்தியில்லா வானொலி மூலம் பேசிக் கொண்டதை, இடைமறித்து ஒட்டுக் கேட்டதாக அமெரிக்க அதிகாரிகள் கூறினர். ஆனால், இதுகுறித்து பாகிஸ்தான் தரப்பில் அதிகாரபூர்வத் தகவல் எதுவும் வெளியாகவில்லை.

இந்த நிலையில் பாகிஸ்தானி தலிபான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் எசனுல்லா எசன் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,சுமெத் பலியானதாக வெளியான செய்தி தவறானது. அவர் எங்கிருக்கிறார் என்பதைக் கண்டறிய கிளப்பி விடப்பட்ட புரளிகள் இவை எனத் தெரிவித்தார்.



ருமோனியாவிலும் அரசுக்கெதிரான போராட்டங்கள் வலுப்பெற்றுள்ளன. மக்களுக்கும்- கலகம் அடக்கும் படையினருக்கும் இடையே கடும் மோதல் வெடித்துள்ளது. இதனால் அங்கு அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டு சோதனை நடவடிக்கைகளும் அதிகரிக்கப் பட்டுள்ளன.

## ஈராக்கில் கார்க் குண்டு; குழந்தைகள் உட்பட 8 பேர் பலி

ஈராக்கில் ஷியா முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் மோசுல் நகரத்தில் உள்ள அகதிகள் முகாமில் நேற்று காரில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 8 பேர் பலியாகியுள்ளனர்.

பாக்தாத்தின் வடக்கே 390 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள மோசுல் நகரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதில் 4 பெண்கள் மற்றும் 3 குழந்தைகள் உட்பட 8 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

மேலும் 4 பேர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை மோசுலில் உள்ள ஹம்தானியா மருத்துவமனையின் முகாமையாளர் லலித் ஹப்பாவும், பொலிஸாரும் தெரிவித்துள்ளனர். இந்த நகரம் பாக்கிஸ்தானில் இருந்து 390 கிலோமீற்றரில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஒபாமா வந்ததால் 'ரென்ஷன்'

லண்டன், ஜன.18

பாடசாலை விழாவில் பங்கேற்க அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா வருவதை அவரது குழந்தைகள் விரும்புவதில்லை என்று மிஷெல் ஒபாமா தெரிவித்துள்ளார். ஒபாமாவின் மகள்கள் மலியா (வயது-13) மற்றும் சாஷா (வயது-8). இவர்கள் படிக்கும் பாடசாலையில் நடக்கும் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் உட்பட ஏனைய நிகழ்ச்சிகளில் பங்கேற்க ஒபாமா வருவதை மலியா, சாஷா விரும்புவதில்லை. அதிபர் என்பதால் ஒபாமா வருகையொட்டி பாதுகாப்பு கெடுபிடி, வாகனங்கள் அணிவகுப்பு என பள்ளியே பரபரப்பாகிறது. அத்துடன் அதிபர் முன் நடக்கும் ஆடல், பாடல் போன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு சிறு பதற்றம் ஏற்படுகிறது. இதனாலேயே அவர்கள் விரும்புவதில்லை என்று மிஷெல் தெரிவித்தார். (ந)

## பிரிட்டன் –ஸ்கொட்லாந்து தலைவர்கள் சந்திப்பு

ஸ்கொட்லாந்து, ஜன.18

ஸ்கொட்லாந்தின் விடுதலைக்காக நாடாளுமன்றத்தில் பொது வாக்கெடுப்பு நிகழ்த்துவது குறித்துஸ்கொட்லாந்து பிரிட்டன் நாட்டுத் தலைவர்களும் சந்திக்க மறுத்து வந்த நிலையில் இப்போது இன்னும் சில நாள்களில் இவர்களின் சந்திப்பு நிகழும் என்று பிரிட்டிஷ் பிரதமர் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஸ்கொட்லாந்தின் முதலமைச்சர் அலெக்ஸ் சால்மண்ட் பொது வாக்கெடுப்பு நியாயமாகவும், முடிவெடுக்கும் விதமாகவும் நடைபெறுவதற்குத் தேவையான சட்ட ரீதியான அதிகாரம் அதற்கு வழங்கப்படவேண்டும் என்றார்.

ஸ்கோட்லாந்தின் நாடாளுமன்ற உறுப்பினரான மைக்கேல் மூர், ஸ்கை நியூசுக்கு அளித்த பேட்டியில் இந்தப் பிரச்சினை குறித்து இன்னும் சில விடை தெரியாத வினாக்கள் இருப்பதாகத் தெரிவித்தார். இருந்தாலும் பிரிட்டன் அரசின் விருப்பத்திற்கேற்ப இந்த வாக்கெடுப்பை நடத்துவோம் என்றார்.

விடுதலை கொடுக்கத் துடிக்கும் பிரிட்டனின் செய்தித் தொடர்பாளர், இது ஒரு வரவேற்கத் தகுந்த மேம்பாடு, உண்மையான வளர்ச்சி என்று பாராட்டினார். கமரூன், சால்மண்டைச் சந்திக்க ஆவலோடு இருப்பதாகத் தெரிவித்தார். ஏக்கத்துடன் தான் கட்சியுடன் வாக்கெடுப்புக்கான ஏற்பாடுகளைகலந்தாலோசித்த பின்புதலைவர்களின் சந்திப்பு நிகழும் என்றார்.பிரிட்டன் பிரதமர் கமரூன் வாக்கெடுப்பு முயன்றவரை சீக்கிரமாக நடத்தப்பட வேண்டும் என்கிறார். ஆனால் ஸ்கொட்லாந்தின் சால்மண்ட் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு வரை காத்திருக்க வேண்டும் என்கிறார்.

## அந்தாட்டிக்காவில் நில நடுக்கம்



கோரோனேசன் தீவு, ஜன.18

பனி படர்ந்த அந்தாட்டிகாவில் நேற்று முன்தினம் காலை கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. தென் அமெரிக்காவின் தெற்கு பகுதியில் உள்ள கோரோனேசன் தீவுக்கும், பால்மர் ஸ்டேசனுக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவு கோலில் 6.6 ஆக இந்த நிலநடுக்கம் பதிவானது.

இதனையடுத்து சிறிய அளவில் சுனாமி ஏற்படும் என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது. இதனால் அந்தாட்டிக்கா கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. (ந)

## கருத்தரங்கில் பரவிய தொற்றுநோய்

கனடாவில் விக்டோரியா மாநிலத்தில் மாணவப் பத்திரிகையாளர் நடத்திய கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களுக்குத் திடீரென்று தொற்றுநோய் தாக்கியுள்ளது. இவர்களுக்கு வாந்தி, வயிற்றுப்போக்கு, தலைவலி மற்றும் தசையிறுக்கம் என்பன ஏற்பட்டன. உள்ளானவர்கள் தத்தம் அறைகளிலேயே தங்கியிருக்குமாறு தனிமைப்படுத்தப்பட்டனர்.

கனடாவில் பல்கலைக் கழக ஆண்டுக் கருத்தரங்கு ஹார்பர் டவர்ஸ் உணவு விடுதியில் நடந்தது. இதில் கலந்து கொண்ட 360 பேரில் 60 பேருக்கு நோய்த்தொற்று ஏற்பட்டது.சி.பி.சி செய்திக்கு எம்மா கோட்மேர் தெரிவித்தார். இவரும் பேராளராக வந்து நோய்த்தொற்றுக்கு ஆளானார். மருத்துவர்கள் உணவுவிடுதிக்கு வந்து சிகிச்சை அளிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜினாமாச் செய்யத் தயார் பாகிஸ்தான் பிரதமர் அறிவிப்பு

இஸ்லாமாபாத்,ஜன.18

பாகிஸ்தான் அதிபர் மீதான ஊழல் வழக்குகளைத் தொடராமல் நீதிமன்றத்தை அவமதித்ததாக 19 ஆம் திகதி நேரில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டு பிரதமர் கிலானிக்கு உச்ச நீதிமன்றம் 'நோட்டீஸ்' அனுப்பியுள்ளது. இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் தனது விளக்கம் ஏற்கப்படாவிடில் பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்யத் தயார் என்று கிலானி அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் அதிபர் சர்தாரி உட்படப் பல முக்கிய பிரமுகர்கள் மீது ஹவாலா ஊழல் வழக்குகள் தொடரப்பட்டன. அவற்றின் மீது முன்னாள் அதிபர் முஷாரப் பொது மன்னிப்பு அளித்து உத்தரவிட்டார். அதை எதிர்த்து அந்தநாட்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அதை விசாரித்த நீதிபதிகள், வழக்குகளை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று 2009 ஆம் ஆண்டு அரசுக்கு அறிவுறுத்தியது. எனினும் அதிபர் சர்தாரி மீதான வழக்கைத் தொடங்காமல் பாகிஸ்தான் அரசு கிடப்பில் போட்டு வந்தது. இதுதொடர்பான பொது நலன் மனு மீது வழக்கை விசாரிக்குமாறு அரசுக்கு உச்ச நீதிமன்றம் பலமுறை எச்சரிக்கை விடுத்தது. எனினும் அரசு கண்டுகொள்ளவில்லை.

இதுதொடர்பான வழக்கை கடந்த வாரம் விசாரித்த உச்ச நீதிமன்றம், அதிபர் சர்தாரி உட்பட அதிகாரமிக்கவர்கள் மீதான வழக்கை உடனடியாக மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று கூறி விசாரணையை 16ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. இந்த நிலையில், உச்ச நீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் முன்னிலையில் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது.




அப்போது நீதிபதி நசீர் அல் முல்க் கூறுகையில், இந்த நீதிமன்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்தத் தவறியதற்காக பிரதமர் கிலானி மீது நீதிமன்ற அவமதிப்பு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிடுகிறோம். இது பற்றி அவர் 19ஆம் திகதி நீதிமன்றத்தில் நேரில் வந்து விளக்கம் அளிக்க வேண்டும் என்றார்.

> ஆளும் கூட்டணிக் கட்சியினரும் தனது பாகிஸ்தான் மக்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் எனது விளக்கத்தை ஏற்காவிட்டால் உடனடியாக ராஜினாமா செய்யத் தயார்

இதனையடுத்து நாடாளுமன்றத்தில் இதுபற்றி விளக்குவதாகவும், ஆளும் கூட்டணிக் கட்சியினரும் பாகிஸ்தான் மக்கள் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதை ஏற்காவிட்டால் உடனடியாக ராஜினாமாச் செய்யத் தயார் என்றும் கிலானி தெரிவித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந)

## 6 மாடிக் கட்டடம் வீழ்ந்து 13 பேர் சாவு



அரபு நாடுகளில் ஒன்றான லெபனானில் 6 மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

லெபனான் தலைநகர் பெய்ரூட் பகுதியில் உள்ள 6 மாடிக் கட்டடம் ஒன்றே இடிந்து வீழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 13 பேர் பலியாகி உள்ளனர். மேலும் 12 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இவர்கள் அங்குள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவர்களில் 7 பேர் வெளிநாட்டுப் பணியாளர்கள் என்று லெபனான் தொலைக்காட்சிகள் செய்தி வெளியிட்டு வருகின்றன. இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ந)

## மூழ்கிய கப்பலில் இருந்து சுவிஸ் பயணிகள் இருவர் மீட்பு

இத்தாலிப் பயணக் கப்பல் கடலில் மூழ்கியதில் குறைந்தது இரண்டு சுவிஸ் பயணிகள் மட்டும் மீட்கப்பட்டுள்ளனர் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்பு வீடு திரும்பியுள்ளனர்.

சுவிஸ் பயணிகள் 69 பேர் அந்தக் கப்பலில் பயணம் செய்ததாகத் தகவல் இருக்கிறது. ஆனால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இந்த இருவரைத் தவிர மற்றவர்கள் நிலை என்ன என்பது தெரியவில்லை என்று அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

உரோம் நகரத்தில் உள்ள சுவிஸ் தூதரகமும் மிலன் நகரத்தில் உள்ள தூதரகமும் இவர்கள் பற்றிய தகவல்களை அறிவதில் ஆர்வமாகச் செயற்படுகின்றன.

4000 பேர் பயணித்த கோஸ்டோ கன்கார்டியா என்ற கப்பல் கவிழ்ந்ததில் ஐந்துபேர் உயிரிழந்தனர். 60 பேர் காயமுற்றனர். பெருமளவானோர் மீட்கப்பட்டனர். காணாமற்போன சிலரைப் பற்றி தகவல்கள் இன்னும் கிடைக்கவில்லை. தற்போது கப்பலின் கப்டன் கைது செய்யப்பட்டுள்ளார். (ந)

## சோமாலியாவுக்கு உணவு இனி அனுப்பப்பட மாட்டாது

சோமாலியாவின் வட பகுதியிலும், தென்பகுதியிலும் பசியால் வாடிய 1.1 மில்லியன் மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு உணவு வழங்கி உதவி புரிந்தது. இவ்வாறான உதவிகளுக்கு அல் ஷபாப் தீவிரவாதிகள் இடையூறு செய்வதால் இனி உணவு அனுப்பப் போவதில்லை என்று சர்வதேசக் குழு முடிவெடுத்துள்ளது.

இதுகுறித்து குழுவின் தலைவரான பேட்ரிக் வியால் கூறுகையில், பசியால் வாடும் இளஞ்சிறார்களுக்குத் தேவையான உணவைக் கொண்டு செல்ல எவ்விதத் தடையும் ஏற்படுத்தக்கூடாது, தடையற்ற நிலை உருவாகும் வரை உணவு வழங்கலைத் தொடர முடியாது- என்றார்.

சோமாலியாவில் தினமும் பத்துக் குழந்தைகளில் ஒரு குழந்தை பட்டினியால் இறக்கும் அவலநிலை காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (ந)


### 45 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 06.12.2011 அன்று அகால மரணமடைந்த எமது அன்பு மகள்

**நேசராசா (தேவன்) மீரா**

அவர்களின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டு பலவழிகளிலும் உதவி வழங்கியவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு நாளை (19.01.2012) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் அதனைத் தொடர்ந்து எமதில்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்)

கிருஸ்ணர் கோவிலடி,
சுதுமலை தெற்கு, சாவற்கட்டு.

நேசராசா (தேவன்) தந்தை,
வினோதா, பாரத், பிரசாந்,
றஜித் (அன்புச் சகோதரர்கள்)

(13182)(2-7)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
16-07-1936

மறைவு
21-12-2011



**அமரர் சின்னத்தம்பி குருநாதபிள்ளை**

கடந்த 21.12.2011 புதன்கிழமை அமரத்துவமடைந்த எமது தந்தையின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். அவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, தந்தி மூலம் இரங்கல் தெரிவித்தவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (*18-01-2012*) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் கீரிமலை நகுலேஸ்வரம் தீர்த்தக் கரையில் இடம்பெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், *20-01-2012* வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இல.61,
உடுவில் வீதி,
மானிப்பாய்.

புதல்வர்கள்:
கு.திருச்செல்வம்,
கு.எழிற்செல்வன் மற்றும்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### விற்பனைக்கு

இணுவிலில் இயங்கும் அழகுக்கலைநிலையம் ஒன்றில் உள்ள அனைத்துவிதமான பாவனைப் பொருள்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0771227231

### உடன் தேவை

யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில் கணினியில் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்யக்கூடியவர்கள் உடன் தேவை மற்றும் டிஜிற்றல் போட்டோ கொப்பி இயந்திரம் இயக்குவதற்கும் / பழகவிரும்புவர்களும் உடன் தேவை.

தொடர்பு: 078 5030774, 077 9522444

### சங்கானை உருத்திரா சன சமூக நிலையத்தினரால் பொங்கலன்று நடத்தப்பட்ட அதிர்ஸ்ட இலாவச் சீட்டு வெற்றியாளர்கள் இலக்கங்கள்

*1ஆம் பரிசு - 4507*
*2ஆம் பரிசு - 1152*
*3ஆம் பரிசு - 2682*

*ஆறுதல் பரிசுகள்*
*1081, 737, 617, 3846, 2852, 4113, 3885, 2324, 471, 4434.*

K. சபேசன் (தலைவர்)

### IT MARKETING EXECUTIVE

Applications should be highly Motivated. Persons in the 20 – 30 years age group Preferably with an A/L Qualifications. The Candidate should be a go-getter and Possess excellent PR and communication Skills a proven track record of Sales & Marketing in a relevant field for at least One Year.

- The candidate must be required motor Bike.
- Interview in epixcell Office at 9.00 to 2.00pm on January 18th & 19th

94A, Kannathiddi Road, Jaffna.
T.P. 021 222 4780

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



விவசாய போதனாசிரியராக சேவையாற்றும் திரு. கா. சிறீரஞ்சன் முல்லை மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வெளிக்கள அலுவலராக கடமைபுரியும் திருமதி யோகாம்பாள் சிறிரஞ்சன் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வன்

**சி. தகீசன்**

2011 ஆம் ஆண்டில் இடம்பெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மருத்துவபீடத்துக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாவதாக தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.

மனித உயிர்களைக் காக்கும் இவரது எதிர்கால இலக்கு மருத்துவ உலகில் சிறந்தோங்க இவரைப் பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

சி.க.கூ. சங்கங்களின் அங்கத்தவர்கள் / நிர்வாகிகள்
சி.க.கூ. சமாசப் பணியாளர்கள், சி.க.கூ. சமாசப் பணிப்பாளர் சபை,
முல். மாவட்ட சி.க.கூ. சமாசம், வித்தியாபுரம், ஒட்டுசுட்டான்.

(13111) (45-6)

### நான்காம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 14 ★ 02 ★ 1953



உதிர்வு 01 ★ 02 ★ 2008

**அமரர் கிறிஸ்தோப்பர் கொலின் தேவராஜா**
(வரி மேற்பார்வையாளர், நல்லூர் பிரதேச சபை)

திதி: அபரபக்க தசமி

எங்கள் அன்பு அப்பாவே
ஆண்டு நான்கு கடந்தாலும்
ஆறாது எம் துயரம்
எம்மை விட்டுப் பிரிந்தாலும்
எங்கள் உயிர் இருக்கும்வரை
உங்கள் நினைவுகளுடன் வாழ்வோம்.

"திருப்பதி"
கே.கே.எஸ்.வீதி, இணுவில். (13172)(2-7) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசுக்கு எதிராக ராணுவத் தளபதி வழக்கு

டில்லி, ஜன.18

பிறந்த திகதி பிரச்சினையில் இந்திய ராணுவத்தின் தலைமைத் தளபதி வி.கே.சிங், இந்திய அரசை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார். ராணுவத் தளபதி ஒருவர் தனது பதவிக் காலத்தில், மத்திய அரசை நீதிமன்றத்துக்கு இழுத்திருப்பது இந்தியாவில் இதுவே முதல் முறையாகும்.



ராணுவத் தளபதி ஒருவர் தனது பதவிக் காலத்தில், மத்திய அரசை நீதிமன்றத்துக்கு இழுத்திருப்பது இந்தியாவில் இதுவே முதல் முறையாகும்.

ராணுவத் தலைமைத் தளபதியாக பதவி வகித்து வருபவர், வி.கே.சிங் என்ற விஜயகுமார் சிங்கின் மெட்ரிகுலேஷன் சான்றிதழில், அவரது பிறந்த தேதி 1951 ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், ராணுவப் பணிக்காக அவர் மத்திய பணியாளர் தேர்வு ஆணையமான யு.பி.எஸ்.சி. நடத்திய ராணுவ பயிற்சிக் கல்லூரித் தேர்வு எழுதியபோது வி.கே.சிங்கின் பிறந்த திகதி 10.05. 1950 ஆம் ஆண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திகதியின்படி கணக்கிட்டால் எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதி வி.கே. சிங் ஓய்வுபெற வேண்டும். ஆனால், தனது பிறந்த திகதி 1951 ஆம் ஆண்டுதான் என்று கூறுகிறார் சிங்.

இந்தப் பிரச்சினையில், கடந்த சில மாதங்களாக அவருக்கும், மத்திய அரசுக்கும் இடையே இழுபறி நீடித்து வந்தது. தனது மெட்ரிகுலேஷன் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பிறந்த திகதியைத்தான் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரி, ராணுவ அமைச்சகத்துக்கு வி.கே. சிங் இரு முறை சட்டரீதியாக மனு அனுப்பியிருந்தார்.

ஆனால், பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோணி, அண்மையில் வி.கே.சிங்கின் கோரிக்கையை நிராகரித்து விட்டார். மத்திய அரசின் இந்த முடிவை எதிர்த்து தலைமை ராணுவத் தளபதி வி.கே.சிங் நேற்று உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார். அவர் சார்பில் மூத்த சட்டத் தரணி யு.யு.லலித் இந்த மனுவை தாக்கல் செய்தார். (வ)

## சுப்பிரமணிய சுவாமியின் மனு நிராகரிப்பு

டில்லி,ஜன.18

மின்னணு வாக்கு இயந்திரம் தொடர்பாக ஜனதா கட்சி தலைவர் சுப்ரமணியசுவாமி தாக்கல் செய்த மனுவை டில்லி உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.

வாக்கு இயந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தலாம் என்பதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்று உயர் நீதிமன்றம் தனது உத்தரவில் கூறியுள்ளது. மேலும் இது தொடர்பாக தேர்தல் ஆணையம் ஆலோசனை செய்ய வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் தெரிவித்தது.

## பஸ் - வான் விபத்து 9 பேர் சாவு



தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் அருகே அரசு பஸ்ஸும் ஆம்னி வானும் மோதியதில் 9 பேர் உயிரிழந்தனர்.

திருநெல்வேலி தச்சநல்லூரைச் சேர்ந்த சரவணகுமார் மற்றும் அவருடைய குடும்பத்தினர் 8 பேர் ஒரு ஆம்னி வானில் திருச்செந்தூர்- திருநெல்வேலி வீதி ஊடாகப் பயணித்துக் கொண்டிருந்தனர்.

இந்த ஆம்னி வான் ஆதிச்ச நல்லூர் பஸ் நிறுத்தம் அருகே வந்த போது, விதியோரம் நடந்து சென்ற ஒரு பெண் மீது மோதி நிலை தடுமாறியது. அப்போது வானும் எதிரே திருநெல்வேலியில் இருந்து திருச்செந்தூர் நோக்கிச் சென்ற அரசு பஸ்ஸும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன.

மோதிய வேகத்தில் ஆம்னி வாகனம் நொறுங்கிய விபத்தில் ஆம்னி வாகனத்தில் இருந்த 8 பேர் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். (வ)

## ராகுல் சம்மதித்தால் அரசியலில் ஈடுபடுவேன் பிரியங்கா கருத்து



டில்லி, ஜன.17

ராகுல்காந்தி கேட்டுக் கொண்டால் தீவிர அரசியலில் ஈடுபடுவேன் என்று பிரியங்கா சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு அமேதி மற்றும் ரேபரேலியில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைக்கு அமேதி மற்றும் ரேபரேலியில் தேர்தல் பிரசாரம் செய்யவிருக்கிறேன். தீவிர அரசியலில் ஈடுபடுவது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை. ராகுல்காந்தி விரும்பினால் எதையும் செய்வேன் என்று அவர் தெரிவித்தார்.

பேரவைத் தேர்தலை முன்னிட்டு பல்வேறு மாநிலங்களில் சோனியா குடும்பத்தினர் பிரசாரம் செய்து வருகின்றனர். சோனியா உத்தரகண்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். பிரியங்காவும், ராகுலும் உத்தரப்பிரதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர். (வ)

## சோனியாவின் போஸ்டர் மீது கறுப்பு மை வீச்சு

டில்லி, ஜன.18

ராம்தேவ் மீது கறுப்பு மை வீசியதில் மிகுந்த கோபத்தில் இருந்த அவரது ஆதரவாளர்கள் நேற்று டில்லி காங்கிரஸ் தலைமையகத்துக்கு வெளியே இருந்த சோனியா காந்தியின் போஸ்டர் மீது கறுப்பு மையை வீசினர்.

மேலும் அவர்கள் காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியா காந்தி மற்றும் தலைவர்கள் ராகுல் காந்தி, திக்விஜய் சிங் ஆகியோருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

மதத் தலைவர்களை அவமானப்படுத்த யாரையும் விடமாட்டோம் என்றனர். இன்னும் சிலர் சோனியா பட போஸ்டரில் கருப்பு மை பாட்டில்களை எறிந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)



எம்.ஜி.ஆரின் 95 ஆவது பிறந்ததினமான நேற்று சென்னை அ.தி.மு.க. தலைமைக் கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், முதலமைச்சருமான ஜெயலலிதா கழக வளாகத்தில் உள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கு மலர்மாலை அணிவித்தார். (வ)

## அமைச்சரின் கருத்தால் கேரளாவில் சர்ச்சை

கோட்டயம், ஜன.18

கேரளாவில், முல்லை பெரியாறு அணை பலமாகத்தான் உள்ளது. இதனால் கேரளாவுக்கு ஆபத்து நிகழப் போவதில்லை என்று மத்திய அமைச்சர் ஒருவர் கூறிய கருத்தால், கேரளாவில் சர்ச்சை நிலவியுள்ளது.

115 வருட பழமையான முல்லைப் பெரியாறு அணை, தற்போது பாதுகாப்பாகவுள்ளது. கீழே விழுந்துவிடும் அளவுக்கு அது இல்லை என்று அவர் தெரிவித்திருந்த கருத்து இப்போது சர்ச்சையாகியுள்ளது. கேரளத்தின் ஆளும் கூட்டணியின் நேசக் கட்சியான கேரள காங்கிரஸ் (மணி), அணை எதிர்ப்பு குழு நடத்தவுள்ள வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து தனது முடிவை அறிவித்தது. அந்தக்கட்சியின் பி.சி.ஜார்ஜ் இதற்கான தனது முடிவைத் தெரிவித்தார்.

இது, ஆளும் கூட்டணியில் சிக்கலை ஏற்படுத்தும் என்று கேரள அரசியல் பிரமுகர்கள் கருதுகின்றனர். (வ)

# சீனாவும் இந்தியாவும் ஒன்றா? நீதிமன்றிடம் கூகுள் கேள்வி

சர்ச்சைக்குரிய தகவல்களை வலைத் தளங்களில் இருந்து நீக்க வேண்டும் என்று கூறுவது, இந்தியா போன்ற ஜனநாயக நாட்டுக்குப் பொருந்தாது. இந்தியா என்பது சீனா போன்ற கட்டுப்பாடுகள் மிக்க ஜனநாயகமற்ற நாடு அல்ல என்று கூகுள் இந்தியா நிறுவனம் தெரிவித் துள்ளது.

சில சமூக வலைத் தளங்களில் சர்ச்சைக்குரிய தகவல்கள் வெளியிடப்படுவதாகவும், இதுபோன்ற தகவல்களை வெளியிடுவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என்றும் முறைப்பாடு எழுந்தது.

21 சமூக வலைத் தளங்கள் மீது இது தொடர்பாக முறைப்பாடு தெரிவிக்கப் பட்டது. தடைவிதிக்கப் படும் இந்த விவகாரம் டில்லி உயர்நீதிமன்றத்துக்குச் சென்றது.

இந்த வழக்கு தொடர்பான கடந்த விசாரணையின் போது உச்ச நீதிமன்ற நீதிபதி சுரேஷ் கய்த் கூறுகையில்:

''சர்ச்சைக்குரிய தகவல்களை வெளியிடுவதைக் கட்டுப்படுத்துவதற்கான நடைமுறைகளை சமூக வலைத் தளங்கள் மேற்கொள்ளவேண்டும். இல்லையெனில், சீனாவைப் போல், இந்தியாவிலும் சமூக வலைத் தளங்களுக்கு தடை விதிக்கப்படும்' - என்றார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, கூகுள் இந்தியா தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி, என்.கே.கவுல் இந்த விவகாரம் பேச்சுரிமை மற்றும் கருத்துக் களை வெளியிடும் உரிமை குறித்த அரசியல் சட்டவிதி முறைகள் தொடர்புடையன. இந்தியா ஒரு ஜனநாயக நாடு. இங்கு பேச்சுரிமை உள்ளது. சீனா போன்ற கட்டுப்பாடுமிக்க ஜனநாயகமற்ற நாடல்ல இந்தியா. எனவே, தகவல் [illegible] தடை செய்ய முடியாது. கூகுள் இந்தியா என்பது ஒரு தேடு பொறியோ (சேர்ச் இன்ஜின்) அல்லது இணையதளங்களை உருவாக்கும் தளமோ அல்ல. இது அமெரிக்காவை மையமாக கொண்டு செயற்படும் கூகுள் நிறுவனத்தின் இந்திய பிரிவு. சட்டப்பூர்வமாக செயற்படக் கூடியது.

எனவே, கூகுள் இந்தியாவுக்கு எதிராக குற்ற நடவடிக்கைகள் எடுக்க முடியாது. இந்த விவகாரம் தொடர்பாக கூகுள் இந்தியா நிர்வாகிக்கு கீழ் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது. இதற்கு தடை விதிக்க வேண்டும். என்று என்.கே. கவுல் தன் வாதத்தின்போது தெரிவித்தார். (வ)

## தமிழகம் எங்கும் ஜல்லிக்கட்டுப் போட்டி



மதுரை, ஜன.18

உலகப் புகழ் பெற்ற அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டி நேற்றுக் காலை ஆரம்பமாகியது. தமிழகத்தின் பெரும்பான்மையான இடங்களில் ஆண்டு தோறும் தமிழர் திருநாளான பொங்கலைச் சிறப்பிக்கும் வகையில் நடைபெறும் ஜல்லிக்கட்டுப் போட்டி நடத்துவது பாரம்பரிய வழக்கம்.

முதலில் அலங்காநல்லூர் கோயில் காளை களமிறக்கப்பட்டது. மொத்தம் 400 காளைகள் பங்கேற்கும் இந்த போட்டியில் காளையை அடக்க சுமார் 500 இற்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் தயார்நிலையில் உள்ளனர். மாவட்ட ஆட்சியாளர்கள் முன்னிலையில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

உச்சநீதிமன்ற நிபந்தனைகளின்படி போட்டிகள் நடத்தப்பட்டு வருவதாகவும், அடிப்பட்ட வீரர்களை மருத்துவமனையில் சேர்க்க அம்புலன்ஸ்கள் தயாராக இருப்பதாகவும் மாவட்ட ஆட்சியாளர்கள் தெரிவித்தனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்கு தனிநாடு கோரி பொங்கலை தவிர்த்த சிறுத்தைகள்



ஈழத்தமிழர்களுக்கு தனித்தாயகம் கோரி பொங்கலை தவிர்த்து விடுதலைச் சிறுத்தைகள் உண்ணா நிலை அறப்போராட்டம் நடத்தினர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தை 2 ஆம் நாள் தலைவர் தொல்.திருமாவளவன் இன அழிப்பைத் தடுப்பதற்காகவும் ஈழத்தை மீட்பதற்காகவும் சாகும் வரை உண்ணாநிலை போராட்டத்தை மேற்கொண்டார்.

தொடர்ச்சியாக நான்கு நாள்கள் தொடர்ந்த உண்ணா நிலை போராட்டம் தமிழக அரசியல் தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க உண்ணாநிலை கைவிடப்பட்டது. கடந்த 2 ஆம் திகதி உண்ணா நிலை போராட்டத்தை நினைவு கூரும் வகையில் ஒவ்வொரு வருடமும் மறைமலைநகரில் காஞ்சி மாவட்ட துணைச் செயலாளர் கேது தென்னவன் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட விடுதலைச் சிறுத்தைகள் ஒரு நாள் உண்ணா நிலையில் போராட்டம் நடத்தினர்.

அதே போல் நேற்று ஈழத் தமிழர்களுக்கு தனித்தாயகம் கோரி மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தி ஒருநாள் உண்ணாநிலை அறப்போராட்டத்தை நடத்தினர். காலையில் காஞ்சி மாவட்டச் செயலாளர் உண்ணா நிலைப் போராட்டத்தை ஆரம்பித்து வைக்க மாநில நிர்வாகிகள் தா.பார் வேந்தன், இயக்குனர் சிபி சந்தர் கலந்துகொண்டு பேசினர். நிறைவாக தலைவரின் தனிச்செயலாளர் இளஞ் சேகுவேரா பழச்சாறு கொடுத்து உரையாற்றி முடித்து வைத்தார். (வ)

## தாக்குதலுக்குக் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜன.18

டெங்கு ஒழிப்பு நடவடிக்கைளில் ஈடுபட்டிருந்த வலி. வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சுகிர்தன் மற்றும் உறுப்பினர்கள் பொதுமக்கள் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர் நா.ஐங்கரன் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அவரது கண்டன அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்காக சேவையாற்றுவதும் மக்களுக்கு துன்பம் வரும்போது அவற்றை களைவதையும் நோக்காக கொண்டவர்கள். இந்த விடயம் சார்பாக அறிந்து உடனடியாக அந்த இடம் சென்ற தலைவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது மிலேச்சனமான ஒரு செயற்பாடு ஆகும். டெங்கு நோயை கட்டுப்படுத்துவது என்பது ஒரு தேசிய பிரச்சினை இந்த விடயத்தில் வேறுபாடு இன்றி அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

... தாக்குதல் நடத்தியமை மிலேச்சதனமான செயல்

இவ்வாறான கீழ்த்தரமான நாகரிகமற்ற செயற்பாடுகளை எதிர்கொள்ள முடியாத நிலைக்கு இட்டுச் செல்லும் என்பது வெளிப்படையான ஒன்றாகும். இந்தச் சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்வது மிக இன்றி அமையாதது என்றார். (ந)

## அதிகரிக்கும் சைக்கிள் திருட்டு

சாவகச்சேரி மாலை வேளை ஒரேநாளில் சபாரி மோ.சைக்கிளும் சைக்கிள்களும் திருட்டுப் போயுள்ளதால் வர்த்தகர்கள் மத்தியில் அதிர்ச்சி ஏற்படுத்தியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை சந்தைக்குப் பெருமளவு சைக்கிள்களும் மோ.சைக்கிள்களும் வந்திருந்தன. நவீன சந்தை முன்பாக உள்ள சாவகச்சேரி வணிகர் மன்றத்தின் பாதுகாப்பு நிலையத்தில் விடப்பட்டிருந்த வர்த்தகரின் சபாரி மோட்டார் சைக்கிளும் நவீனசந்தை முன்பாக நிறுத்த மற்றொரு வர்த்தகரின் சைக்கிளும் திருட்டுப் போயுள்ளன. (வ)

## தூத்துக்குடி – கொழும்பு கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்கக் கோரிக்கை

தமிழ்நாட்டின் தூத்துக்குடியிலிருந்து கடந்த மூன்று மாதமாக தடைப்பட்டுள்ள தூத்துக்குடி-கொழும்பு பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்க இந்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்.

தென் தமிழக மக்களின் நீண்ட கால கனவுத்திட்டமான தூத்துக்குடி-கொழும்பு பயணிகள் கப்பல் சேவையை மத்திய கப்பல்துறை அமைச்சர் ஜி.கே.வாசன் கடந்த வருடம் ஜூன் 13 ஆம் திகதி ஆரம்பித்து வைத்தார்.

மும்பை தனியார் நிறுவனம் சார்பில் 1,044 பேர் பயணம் செய்யக்கூடிய நவீன வசதி களைக்கொண்ட பிரம்மாண்ட சொகுசு கப்பல் ஸ்கோட்டியா பிரின்ஸ் தனது முதல் பயணத்தை ஆரம்பித்தது. பின்னர் இருமார்க்கத்திலும் வாரம் இருமுறை இந்தச்சேவை இடம்பெற்றது. ஆரம்பத்தில் கப்பலில் பயணம் செய்ய அதிகமானோர் ஆர்வம் காட்டினர். ஆனால் அடுத்த சில மாதத்தில் பயணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்து இரு மார்க்கத்திலும் சராசரியாக 100 பேர் மட்டுமே பயணம் செய்தனர்.

இதனால் கப்பல் நிர்வாகத்துக்கு போதிய வருமானம் கிடைக்கவில்லை. மேலும் பணியாளர் சம்பளம், எரிபொருள், பராமரிப்பு உட்பட பல்வேறு வகைகளில் செலவுகள் அதிகரித்தன.

இதையடுத்து அந்த நிறுவனத்துக்கு கடந்தாண்டு ஜூன் முதல் நவம்பர் வரையிலான ஆறு மாதத்தில் 28 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டது. இதனிடையே கப்பல் நிறுவனம் எரிபொருளுக்கு பணம் பாக்கி வைத்துள்ளதாக தனியாரால் தொடரப்பட்ட வழக்கில் அந்தக் கப்பலை சிறைப் பிடிக்க இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து கொழும்புக்குச் சென்ற அந்தக்கப்பலும் சிறைப் பிடிக்கப்பட்டது. இதனால் கடந்தாண்டு நவம்பரோடு இந்தக்கப்பலின் பயணம் முடங்கிப்போனது.

இதற்கிடையே கப்பல் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படுத்தப்படும் என்று மத்திய கப்பல்துறை அமைச்சர் வாசன், அண்மையில் தெரிவித்தார். அதாவது முதலில் இயக்கப்பட்ட பிரம்மாண்ட கப்பலுக்குப் பதிலாக 500 பேர் பயணம் செய்யக்கூடிய வகையிலான வேறு கப்பலை இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் எப்போது முதல் அந்தச் சேவை ஆரம்பிக்கும் என்று அமைச்சர் அறிவிக்கவில்லை. இதுகுறித்து தூத்துக்குடி வ.உ.சி துறைமுக அதிகாரிகள், நிறுத்தப்பட்ட கப்பலை மீண்டும் இயக்குவது தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (வ)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திருமதி ரோகினி பாலஸ்கந்தன் அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி இராசலக்ஷ்மி கனகராஜா
அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யாழ். இந்து மகளிர் கல்லூரி

(13186)(22,7,45)



## மரண அறிவித்தல்

### கனகநாயகம் சங்கரகுமாரன்

யாழ்ப்பாணம் - கோப்பாய் மகாவளவைப் பிறப்பிடமாகவும், இல. 46, (Hill Street), கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. C. சங்கரகுமாரன் 13.01.2012 ஆம் திகதி வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் முன்னாள் காசாளர் (இந்தியன் நாஷனல் வங்கி - கண்டி, கண்டி ஹற்றன் நாஷனல் வங்கியின் ஆலோசகர்), அரச ஈட்டு வங்கி கொழும்பின் பணிப்பாளர், கண்டி ஹோட்டல் கம்பனியின் தலைவர், பேராதனைப் பல்கலைக்கழக ஆலோசனை சபை, பொது அலுவல்கள் ஆணைக்குழு, (L.G.S.C.), (C.P) ஆகியவற்றின் உறுப்பினர் ஆவார்.

அன்னார் காலஞ்சென்ற (Adigar), A . நாகநாதன் (C.B.E), அவர்களின் செல்லப் பேரனும், காலஞ்சென்ற Gate Mudaliyar N.கனகநாயகம் (C.B.E), கண்டி மாநகரின் முன்னாள் மேஜரும் காலஞ்சென்ற நாகரத்தின அம்மாள் ஆகியோரின் அருந்தவப் புதல்வனும் வடமராட்சியில் உள்ள கரணவாய் வடக்கு. உடுப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற இராமலிங்கம் தாமோதரம்பிள்ளை (சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு JPUM), காலஞ்சென்ற பொன்னார்வன்னிச்சி ஆகியோரின் அன்பு மருமகனும் திருமதி மகேஷ்வரி (புவனி)யின் அன்புக் கணவரும் Dr. சதானந்தன் (U.K.), சச்சிதானந்தன் (U.S.A), Dr. திருமதி நிர்மலா குமாரதேவன் (Australia) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு.க. சண்முகநாயகம் (சட்டத்தரணி, கொழும்பு), காலஞ்சென்ற பேராசிரியர் க.சூரியகுமாரன் (U.N), திருமதி சேது பாலசிங்கம் (கொனக்ரிக்கட்) (U.S.A), காலஞ்சென்ற இலங்கநாயகி சேனாதிராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருந்ததி, குமுதினி, N. குமாரதேவன் ஆகியோரின் பாசமிகு மாமனும், ஹரன், வரன், சிவி, மதுரி, ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18.01.2012) புதன்கிழமை முற்பகல் 9-11மணி வரை நடைபெற்று, பூதவுடல் மகிய்யாவ இந்து மயானத்தில் (கண்டி) தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr.சதானந்தன் (மகன்)
இல.46, Hill Street, Kandy.

(சி/7910)(22-7-2)



## O/Level இன் பின்னர்
## Computer Education



கொம்ப்யூட்டர் பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

- Tally Accounting
- Digital Pre-Press
- Graphic Designing
- Cartoon Animation
- Java programming
- MS Office Applications
- Hardware & networking
- Degital Video Production
- Web Design & Development

CSC - ASIAN COMPUTERS

| | | |
|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | கொடிகாமம் வீதி, நெல்லியடி | 230, கண்டி வீதி, சாவகச்சேரி |
| T.P : 021-222 5677 | T.P : 021-2262399 | T.P : 021-2270267 |



## மரண அறிவித்தல்

### இராசலக்ஷ்மி கனகராஜா



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசலக்ஷ்மி கனகராஜா நேற்று (17.01.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ம.வீ.த. கனகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா-தையல்முத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற அமராவதி (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), மற்றும் ஸ்ரீவரதராஜன் (ஜேர்மனி), ரோகினி (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஜமுனா (லண்டன்), சிவானந்தன், கேசவன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், சிவபாதசுந்தரம், நிர்மலா, பாலஸ்கந்தன், அருட்செல்வநாதன், பிறேமளா, லலீந்திரா ஆகியோரின் அருமை மாமியும், பிரதீபன், அருந்ததி நவநீதன், லாவண்யா சுரேஷ், மைதிலி, சங்கர், நிதர்சனா, சிந்துஜா குமரேஷ், கார்த்திக் (பொறியியலாளர்), உபேந்திரா (இலங்கை வங்கி, கிளிநொச்சி), பானுஜன் (பொறியியற் பீடம், மொறட்டுவ பல்கலைக்கழகம்), அகிலன், அஜந்தா, ஜனனி, தனஞ்சயன், கஜானன், லக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், துஷாயினி, தக்ஷாயினி, கோபிசாந், கிரிசாந், காவியன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2012) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (13204)(5,7,22)

தகவல்:
குடும்பத்தினர்.





# STUDY MEDICINE IN EUROPE
# WORK AS A DOCTOR IN EUROPE

MEDICAL DEGREE FROM RIGA STRADINS UNIVERSITY, LATVIA

Medical Degree (MD) recognized by SLMC, Medical Council of UK and many European countries

For details & appointments contact:

K. Pathmanesan
Former Senior Manager, Bank of Ceylon, Jaffna
Tel: 077 58 111 72

E. Balachandran
Former Senior Manager, Bank of Ceylon
Tel: 077 61 89 126

Rusho International Consultants has been appointed by the Riga Stradins University as an authorized official Agent to recruit Sri Lankan Students to Medical, Dentistry, Nursing, Pharmacy and Physiotherapy Degree Courses.

For consultation in English please contact:

| S. H. Kumarasinghe | G. R. M. T. Bandara | Sunimal Fernando |
|---|---|---|
| Former Principal Royal College Colombo | Former Senior Manager Seylan Bank | Former Deputy General Manager, Sanasa Development Bank |

PROF. JUTA KROICA
DR. SMUIDRA ZERMANOS
WILL BE IN SRI LANKA FROM 20TH TO 28TH JAN. TO CONDUCT
SPOT ADMISSIONS

The Design Studio

RUSHO INTERNATIONAL CONSULTANTS
132,2/1, Suntel Building, High Level Road, Nugegoda
(Adjoining KFC / opposite St. Joseph's Girls School -Nugegoda)

Please visit our office or contact us early to get an appointment

Hotlines: 078 53 79 665, 071 85 76 212
011 28 11 322, 011 28 14 344


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை செய்திடு மனமே!

தற்போதைய காலகட்டத்தில் தூயதாக நேரிய வழியில் சிந்தனையைச் செலுத்துவதென்பது மிகவும் அரியதான ஒரு செயல்பாடாக ஆகிவிட்டது என்றால் அது மிகையில்லை! மாணவ, மாணவியர்கள் உழைத்துப் படித்து உயர் மதிப்பெண்களைத் தட்டிச்செல்லத் தயக்கம் காட்டி, குறைவான உழைப்புடன், அதுவும் மிகக்குறைந்த நேரத்தை மட்டுமே பயன்படுத்தி நிறைவான பலனை முழுமையாக அடைய மட்டுமே முற்படுகிறார்கள். படித்து வேலையில் அமர்ந்த பிற்பாடும் இதே கதிதான்!

அவரவர் மனதில் எழும் சிந்தனைகளின் அடிப்படையில்தான் அவர்களது செயற்பாடுகள் அமையும் என்பது உலக நியதி. மனம் எத்தகைய சிந்தனைகளைச் சீராட்டி பாராட்டி பயன்படுத்தத் தொடங்குகிறதோ அவற்றைப் பொறுத்தே அவரவர் செயல்திறன் அமைந்திடும். அச் செயல்திறனின் அடிப்படையில்தான் விளைவுகள் வெளிப்படும்.



''மனம்போல மாங்கல்யம்'' என்பதாக ஒரு பழைய வாக்கியம் உண்டு. மனிதனது மனமானது எதைப்பற்றி சிந்திக்கிறதோ, அந்தக் 'கரு'வானது ஓர் உருவம் பெற்று ஒரு முழுமையான வடிவம் பெற்று அந்த மனிதனின் குணாதிசயமாகவும் அடையாளச் சின்னமாகவும் வேரூன்றி நிற்கும். அச் சிந்தனைகள் நல்லவையாக இருக்கும் பட்சத்தில் நன்மைகள் விளையும். மனிதன் நலம் பெறுவான்! அதுபோலவே, தீயவற்றின் பக்கம் வழிநடத்திச் செல்லும் சிந்தனைகள், தீயவைகள் செய்ய வல்ல தீயவர்களை உருவாக்கும்.

சிந்தனையின் சிறப்பியல்புகளில் ஒன்று, அது செயற்பாட்டில் மட்டுமன்றி எழுத்து வடிவிலும் புலப்படும்! எனவே, நாம் எதைப்பற்றி, எங்ஙனம் சிந்திக்கிறோம் என்பது மிக முக்கியம்.

உலகில் வெற்றி பெறுபவர்க்கும் தோல்வி அடைபவர்களுக்கும் இடையே உள்ள மிகப் பெரிய வித்தியாசம், அவர்களது தனிப்பட்ட சிந்தனையோட்டத்தைப் பொறுத்தே அமையும்! ஒரு பொருளினைப் பற்றி எந்தக் கோணத்தில் நாம் சிந்திக்கத் தொடங்குகிறோமோ, அதன்படிதான் விளைவுகள் உண்டாகும். நல்லபடியாகவே சிந்தித்தால் நன்மை பயக்கும்; தீய வழியில் சிந்தனை வழிநடந்து செல்லும்போது என்ன பயன் விளையும் என்பதை விளக்கத் தேவையில்லை! எந்த ஒரு கருத்தையோ, பொருளையோ பற்றி நாம் அதிக நேரம் சிந்தித்துக்கொண்டிருக்கிறோமோ நாளடைவில் அது உயிர் பெற்றுவிடும்! அவ் எண்ணமே அவரது தனித்தன்மையாக மாறிவிடும்! அனுபவத்தில், இதைப் பழக்கத்தில் கொண்டுவருவது என்பது நிச்சயம் சுலபமான விடயமல்ல!

நல்லதை மட்டுமே சிந்திப்பேன் என உறுதியோடு நின்றாலும் தேவையற்ற, மனதைக் குழப்பவல்ல, உறுதியைத் தகர்க்கக்கூடிய சிந்தனைகள் மேலோங்கி நிற்க நிச்சயம் முற்படும்! நம் சுய கட்டுப்பாட்டின் உதவியுடன் அத்தகைய சிந்தனை ஓட்டத்திற்குத் தடை போட்டாக வேண்டும்! இல்லையேல் பிரச்சினைதான்!

நிரந்தர நன்மைகள் பயக்க நல்லவற்றையே சிந்திப்போமாக!

*[நன்றி: அரும்பு]*

# விடுவிக்கப்பட்ட வீடுகளில் உடனடியாகக் குடியேறுங்கள்

## அப்போதுதான் கதவு, ஜன்னல்களை பாதுகாக்கலாம்

கடந்த இருபத்தொரு வருடங்களின் பின் நீங்கள் உங்களது சொந்த வீட்டில் குடியிருக்கப் போகின்றீர்கள். இந்த வீடுகளை உரியவர்களிடம் கையளிக்கும்போது வீட்டின் சொந்தக்காரர்களிடம் அதனைக் கையளிக்கவேண்டும்.

யாழ்ப்பாணம், ஜன.18

''வசதியும் உழைப்பும் மிக்க மக்களைக் கொண்ட கிராமமாக இப்பகுதியைக் கட்டியெழுப்ப நீங்கள் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும்'' என வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தெரிவித்தார்.

மண்டைதீவு கடற்படையினர் தாம் தங்கியிருந்த வீடுகளை அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மண்டைதீவு பேதுருவானவர் தேவாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்து பேசியபோதே நந்தகோபாலன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தெரிவிக்கையில்,

''கடந்த இருபத்தொரு வருடங்களின் பின் நீங்கள் உங்களது சொந்த வீட்டில் குடியிருக்கப் போகின்றீர்கள். இந்த வீடுகளை உரியவர்களிடம் கையளிக்கும்போது வீட்டின் சொந்தக்காரர்களிடம் அதனைக் கையளிக்கவேண்டும். நீங்கள் உடனடியாகவே குடியேறினால் உங்களது வீடுகளில் உள்ள பொருள்கள் கதவு, ஜன்னல் போன்றவற்றைப் பாதுகாக்கக் கூடியதாக இருக்கும். அடிப்படை வசதிகள் உடன் நிறைவேற்றப்படவேண்டும் என்ற உங்களது கோரிக்கைகளை வடமாகாண ஆளுநரும் நிறைவேற்றித் தருவதாகக் கூறியுள்ளார். நீங்கள் உங்கள் வீடுகளில் குடியமர்வதன் மூலம் இப்பகுதி துரித வளர்ச்சி அடையும்'' என்றும் அவர் தெரிவித்தார். (எ-7)



சாவகச்சேரி லிகோரியார் தேவாலயத்தில் பங்குத் தந்தையாகப் பணியாற்றி தாளையடிப் பங்குக்கு இடமாற்றம் செய்யப்பட்ட அருட்பணி எம்.யேசுரட்ணம் அடிகளுக்கு பங்குமக்களால் நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவில் மக்கள் பங்குத் தந்தையை விழா மேடைக்கு அழைத்து வருகின்றனர். (எ)

# காசநோய் பரம்பல் 350 பேர் பாதிப்பு

## டாக்டர் யமுனானந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடத்தில் மட்டும் 350 பேர் காசநோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் 5 சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர் என யாழ்.மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

யாழ்.பண்ணை மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் 'காசநோய் பிரயோக மனித உரிமை அணுகுதல்' எனும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே யமுனானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

காசநோய்க்குரிய மருந்து வகைகளுக்கும் மருத்துவர்கள், தாதியர்கள், ஆளணிகளுக்கும் பற்றாக்குறைகள் நிலவுகின்றது. காசநோய்க்கு யாழ். மாவட்டத்திலே ஒரே ஒரு வைத்தியசாலை மட்டும்தான் உண்டு. பல நோயாளர்கள் கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்தும் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

தற்போது 60 வயதுக்கும் மேற்பட்ட வைத்தியர்களை சேவையில் இருந்து விலகக் கோரி ஆளுநரின் அதிகாரச் செயற்பாட்டின் மூலம் சேவையில் இருந்து விலகினார்கள்.

பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் சேவையாற்ற பின்னடிக்கின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் பொது வைத்தியர்கள் மட்டுமே கடமைபுரிந்து வருகிறார்கள். விசேட மருத்துவ அதிகாரிகள் பணிபுரிவதற்கு பின்னடிக்கின்றனர்.

போர் சூழலில் காசநோய் அதிகளவாக பெருகியது. மூன்று லட்சம் மக்கள் முகாம்களில் இருக்கும்போது சுவாசத்தின் மூலம் பல நோய்கள் பரவின. அவற்றிலே காசநோயும் பரவியது.

மேலும் சுற்றுலாத் துறையின் மூலமும் காசநோய்ப் பரம்பல் அதிகரித்துள்ளது. தவறான பாலியல் நடவடிக்கைகள் மூலமும் காசநோய் பரவுகிறது.

மயிலிட்டியில் காச நோய்க்கான வைத்தியசாலை 20 வருடங்கள் கழிந்தும் இயங்காமல் இருக்கிறது. அங்கு போதிய கட்டட வசதிகள், சூழல் என்பன அமைந்துள்ளதால் பூரண சிகிச்சைகளை அளிக்க முடியும்.

இதற்கான கோரிக்கையை அரச அதிகாரிகளிடமும் அமைச்சர், மதத் தலைவர் போன்றோர்களிடமும் முறையிட்டும் எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை.

ஆரம்பத்திலேயே ஆறு மாதங்கள் முழுமையாகக் காசநோய்க்குச் சிகிச்சை பெற்றால் முழுமையாகக் குணப்படுத்த முடியும் என்றார். (எ-311-ரி)

# அன்புவார கட்டுரை, கவிதை சித்திரப் போட்டி முடிவுகள்!

வட பிராந்திய சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்புக் குழுவினால் அன்பு வார கட்டுரை, கவிதை, சித்திரப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசு, சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி அன்பு வார ஒன்றுகூடல் நிகழ்வில் நடைபெறவுள்ளது.

போட்டியில் வெற்றிபெற்ற மாணவர் விவரம்:

**கட்டுரைப் போட்டி பிரிவு 1**

முதலாம் இடம் - செல்வி.ஜெ.காயத்திரி, யா/அருணோதயா கல்லூரி, 2ஆம் இடம் - இ.கிரிசாந்தி, யா/நெடுந்தீவு ம.வி, 3ஆம் இடம் - செல்வன்.வா.ஜெயப்பிரசன்னா, யா/ஹாட்லிக் கல்லூரி, செல்வி.ஜெ.அபிசனா, யா/சங்கானை சைவப்பிரகாச ம.வி, செல்வி.சி.லக்சியா, யா/மீசாலை வீரசிங்கம் ம.வி.

**கட்டுரைப் போட்டி பிரிவு 2**

முதலாம் இடம் - செல்வன் யோ.யோன் எமில்ரன், யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரி, செல்வி.ஸ்ரீ.யஸ்மினா, யா/வண்ணை நாவலர் ம.வி, 2ஆம் இடம் - செல்வி.க.இலக்சனி, யா/வட்டு.மத்திய கல்லூரி, 3ஆம் இடம் - செல்வி.ப.கஜனி, யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

**கட்டுரைப் போட்டி பிரிவு 3**

முதலாம் இடம் - செல்வி.தே.மயூரா, யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி, 2ஆம் இடம் - செல்வி.ந.கம்சாயினி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, செல்வி.சி.கம்சாயினி, யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, 3ஆம் இடம் - செல்வி.வி.கௌசிகா, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, செல்வி.அ.தனுசா, யா/நல்லூர் ஆனந்தா வி, செல்வி.த.திலக்சியா, யா/தொல்புரம் விக்னேஸ்வரா வி, செல்வி.கி.றஜிதா, யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**கவிதைப் போட்டி பிரிவு 1**

முதலாம் இடம் - செல்வி.வி.சாமினி, யா/புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயம், 2ஆம் இடம் - செல்வன்.ப.கஜானன், யாழ்.இந்துக் கல்லூரி, 3ஆம் இடம் - செல்வி.ஜெ.ஜெனகா, யா/இராமநாதன் கல்லூரி.

**சித்திரப் போட்டி பிரிவு 1**

முதலாம் இடம் - செல்வன்.யோ.அரவிந்தன், யா/இணுவில் மத்திய கல்லூரி, 2ஆம் இடம் - செல்வன்.மு.அபிராம், யா/நெல்லியடி மகா வித்தியாலயம், 3ஆம் இடம் - செல்வி.அ.சங்கீதா, யாழ்.இந்து மகளிர் கல்லூரி. (எ)

# மலர் தூவி வரவேற்பு

தென்மராட்சி, ஜன.18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நேற்றுமுன்தினம் தரம் 1 வகுப்புக்களில் இணையும் மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா சிறப்பாக நடைபெற்றது.

புதிதாக இணையவுள்ள மாணவர்களை பாடசாலைகளின் மாணவர்கள் மாலை அணிவித்து மலர்தூவி வரவேற்று வகுப்பறைகளுக்கு அழைத்துச் சென்றனர். இந்த நிகழ்வுக்கு கல்வி வலய உத்தியோகத்தர்கள் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இதேவேளை சாவகச்சேரி மக்கள் வங்கியினர் சில பாடசாலைகளில் சிசு உதான சேமிப்புத் திட்டத்தில் மாணவர்களை இணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். (எ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021-2280065
தொலைநகல்: 021-2280066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-5673377, 021-2262395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021-2270323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 0212263206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 0214901519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 0212270399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 0232223311

# 3ஆம் உலகப் போரும் தமிழர்களும்

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான சிக்கல் முடிச்சு மெல்ல மெல்ல இறுகுகிறது. அணு ஆயுத உற்பத்திக்கான யுரேனியம் செறிவூட்டலைத் தான் ஆரம்பித்து விட்டதாக ஈரான் அறிவித்ததைத் தொடர்ந்து பிரச்சினை இன்னும் வலுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையைக் கொண்டு ஈரானை வழிக்குக் கொண்டுவர அமெரிக்கா கடந்த பல வருடங்களாக முயன்றது. தெஹ்ரானோ மசிய மறுப்பதுடன் வலுச் சண்டைக்கும் தயாராய் நிற்கிறது. அதனால் நிலத்துக்குக் கீழே, விமானக் குண்டுகளினதும் ஏவுகணைகளினதும் தாக்குதலைச் சமாளித்துவிடக்கூடிய இடத்தில் தனது யுரேனியம் செறிவூட்டல் நிலையம் இருப்பதாக ஈரான் அறிவித்தது. கோபமடைந்த அமெரிக்கா, உடன் ஈரான் மீதான தடையை இறுக்கியது. பதிலுக்கு கோபப்பட்ட ஈரான், இனிமேல் தனது எந்தவொரு வர்த்தகத்துக்கும் அமெரிக்க டொலரைப் பயன்படுத்த மாட்டேன் என்று 10ஆம் திகதி அதிரடியாக அறிவித்தது.

குறிப்பாக அதிகளவு மசகு எண்ணெய்யைக் கொள்வனவு செய்யும் இந்தியா, ஜப்பான், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் இனிமேல் தன்னுடன் அமெரிக்க டொலர் மூலமான கொடுக்கல் வாங்கல்கள் எதனையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று திடமாகக் கூறிவிட்டது.

இந்த நிலைப்பாடு டொலரைப் பாதிப்பது மட்டுமல்ல, தெற்காசிய நாடுகள் பலவற்றின் அரசியலையும் பாதிக்கும். டொலரில் கொடுக்கல் வாக்கல் செய்வதை ஈரான் நிறுத்தினால், டொலரில் இருப்பை வைத்திருக்கும் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளுக்கு அது சிக்கல்.

இதனைச் சமாளிக்க அவை, ஈரானுடன் ஒன்றில் பண்டமாற்று வர்த்தகத்தில் ஈடுபடவேண்டும் அல்லது அமெரிக்காவைப் பகைத்துக்கொண்டு ரஷ்ய ரூபிளில் ஈரானுடன் கொடுக்கல் வாங்கல்களை வைத்துக்கொள்ள வேண்டும். ஆகக் குறைந்தது யூரோவுக்காவது மாறியாக வேண்டும். ஆனால், டொலரைக் கைவிட்டு ஈரானுடன் வர்த்தகத்துக்குப் போனால் "என்ன நடக்கும் தெரியுமா?" என்கிற ரீதியில் அமெரிக்கா கொழும்பை மிரட்டுகிறது.

அமெரிக்க மிரட்டலுக்கு இலங்கை பணிந்து விட்டது. மசகு எண்ணெய்யை ஈரானுக்குப் பதில் கட்டார் அல்லது ஓமானில் இருந்து இறக்குமதி செய்வது பற்றி அரசு பரிசீலிப்பதாக பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். ஆக கொழும்பு ஈரானைக் கைவிடத் தயாராகிவிட்டது.

இலங்கையில் உள்ள முக்கிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் ஈரானின், சல்பர் செறிவு கூடிய மசகு எண்ணெய்யைச் சுத்திகரிப்பதற்காகத்தான் வடிவமைக்கப்பட்டன என்றபோதும்கூட, ஈரானில் இருந்து இறக்குமதியைக் கைவிட கொழும்பு தயாராகிவிட்டமை அதன் மீதான அமெரிக்க அழுத்தத்தைக் காட்டுகிறது.

இந்த விடயத்தில் தமிழர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் ஒன்றுண்டு. இந்தப் புதிய உலகக் கலகம், மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெற உள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான விடயத்தை எப்படி நகர்த்தும் என்பதுதான் அது.

2009இல், இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது முஸ்லிம் நாடுகள் அனைத்தும் அதனை எதிர்த்தன. அமெரிக்கா ஆதரித்தது. இன்று ஈரானை இலங்கை நிராகரித்திருப்பது முஸ்லிம் நாடுகளிடம் செலுத்தும் செல்வாக்கு என்ன? அமெரிக்காவின் நிலை என்ன? என்ற விடயங்கள் தெளிவுபடுத்தப்படவேண்டி இருக்கின்றன. இதற்கிடையில் தமிழர்களும் தமிழ்த் தலைமைகளும் என்ன செய்ய முடியும்?

ஈரானின் நடவடிக்கையை "மூன்றாவது உலகப் போருக்கான முதல் சூடு" என்று ரஷ்யப் பிரதமர் விளாடிமிர் புடின் வர்ணித்துள்ளார். இரண்டாவது உலகப் போரின் பின் இலங்கை சுதந்திரம் பெற்றது. மூன்றாவது உலகப் போர் தமிழர்களுக்குச் சுதந்திரம் பெற்றுத் தருமா?

# உத்தியோகம் புருஷ லட்சணம் என்பதற்காய்....

செந்தூரி

"என்னைத் தட்டி விட்டாங்கள் அண்ணை!".

ஏதோ வாழ்வின் உயர் எய்துகைக்கான இறுதிப் போட்டியில், கடைசிக் கணங்களில் போட்டியிலிருந்து விலக்கப்பட்டவனைப் போன்றதொரு விரக்தியில், மிக அண்மையில்தான் பதின்ம வயதுகளைக் கடந்த இளைஞனொருவனின் உதடுகள் பிதுக்கிய வார்த்தைகள் இவை!

உயர்தரப் பரீட்சையில் போதுமான சித்திகளைப் பெற்றுவிட்டு, அடுத்ததொரு சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழக வாய்ப்பினை பெறுவதற்கான ஊக்கமும், திறமையும், பெற்றோரின் உதவியும் கிடைக்கின்ற வாலிபர்கள் இவர்கள். கல்வியையும், கல்வித் தகுதிக்கான தொழில் வாய்ப்பையும் போதுமான படிமுறைகளினூடாகச் சென்று பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளைப் புறந்தள்ளி விட்டு இப்படியான இயலாமையின் வார்த்தை வெளிப்பாடுகளைக் கொட்டும் இவர்கள் தோல்வியுற்றது எந்தத் தெரிவில்?

சர்வதேசங்களின் நாடக மேடையில் "பபூன்"களுக்கு ஒப்பான கோமாளித்தனமான மரியாதையைப் பெற்றுள்ள, "தனிமனித ஒழுக்கங்களையும்", "போரியல் விழுமியங்களையும்", "மனிதாபிமான கடப்பாடுகளையும்" விஷப்பற்களால் கொறித்து ஏப்பம் விட்ட இலங்கையின் பாதுகாப்புப் படையின் ஓர் அங்கமான காவல்துறை பட்டாளத்தில் இணையக் கிடைத்த தெரிவில் ஏற்பட்ட தோல்வியை.....

இந்தத் தீவின் முப்படையினருக்கு மேலதிகமாக, நீதி பரிபாலனத்துக்கான சாட்டைக்காரர்களாக அடையாளப்படுத்தப்படும் "பொலிஸ்" துறைக்கான ஆட்சேர்ப்புதான் வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களிடம் இப்போதைக்கு முளைவிட்டுள்ள "மவுசு" கூடிய மிடுக்கின் குறியீடு.

அசாதாரணமான இந்த வேலை வாய்ப்புப் பாதையில் இருக்கும் அபாயகரமான பள்ளங்களையும், அரசியல் போலித்தனம் நிறைந்த கொண்டையூசி வளைவுகளையும், இனவாதம் சொட்டி நிற்கும் கபடக் காட்டாறுகளையும் எம் எல்லோர் கண்களிலிருந்தும் மறைத்து விடுகின்றது "அரச பதவி" என்ற கானல் நீர்!

"நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதும் ஆன பதவியில் அமர்த்தப் படுகிறீர்கள்" எனும் வாசகங்கள் தட்டச்சுச் செய்யப்பட்ட நியமனக் கடிதங்கள் கிடைக்குமென்பதற்காய் தமிழன் எதையும் விலை கொடுக்கத் தயார் என்கின்ற இழிநிலை மட்டுமே இப்போதைக்கு எமது சொத்து.

"எமது இளைஞர்களுக்குக் கிடைக்கின்ற அரிய அரச வாய்ப்புக்களை, மழுங்கடிக்கச் செய்யும் சக்திகளின் கூப்பாடு" என மேற்படி கருத்துக்கள் பொதிந்த எல்லாத் தமிழுணர்வுக் குரல்களையும் எதிர்க்கும், அரச ஏற்பாட்டாளர்கள் (தென்னிந்திய தமிழ் வழக்கில், டபுள் "எம்.ஏ"க்கள்) நியமனத்துக்குப் பின்னான அதே "எம் இளைஞர்களின்" அவலத்தைக் கண்டு கொள்வதே இல்லை, ஏன்?

"சிறு வயதில் பிள்ளைகளின் கையில் பணம் புழங்குவது, அதீத சிக்கல்களுக்கு வழிவகுக்கும்" எனும் நம்பிக்கையுடன் பின்னிய உண்மையை, ஏறத்தாழ கலாசாரமாகவே பின்பற்றுபவர்கள் வடபகுதித் தமிழர்கள். நடுத்தர, உயர், அதியுயர் குடும்பங்களிலும்கூட தேவைக்கதிகமான பணப் பெறுமதியை பால்ய வயதினரிடம் கொடுத்து வைப்பதில் எப்போதும் தயக்கம் காட்டி வருவதே எம் மண்ணின் எழுதாக் கட்டளை. இந்த ஒழுங்குகளின் கிரமத்தில் சென்று தமது உயர் கல்வியை முடித்த பின் தொழில் [illegible] லேயே முதலாவது சம்பாத்தியத்தை

> "ஒரு மாத வேலையின் பின்னர் கிடைக்கும் எட்டு நாள்கள் விடுப்பினைக் கோரி உயரதிகாரியின் அலுவலகம் நாடி நிற்கும்போது "வீட்டில் போய் என்ன.....?" என்று எழுத்தில் இயற்ற முடியாத வார்த்தைகளால் தூஷணாபிசேகம் பெற்ற பெண் பிள்ளைகள், உத்தியோகத்துக்காக சகலதையும் சகிக்கும் கற்சிலைகளாகிப் போனார்கள்.

பணமாக, கைகளில் பெறமுடியும்.

தெளிந்த வயதொன்றிலேயே முதன் முதலாக கையில் காசைப் பார்ப்பவர்கள், அதனை எப்போதும் தவறாகச் செலவிடத் துணியமாட்டார்கள் என்ற காலகாலமான நம்பிக்கையின் அச்சாணி இன்றைக்கு முற்றிலுமாக தகர்க்கப்பட்டதன் விளைவுகளைக் கண்கூடாகக் காணமுடிகிறது.

வெறும் இருபதின் முற்பகுதியில் உயர் கல்வியைப் பாதியில் நிறுத்திவிட்டு, அல்லது பட்டக் கல்வியை மறுத்துவிட்டு தொழில் முனையும் எம்மிளைஞர்களின் எல்லா விரல்களிலும் பணத்தேவை பூத்துக் கிடக்கின்றது! பட்டப் படிப்புக்கு பின்னரும் வெட்டியாகவே இருக்கும் தம்மூத்தோரைச் சுட்டிக்காட்டி, தமது "உடனடி வேலைப்பிரயாசை"க்கு போதுமான ஆதரவையும் திரட்டமுடிகின்றது அவர்களால்.

புத்தகக் கடைகளின் முகப்பில், விளம்பரமிட்டு விற்கப்பட்ட, படிவங்களை "பொலிஸ் தலைமையகத்துக்கு" நிரப்பிவிட்டு, சீருடைக் கனவில் மிதந்த எம்மினிய இளவல்களே! காலவோட்டத்தின் மாறுதலுக்கு ஏற்ப, தமிழ் இளைஞர்களும் பட்டாளத்தில் இணைவது தவிர்க்க முடியாததென்று "சுடலை ஞானம்" பேசும் வழிகாட்டிகளே! கீழ்வரும் இரு வகையிலான ஆளும் இனத்தின் சுரண்டலுக்கும், அடிமைகொள்ளலுக்கும் அகண்ட இனவாதத்துக்கும் உங்கள் பதில்தான் என்ன?

இலங்கையின் முப்படையினரான தரை, கடல், விமானப் படையில் கூட ஆயுதப் பயிற்சி பெறும் ஆட்சேர்ப்புத் திட்டத்தில், தமிழ் இளைஞர்களை உள்வாங்குவது பற்றி இன்னமும் கனவில்கூட யோசனை செய்ததாக இல்லை. தமிழர்கள் எல்லோரும் விடுதலைப்புலிகள்தான், முன்னாள் புரட்சியாளர்கள்தான் என்கின்ற அடிப்படைச் சித்தாந்தத்தை மீறமுடியாமல், தமிழ் இளைஞர்களை ஆயுத முப்படைகளில் இணைப்பதன் மூலம் இராணுவ இரகசியங்களை (அப்படி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.) வெளிக்கொணர்ந்து, எதிர்காலத்து ஈழப்போரை ஆரம்பித்து விடக்கூடாது என்பதில் உறுதியாய் இருப்பது தெரிகின்றது.

கடும் பயிற்சிகளும், தேசத்தின் கௌரவமும் நிறையவே கொடுக்கப்படும் முப்படையினரின் எண்ணிக்கையினுள், தமிழ் பேசும் பிள்ளைகளை நுழைய விடக்கூடாது எனும் நிபந்தனையுடன், தமது தனித் தன்மையை பேணிக் கொண்டும், சர்வதேசங்களிடம் தமிழனை சம தராசில் வைத்து தூக்கிப் பிடிக்கின்றோம் என்று நிழல் விழுத்துவதற்காய், உப்புச் சப்பற்ற பயிற்சிகளோடு காக்கி உடை கொடுத்து வீதியில் இறக்கிவிடும் சாதுரியத்துக்கு நிகர் ஏது?

இதைத் தவிர, காவல்துறையினரின் உள்ளார்ந்த வீரியங்களில் எம் இளைஞர்கள் பெற்ற மரியாதைகள் சொல்லில் அடங்காதவை! இராணுவ பயிற்சிகள் கடுமையானவை என்பது யாவரும் அறியினும், பயிற்சிக் காலத்தின் அரை வருடத்தையோ, ஒரு வருடத்தையோ முகம் தெரியாத தெற்கு ஊர் ஒன்றில் வைத்து வாட்டி வதைப்பதும், குடும்பத்தினருடன் தொலைத் தொடர்புகளைக் கூடப் பேண முடியாமல் தடுப்பதும் இன்னொரு வகை.

மேலும் தெரிவு செய்யப்படும் தமிழ் இளைஞர்கள் தனிக் குழுக்களாகவே பயிற்சி பெற்று, படுத்துறங்க வேண்டும். தவறிக்கூட சேர்ந்தியங்கும் சிங்கள இளைஞர்களை சந்தித்து விடக்கூடாதென்பதில் பெரும் கட்டுப்பாடுகளோடு இயங்கியதும் உண்மை. எல்லா வகையான அப்பியாசங்களிலும் மற்ற எல்லாக் குழுக்களிலிருந்தும், வேறுபட்ட கடுமையான முறைகளைக் கொண்டு பயிற்றப்பட்ட தமிழ் இளைஞர்கள் ஆயுதம் எடுத்து சூட்டாற்றலை பெற்றுக்கொள்வதில், போதிய திறமையைப் பெற்றுக்கொள்ளக் கூடாது எனும் நிலைப்பாட்டையும் பேணியே பயிற்சிகள் முடிவுறுத்தப்பட்டன. வெளியேறிய குழுக்களில் உள்ள சில இன்றைய எம்மூர் இளைஞர்கள், சீருடை அணிந்துள்ள போதிலும், ஆயுதங்களைத் தொட்டுக்கூடப் பார்த்ததில்லை என்பது அதிர்ச்சியுடனான ஆச்சரியம்.

"பணியிடத்தில் மேலதிகாரிகளின் பாரபட்சம்", "தமது சகபாடிகளிலிருந்து எப்போதும் தனிமைப்படுத்தி வைத்திருத்தல்", "முப்பது நாள்கள் வேலையின் பின்னான தொடர்ந்து எட்டு நாள்கள் லீவினைக் கேட்டாலும், இழுத்தடித்தல்" என அக்கிரமங்கள் நிலையத்தினுள்ளும் தொடர்கின்றன.

கடமை ஒழுங்குகளின்படி தொடர்ச்சியான ஒரு மாத வேலையின் பின்னர் கிடைக்கும் எட்டு நாள்கள் விடுப்பினைக் கோரி உயரதிகாரியின் அலுவலகம் நாடி நிற்கும் போது "வீட்டில் போய் என்ன.....?" என்று எழுத்தில் இயற்ற முடியாத வார்த்தைகளால் தூஷணாபிசேகம் பெற்ற பெண் பிள்ளைகள், உத்தியோகத்துக்காக சகலதையும் சகிக்கும் கற்சிலைகளாகிப் போனார்கள். இப்படியான வெளியே தெரிந்த சிலவும், வெளித்தெரியாத பலவுமாக, "கெட்ட குடியும், பட்ட காலும்" எப்போதும் எமக்கானதே!

மேற்போந்த நடைமுறைச் சிக்கல்கள் எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழுணர்வை எம் குருதியின் ஓர் அங்கமாக சுமக்கும் இனக் கூட்டமொன்றின் தனியன்களான எம்மிளவல்கள் தூக்கும் ஆயுதங்கள்தான் , முந்தை நாள் எம் சித்தப்பனையும், மாமனையும் சின்னாபின்னமாக்கின. எம் குலப் பெண்களின் கற்பு களவாடப்பட்ட போதில் காவலுக்கிருந்தன. எழுபதுகளில் அரச ஆயுதப் படைகளில் உயரதிகாரிகளாக இருந்தவர்கள், ஈழவிடுதலைப் போராட்டத்திலும், தமிழ்த்தேசிய அரசியல் நீரோட்டத்திலும் இணைந்து, எமது மூன்று தசாப்த கனவுகளைச் சேர்ந்து சுமந்தவர்கள் எனும் வரலாற்றையும் அடிக்கடி மறந்து போகின்றோம்.

அந்தக் காலங்களைக் கடந்து வந்த பின்பும்கூட, அரச ஆயுதப்படை அங்கத்தவர்களாக இருந்த எல்லாத் தமிழர்களையும் ஆளும் இயந்திரம் "தேசத் துரோகிகளாகவே" கழுகுப் பார்வை பார்த்ததும் நினைவிருக்கிறது.

இன்றைக்கு, எம்மினத்தையும் தூயதாகப் பேணவிடாமல் இனக்கலப்பு செய்து, "ஒரே தேசம் ஒரே மக்கள்" என்ற கோஷத்தினோடு அணிவகுப்பிற்கென அழைத்துப்போய், அரங்கில் கூட அமர இடம் கொடாத, கீழ்த்தரமான இனவாதங்களுக்குள் அகப்படாமல் தப்பித்து வெளி நிற்போரே, இந்தத் தெரிவுகளால், "தட்டி விடப்பட்டோர்"! "உத்தியோகம் புருஷலட்சணம் என்பதற்காய் புத்தியிழக்கான் தமிழன்" என்று உரத்துச் சொல், உலகின் காதுகளில்.... ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணை ஒரு தடவை உற்றுப் பார்

ஸ்ரீவிஜயகாந் பத்மலோஜினி
சாவகச்சேரி இந்துக் கல்லூரி




கணிதம், பௌதிகம், இரசாயனம் முதலிய வேறுபட்ட விஞ்ஞானத் துறைகளுள் விண்ணியல் அல்லது வானசாஸ்திரம் என்பது மிகவும் தொன்மை வாய்ந்தது. இம்மியளவும் நாகரிக வளர்ச்சி அடையாத புராதன மக்கள், இரவு பகல் மாறிமாறி வருவதையும் சூரியன் சந்திரன் உதித்து மறைவதையும் நன்குணர்ந்தனர். வீடுகள் கட்டியறியாத காலத்தில் திறந்தவெளிகளில் இரவில் படுத்துறங்கிய ஆதிகால மனிதர்கள் தினமும் நட்சத்திரங்களையும் ஏனைய விண்பொருள்களையும் வானில் கண்டு வியப்படைந்தனர்.

திசைகாட்டி, மணிக்கூடு முதலியன இல்லாத காலத்தில் பகலில் சூரியனைக் கொண்டும் இரவில் விண்மீன்களைக் கொண்டும் திசைகளையும் நேரத்தையும் அறிந்தனர். எல்லா நட்சத்திரங்களையும் ஏனைய விண்பொருள்களையும் வானில் கண்டு வியப்படைந்தனர்.

கிரகணம், வால்வெள்ளி முதலியவை தோன்றினால் இவ்வுலகில் ஏதோ கெடுதி விளையும் என்று எண்ணி மிகவும் பயந்தனர். நட்சத்திரங்கள், கிர கங்கள் முதலான விண்பொருள்களின் அப்போதைய நிலைகள் மக்களின் வாழ்க்கையையே மிகவும் பாதிக்கும் என்றும் அக்காலத்து மக்கள் மிகவும் நம்பி இருந்தனர்.

பண்டைய புராணக் கதைகளிலும் பல்வேறு சமய நூல்களிலும் இவ்விண் பொருள்கள் இடம் பெற்றிருப்பதையும் நாம் காண்கின்றோம். இவற்றுக்கென கோயில்களும் கட்டி இவற்றைத் தெய்வமாக வணங்கியும் வந்தனர்.

இவ்வாறு பழம்பெரும் தன்மை வாய்ந்த விண்ணியலை விஞ்ஞானக் கலைகளின் ராணி என அழைப்பர். பண்டைக்காலத்துக் கிரேக்கர்கள், எகிப்தியர், பபிலோனியர், இந்தியர், சீனர் ஆகியோர் இத்துறையில் மிகவும் ஈடுபாடு காட்டினர்.

விண்ணில் நாம் காணும் நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலியவற்றின் அசைவு, அமைப்புத் தன்மை ஆகியவற்றின் அறிவே விண்ணியலாகும். இதனை வானியல், வானசாஸ்திரம் என்றும் கூறுவர். நாம் வசிக்கும் பூமியும், இந்தக் கிரகங்களுள் ஒன்றாதலின் இப் பூமியைப் பற்றிய புவியியல், புவிப்புள்ளியியல் ஆகிய துறைகளும் இங்குள்ள தாவரங்களைப் பற்றிய தாவரவியலும், உயிர்களைப் பற்றிய உயிரியலும், பிற துறைகளும் விண்ணியலுள் அடங்கும். இவற்றை எல்லாம் ஓரளவு நாம் அறிந்தால்தான் வானில் தெரியும் கிரகங்கள், நட்சத்திரங்களின் அசைவு, அமைப்புத் தன்மை முதலியனவற்றை நன்கறியலாம்.

விண்ணியலானது, ஏனைய அறிவுத்துறைகளை எல்லாம் உள்ளடக்கிய ஒரு பரந்த துறையாகும். நாம் சாதாரணமாகப் பார்க்கும்போது நமக்குத் தெரிவது போல ஆதிகால மக்களும் பூமி தட்டையானது என்றும் பூமியே அகிலாண்டத்தின் மத்தியில் இருக்கின்றது, என்றும் நட்சத்திரங்களும் ஏனைய விண் பொருள்களும் இருபத்து நான்கு மணித்தியாலயங்களுக்கு ஒரு முறை பூமியை வலம் வருகின்றனவென்றும் நம்பியிருந்ததில் ஓர் ஆச்சரியமும் இல்லை.

பின்னர் கிரேக்க நாட்டு ஞானிகளான கிறிஸ்துவுக்கு முன் 4 ஆம் 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அரிஸ்ரோட்டில், ரொலமி ஆகியோர் பூமி தட்டையல்ல உருண்டை வடிவானது என்று ஆராய்ச்சி மூலம் கண்டறிந்தனர். ஆனால் பூமி அண்டத்தின் மத்தியிலே அசையாமலிருந்தது என்றே அவர்களும் எண்ணினர். கத்தோலிக்க திருச்சபையும் இம் முடிவே தங்கள் சமய நூல்களுக்கு அமைவானதாகையால் இதுவே சரியான முடிவு எனக் கொண்டனர். பதினான்கு நூற் றாண்டுகளாக இந்தக் கொள்கை நிலவி வந்தது.

16 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் போலந்து நாட்டு விஞ்ஞானியான நிக்கலஸ் கோப்பேணிக்கஸ் என்பவர் பூமி அண்டத்தின் மத்தியில் இல்லை. சூரியனை மையமாகக் கொண்டே எல்லாக் கிரகங்களும் இயங்குகின்றன என்று கூறினார். எனினும் அக்காலத்து மக்கள் அவரது கூற்றை எள்ளளவும் நம்பவில்லை. பின்பு இத்தாலி நாட்டில் உதித்த கலிலியோ கலிலி என்ற விஞ்ஞானி இவர் முடிவை ஏற்றுக் கொண்டு மேலும் பல ஆராய்ச்சிகள் நடத்தி வியப்பான பல உண்மைகளைக் கண்டறிந்தார்.

இவரே முதலில் தொலைநோக்கியையும் கண்டுபிடித்தார். இத்தொலைநோக்கி மூலம் பூமி பற்றிய கொள்கையை பல ஆதாரங்களுடன் சிதறடித்தார். ஆயினும் கத்தோலிக்க திருச்சபை இவர் கூறியது முழுவதும் பிழையென்றும் கத்தோலிக்க நூல்களின் கூற்றுக்கு முரணானது என்றும் தீர்த்து இவரைச் சிறைக்கு அனுப்பியது.

இதன் பின் தோன்றிய ரைக் கோ பிராஹே, கெப்ளர் போன்ற விஞ்ஞானிகள் மேலும் பல ஆராய்ச் சிகள் செய்து கோப் பேணிக்கஸ், கலிலியோ கலிலி ஆகியோரின் முடிவை நன்கு வலியுறுத்தினர்.

சூரியனைப் பூமி சுற்றி வரும் பாதை இதுவரை எண்ணியிருந்தது போல் வட்டவடிவமானதல்ல என்றும், அது ஒரு நீள் வட்ட வடிவமானது என்றும் இந்நீள் வட்டத்தின் இரு குவியல்களின் ஒன்றிலேயே சூரியன் இருக்கின்றது என்றும் கெப்ளர் துணிந்து கூறினார். இது போலவே ஏனைய கிரகங்களின் பாதைகளும் நீள்வட்ட வடிவானவை என்றும் கண்டறிந்தார்.

1642 இல் பிறந்த ஐஸாக் நியூட்டன் என்னும் பிரபல பிரிட்டிஷ் விஞ்ஞானி, பல புதிய உண்மைகளைக் கண்டறிந்தார். ஓர் அப்பிள் மரத்திலிருந்து பழம் கீழ் நோக்கி வரு வதைக் கண்ட இவர் கூர்ந்து சிந்திக்கத் தொடங்கினார். இச் சிந்தனையின் விளைவாக பிரபஞ்சத்தில் உள்ள பொருள்கள் யாவும் ஒன்றை ஒன்று கவருகின்றன என்று அறிந்தார். இரு பொருள்களின் இடையே உள்ள ஈர்ப்புச் சக்தியானது அப் பொருள்களின் திணிவுகளுக்கு நேர்விகித சமமாகவும் அவற்றினிடையேயுள்ள தூரத்தின் வர்க்கத்துக்கு நேர்மாறு விகித சமமாகவும் இருக்குமெனவும் எடுத்துக் காட்டினார். இதன் விளைவாக சிறியனவும், திணிவு கூடிய பொருள்களை ஏன் சுற்றி வருகின்றன என்பது தெளிவாகப் புலப்படுத்து. இவரே முதலில் தெறித்தொலைநோக்கி யையும் ஆக்கினார்.

இதன் பின் தோன்றிய வில்லியம் ஹேர்ஷல் என்னும் பிரிட்டிஷ் விஞ்ஞானி தான் செய்த விஞ்ஞான ஆராய்ச்சிகளின் விளைவாக மேலும் பல உண்மைகளைக் கண்டறிந்தார். இதுவரையிலும் எண்ணி இருந்தபடி சூரியன் அண்டத்தின் மத்தியில் இல்லை என்றும் பல்லாயிரக்கணக்கான நட்சத்திரங்களைப் போலவே சூரியனும் ஒன்று என்றும் அவர் கூறினார். தான் செய்த ஒரு தொலை நோக்கியின் உதவியால் 1781 ஆம் ஆண்டில் யுறேனஸ் என்ற கிரகத்தையும் கண்டுபிடித்தார். தொலை நோக்கிகளின் உதவியால் நெப்ரியூன், புளுட்டோ என்ற புதிய கிரங்களையும் சந்திரனில் மேற்பரப்பில் உள்ள மலைகளையும் பெரிய குழிகளையும், விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். வியாழன், செவ்வாய் ஆகிய கிரகங்களின் உப கிரகங்களையும் சனிக்கிரகத்தைச் சுற்றியுள்ள அழகான வளையங்களையும் பார்த்தனர். எல்லாவற்றிற்கும் மேலாகப் பல்வேறு திசைகளிலும் நெபுலங்கள் என அழைக்கப்படும் உடுத் தொகுதிகளையும் கண்டு பிடித்தனர். தொலைநோக்கியைக் கண்டுபிடித்தனர். தொலை நோக்கியைக் கண்டுபிடித்தமை விண்ணியலிலே ஒரு பெரிய திருப்பத்தை உண்டாக்கியது எனினும் அதன் விளைவாக இத்துறை மிகவும் துரிதமாக முன்னேறியது.

சூரியனிலிருந்து பூமியை அடைய ஏறத்தாழ எட்டு நிமிடங்கள் எடுக்கும் ஒளியானது நமக்கு மிகவும் அண்மையிலிருக்கும் அல்பா சென்ரோறி என்னும் நட்சத்திரத்திலிருந்து பூமியை வந்தடைய நான்கு வருடங்களுக்கு மேலாகுமென்றால் மிகவும் அண்மையிலிருக்கும் நட்சத்திரத்தின் தூரம் தான் என்ன?

இந்த நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட நேரடித் தொலைநோக்கிகளின் உதவியால் வான சாஸ்திரம் மேலும் முன்னேறி இருக்கிறது. தற்காலத்தில் விண்ணில் செலுத்தப்படும் செயற்கைக் கிரகங்களைக் கண்டுபிடிப்பதற்கும் இவை மிகவும் பயன்படுகின்றன. பல ஆண்டுகளின் முன் சோவியத் யூனியன், அமெரிக்கா ஆகிய வல்லரசுகள் விண்வெளிக்கு அனுப்பிய செயற்கைக் கிரகங்களும் ரொக்கட்டுகளும் மனிதர்களைக் கொண்டும், மனிதர் இல்லாமலும் பல மைல்க ளுக்கு அப்பால் சென்று பூமியைப் பலமுறை வலம் வந்து பின் பூமியில் இறங்கியதும் சந்திரனுக்குச் சென்று அதன் தரையில் இறங்கி ஆராய்ச்சிகள் செய்து பின் பூமியை வந்தடைந்ததும், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி போன்ற கிரகங்களுக்கு அண்மையில் சென்று அங்குள்ள நிலைமையை ஆராய்ந்தறிந்ததும் அரும் பெருஞ் சாதனைகளாகும்.

பௌதிகம், இரசாயனம் ஆகிய துறைகளில், விஞ்ஞானிகள் தத்தம் அய்வு கூடங்களில் இருந்து கொண்டு தங்களுக்குத் தேவையான பொருள்களை வைத்துக் கொண்டு தங்களுக்குத் தேவையான பொருள்களை வைத்துக் கொண்டு மிகவும் சாவகாசமாகத் தங்கள் ஆய்வுகளை மேற்கொள்வர்.

ஆனால் விண்ணியலாளர்களுக்கு அண்ட சராசரம் முழுவதும் ஆய்வுக் கூடமாகும். வானில் ஏற்படும் நிகழ்வுகளுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு தம்மையே அவர்கள் ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். 24 மணித்தியாலத்துக்கு ஒரு முறை சூரியனையும் சுற்றிவரும் பூமியில் இருந்து கொண்டு விண்ணில் இருக்கும், பொருள்களை நோக்குவது, ஒரு களியாட்ட விழாவில் ஓடிக் கொண்டிருக்கும் ஓர் உல்லாச வளையூர்தியில் இருந்துகொண்டு அவ்விழாவிலிருக்கும் பல்வேறு பொருள்களைப் பார்ப்பது போலாகும். இதுவரை பூமியிலேயே இருந்து கொண்டு ஆய்வுகளைச் செய்து வந்த மனிதன் இன்று விண்வெளியில் சென்று ஆராயத் தொடங்கி இருக்கிறான். எனவே விண்ணியல் ஆராய்ச்சியில் இதை ஒரு முக்கிய படி எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் பெரியார்?

இலங்கை அழகான நாடு. புராணங்களில் அது குபேரன் ஊராகச் சொல்லப்படுகிறது. ஆனால் கடந்த பல ஆண்டுகளாக பீரங்கி, துப்பாக்கி ஒலிகளிலும், ரத்தம் மாமிசத் துர்நாற்றத்தாலும், கண்ணீர் நதியாலும், துன்ப நெடியாலும் களையிழந்து கிடக்கிறது.

இந்த அவலத்துக்குக் காரணம் இனப்பிரச்சினை என்று வெளிப்படையாகப் பேசப்பட்டாலும் மனித குலத்துக்கே பொதுவான அகங்காரம், போர்க்குணம், பிறரை அழிப்பதில் உள்ள குரூர சந்தோஷம் இவையே மூலகாரணம். இனப்பிரச்சினை இல்லை என்றால் இன்னொரு பிரச்சினையால் மனிதர்கள் சண்டை போடுவார்கள்.

இந்தச் சண்டைகளைச் சுற்றி நின்று சில மூடர்கள் வேடிக்கை பார்ப்பார்கள். சில முரடர்கள் "விடாதே.. அடி" என்று சத்தமிட்டு ஊக்கம் அளிப்பார்கள். இந்தச் சண்டைகளை வேடிக்கை பார்ப்பவர்கள், ஊக்குவிப்பவர்கள், இதன் மூலம் கொள்ளை அடிப்பவர்கள். இவர்களைத் தாண்டி இருவரையும் சண்டையிடாதபடி செய்கிறவன் யார்? அவன் தான் அந்தப் பகுதியிலேயே பெரிய மனிதன் என்று அர்த்தம்.

"அங்கே சண்டை நடக்கிறது... இரண்டு பேர் அடித்துக் கொள்கிறார்கள்" என்று ஒருவர் கத்தியதும் "ரத்தம் வருகிறதா பாருங்கள்.... ரத்தம் வரவில்லையென்றால் அப்புறம் என்ன சண்டை" என்று அலுத்துக் கொள்கிற சின்னப்புத்தி ஜென்மங்களும் இந்த உலகத்தில் இருக்கின்றன.

இலங்கைப் பிரச்சினையில் உலகின் பெரும் நாடுகள் எப்போதோ தலையிட்டு நியாயம் வழங்கி இருக்கலாம். செய்யவில்லை.... ஏன்? பிறநாட்டு உள்விசயங்களில் தலையிடாமை என்கிற பண்பு. வியட்நாமிலும் வேறுபல பகுதிகளிலும் மூக்கை நுழைத்த அமெரிக்காவுக்குக் காரணமாவது... கற்பாவது...!

இனப்பிரச்சினை இருக்கிறவரை இலங்கை அரசு உலக நாடுகளுக்கு அடங்கி நடக்கும். ஆயுத உற்பத்தி செய்யும் வல்லரசுகளுக்கு டொலர் டொலராகக் கொட்டிக் கொடுக்கும். டொலரை ஈட்டத் தனது செல்வமான தேயிலை போன்றவற்றை வல்லரசுகளுக்குச் கொடுத்துக் கொண்டே இருக்கும். ஈழப் போராளிகளும் தங்கள் இனத்தார் ஈட்டிய டாலர்களை அந்த அந்த நாட்டிலேயே கொடுத்து ஆயுதங்கள் வாங்கியபடியே இருப்பார்கள்.

சண்டையை வேடிக்கை பார்க்கும் கூட்டத்தை நன்கு பயன்படுத்தி திருடும் திருடர்கள் மாதிரிதான் உலகநாடுகள் நடந்து கொள்கின்றன. பெரிய பெரிய நாடுகள் எல்லாம் பெரிய மனிதர்களாக நடந்து கொள்ளவில்லை.

ஒரு கதை... கொஞ்சம் காலம் முந்திய கதை. யானை வியாபாரி ஒருவன் ஒரு நாட்டின் தலைநகருக்கு யானை விற்க வந்தான். குட்டி யானை.... குறும்பு யானை... சுட்டித்தனமாக நிறைய வித்தை செய்து காட்டியது. கூட்டம் கூடி நின்று ரசித்துக் கை தட்டியது.

சொன்னால் சொன்ன விலை என்று விற்கும் முரட்டுப் பேர்வழி அவன். எல்லோரும் யானை என்ன விலை. என்றதும் "ஆயிரம் ரூபாய்.... ஒரே விலை" என்று அடித்துச் சொன்னான். பலர் நழுவிவிட்டார்கள். அந்தக் காலத்தில் ஆயிரம் ரூபாய் பெரிய விஷயம்.

ஒரு பணக்காரருக்கு மட்டும் அதை வாங்குவதற்குக் கொள்ளை ஆசை. ஆனால் கொஞ்சம் கஞ்சப் பேர்வழி... அது மட்டும் இல்லை... அவன் சொன்ன விலைக்கு வாங்கினால் தன் கௌரவம் என்னாகும் என்கிற அசட்டுக் கௌரவம் வேறு. ஆனால் யானையை விடவும் மனமில்லை. எனவே "ஒரே விலை 999" என்று போட்டார் ஒரு போடு.

"1000"

"999"

என்று மாறிமாறி இருவரும் பிடிவாதமாகச் சண்டையிட்டார்கள். சண்டையை வேடிக்கை பார்க்கப் பெரிய கூட்டம் சேர்ந்து விட்டது. முடிவில் பிரிந்து விட்டார்கள். வியாபாரம் படியவில்லை.ஆனால் மறுநாள் காலை யானை வியாபாரி 'ஓ' என்று அழுது கொண்டிருந்தான். யானை இரவே பாம்பு கடித்துச் செத்துப் போயிருந்தது. அவன் அழுகையைப் பார்த்து மறுபடியும் பெரும் கூட்டம் கூடிவிட்டது.

யானை 999 ரூபாய்க்குக் கேட்டவர் ஆரம்பித்தார். "இப்போது அழுது என்ன செய்வது நேற்று 1 ரூபாய் குறைக்க மாட்டேன்னு பிடிவாதம் செய்தாய் 999 ரூபாய்க்கு விற்றிருந்தா நஷ்டம் வந்திருக்குமா?" "இப்போது ஏன் அழுகிறாய்?" என்று இடித்துக் காட்டினார்.

"யானை இறந்து போனதுக்கு அழவில்லை. யானை இருந்தாலும் ஆயிரம் பொன். இறந்தாலும் ஆயிரம் பொன் என்று பழமொழி இருக்கு. ஆனால் ஊரா இது.. இந்த ஊர்ல பெரிய மனிதனே இல்லை என்றுதான் அழுகின்றேன். அழறேன்" என்றார் யானை வியாபாரி.


வியாபாரி விளக்கினான் "நானும் நீயும் நேற்று ஒரு ரூபாய்க்குச் சண்டை போட்டோம். ஊரே கூடி வேடிக்கை பார்த்தது. ஓர் ஆள்கூட முன்னால் வந்து சரி.... சரி... குறைத்துக் கொண்டு. நீ ஒரு எட்டணா விட்டுக் கொடு என்று சமாதனம்சொல்லவில்லை! சமாதானம் செய்து வைக்க ஒரு பெரிய மனிதன் இல்லாத ஊராகப் போய்விட்டதே என்று அழுகிறேன்" என்று முடித்தார்.

சண்டைகளை நிறுத்திவைக்கும் பெரிய மனிதப் பண்பு உலகில் குறைந்து வருகிறது. ராமாயணத்தில் ஓர் இடம் "ராமனை என்னோடு காட்டுக்கு அனுப்பு" என்கிறார் விஷ்வாமித்திரர். "முடியாது" என்கிறார் தசரதர். இரண்டு பேருக்கும் சண்டை தோன்றிவிட்டது. உடனே எழுந்தார் விஷ்வாமித்திரர் கோபத்தை அடக்கி 'உட்கார்' என்று உத்தரவிட்டார் வசிஷ்டர். தசரதனைப் பார்த்து "உன் பிள்ளையை இவனுடன் அனுப்பு" என்றார். அவரல்லவா பெரிய மனிதர். விஸ்வாமித்திரருக்கும், தசரதருக்கும் சண்டை வராமல் தடுத்து விட்டார். அவர்தான் பெரியவர்.



சுகி. சிவம்

# பழைய நிலைக்கு மீண்டும் வங்களாவடி முருகன் ஆலயம்



**1950** ஆண்டுகளின் பின்னர் ஏற்கனவே வெறும் பனைவளவுகளாகவும், வெளிகளாகவும் காணப்பட்ட வேலணை மெல்ல மெல்ல ஒரு நகரத்துக்கான அடையாளத்தைப் பெற ஆரம்பித்தது. சில அலுவலகங்களும் வர்த்தக நிலையங்களும் தோன்றத் தொடங்கியதை அடுத்து தீவுப்பகுதியில் வங்களாவடி முக்கியத்துவம் மிக்கதாகிக் கொண்டிருந்தது.

இந்த நிலையில் இப்பகுதியில் ஓர் ஆலயம் அமைக்கப்பட வேண்டும் என்று மக்கள் எண்ணிக் கொண்டதைத் தொடர்ந்து வேலணை சரஸ்வதி வித்தியாலயத்துக்கு முன்புற பனைவளவில் இருந்த வைரவர் சூலத்தை வழிபட்டு வந்த மக்கள் அந்த இடத்தில் முருகனுக்கான ஆலயத்தை அமைக்கத் தீர்மானித்தனர்.

காலத்துக்குக் காலம் வேம்படி ஞான வைரவர் பொங்கல் மற்றும் சிறப்பு நிகழ்வுகளிலும் புதிய ஆலயம் அமைக்கக் கூடியதாக அந்தக் காணி அமைந்திருந்தமையும் ஏற்கனவே ஞானவைரவர் ஆலயம் இருந்தமையும் வங்களாவடி வளர்ச்சியடைந்து கொண்டு வந்தமையும் இந்த ஆலயம் குறிப்பிட்ட இடத்தில் அமைவதற்கு முக்கிய காரணிகளாக இருந்துள்ளன.

இந்தக் காணியில் அமைந்திருந்த ஞான வைரவர் ஆல யச் சுற்றாடலில் இருந்த மக்கள் வைரவர் மீது கொண்ட பக்தியினால் ஆலயத்தின் சிறப்பைக் கருத்தில் கொண்டு திருத்தொண்டுகளை மேற்கொண்டு வந்தனர். வங்களாவடி மக்களின் காவல் தெய்வமாக மாறி விட்ட ஞான வைரவர் ஆலயத்தில் சித்திரைப்படிப்பு உட்பட விசேட நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

**வங்களாவடி மக்களின் காவல் தெய்வமாகமாறி விட்ட ஞானவைரவர் ஆலயத்தில் சித்திரைப்படிப்பு உட்பட விசேட நிகழ்வுகளும் இடம் பெற்றிருந்தன.**

வைரவரின் அருளும் முருகனது அருளும் கூடியது போல் வேலணை மக்களும் ஒன்று கூடி ஞானவைரவர் இருக்கும் இடத்தில் முருகனுக்கும் ஆலயம் அமைக்கத் தீர்மானித்து வெளியிடங்களில் உள்ள வர்த்தகப் பிரமுகர்களின் உதவியைப் பெற்று நிதியைச் சேகரித்ததுடன், ஒரு நிர்வாக சபையையும் அமைத்தனர். 1965 இல் க.சதாசிவம் தலைமையில் செ.சுப்பிரமணியம், சீவரத்தினம், கந்தையா கனகரத்தினம் ஆகியோருடன் இருபத்து ஐந்து நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை தெரிவானதும் புதிய ஆலயம் அமைப்பது துரிதப்படுத்தப்பட்டது. அதற்கான காணியை வங்களாவடி ஞானவைரவர் கோயிலை ஒட்டிய பகுதியில் சபையினரின் பெரும் முயற்சியினால் கொள்வனவு செய்யப்பட்டது.

வேலணை வங்களாவடி ஞானவைரவர் சுவாமி கோயில் பரிபாலன சபை என்ற பெயர் 1967இல் வேலனை முருகன் கோயில் பரிபாலன சபை என மாற்றப்பட்டது. நிர்வாக சபையில் இருந்த சிலர் காலமானதால் மீண்டும் புதிய சபை தெரிவானது. இந்தப் பரிபாலன சபையின் அயராத முயற்சியின் பயனாக, ஞானவைரவர் கோயில் முருகன் கோயிலாக மாறியது. முருகன் கோவிலில் ஞானவைரவர் கோவிலும் உள்ளடக்கப்பட்டுள்ளதைக் காணலாம். புதிதாக அமைக்கப்பட்ட கோயிலில் [illegible] மண்டபம், தீர்த்தக் கிணறு, மடப்பள்ளி என்பனவும் கட்டப்பட்டுச் சுற்று மதிலும் இடப்பட்டுள்ளது. ஆலயப் பூசகருக்கென வீடு ஒன்றும் உள்ளது.

புதிய ஆலயத்தின் குடமுழுக்கு மண்டலாபிஷேகம் 1973இல் நடைபெற்றதுடன் பத்துத்தினங்கள் அலங்கார உற்சவமும் இடம் பெறத் தொடங்கியது. இவற்றுடன் மூன்று வேளை பூசைகள், சரஸ்வதி பூசை, மானம்பூ, சிவராத்திரி, திருவெம்பாவை விழாக்களும், திருக்கார்த்திகை திருவிழாவும் ஆண்டு தோறும் சிறப்பாக நடைபெறுவதுண்டு.

முருகன் கோயிலில் 1973 இல். அமைக்கப்பட்ட அலங்கார உற்சவப் பின்நாளில் கொடியேற்றம் உற்சவமாக மாறியது தீவுப் பகுதியில் உள்ள மக்களின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கியது இதனால் முக்கியமாக தேர்த் திருவிழாவின் போது தீவுப் பகுதியில் உறவு மக்கள் இந்த ஆலயத்தில் பெருமளவு கூடுவதுண்டு. மக்களின் நலன்களை கவனிப்பதில் அப்போதைய கிராம சபையும் கவனம் செலுத்துவதுண்டு.

ஞான வைரவருக்கான பொங்கல் படையல், மடை பரவுதல் என்பனவும் தவறாது நிகழும். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ.இரத்தினம், க.நாகராசா ஆகியோர் 1974 இல் நிர்வாக சபையில் இணைந்து கொண்டனர்.

1991இல் இராணுவம் வேலணையில் காலூன்றியதை அடுத்து நிகழ்ந்த இடப்பெயர்வினால் வேலணை வெறுமையாகிப்போக, வங்களாவடி முருகனும் கவனிப்பாரின்றித் தனியானர். ஆறு வருடங்களாக ஆலயத்தில் வழிபாடுகள் எதுவுமே இடம்பெறாதிருந்தது.

மக்கள் இடம்பெயர்ந்திருந்த காலத்தில் இருளில் மூழ்கிக் கிடந்த இந்த ஆலயம் இப்போது மீண்டும் படிப்படியாக அதன் முன்னைய நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது. ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதாலே என்னவோ 1997 இல் மீளக் குடியமர்ந்த ஆலயச் சுற்றாடலைச் சேர்ந்த மக்கள் முருகன் ஆலயத்தில் வழமையான

■ லக்ஸ்மன்

பூசை நிகழ்வுகள் இடம்பெறவேண்டும் என்ற விடயத்தில் அக்கறை கொண்டு செயற்பட்டனர் இதற்கென இடைக்கால நிர்வாகம் என்றும் அமைக்கப்பட்டுள்ளது.

கிராமிய சிறு தெய்வ வழிபாட்டுப் பின்னணியில் இருந்து புதிய சமுதாய தேவைகளுக்கு ஏற்ப ஆகம முறைப்படியான கோயிலாக வளர்ச்சியடைந்துள்ள இந்த ஆலயத்தில் புதிய தேர், ராஜ கோபுரம் என்பன அமைத்து, தீவுப்பகுதியில் முக்கிய பிரசித்தி பெற்ற வழிபாட்டுத் தலமாக உருவாக்க வேண்டும் என்பதே இங்குள்ள மக்களின் நோக்கமாக உள்ளது போல் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசை வீழ்த்த எதற்கு ஆயுதம்?

கொழும்பு,ஜன.18

அரசை வீழ்த்துவதற்கு ஆயுதம் ஏந்தப் போவதில்லை என்று கிளர்ச்சிக் குழுவும் ஜே.வி.பி கட்சியும் தெரிவித்துள்ளன.

சூழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஆயுதப் போராட்டத்தின் மூலம் அரசை வீழ்த்தும் நடைமுறையானது காலம் கடந்த வழமையாகும். எனவே, ஒருபோதும் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடப் போவதில்லை என்று கிளர்ச்சிக் குழுவும் ஜே.வி.பி கட்சியும் குறிப்பிட்டுள்ளன.

ஆயுத போராட்டத்தின் மூலம் அரசை வீழ்த்த முயற்சிப்பதாக அரசில் உள்ள எவரேனும் குற்றம் சுமத்தினால் அவரை உள நிலை சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்று கிளர்ச்சிக்குழு உறுப்பினர் சமீரகொஸ்வத்த குறிப்பிட்டுள்ளார்.

உலகின் எந்தவொரு நாட்டிலும் சூழ்ச்சித் திட்டங்களின் மூலம் ஆட்சி வீழ்த்தப்படவில்லை. மக்கள் போராட்டங்களின் மூலமே ஆட்சி வீழ்த்தப்பட்டுள்ளது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை மற்றும் உலக அனுபவங்களை கருத்தில் கொண்டால் ஆயுதப் போராட்டம் பொருத்தமற்றது என்பது புரியும் என்று கிளர்ச்சிக்குழு உறுப்பினர் சமீர கொஸ்வத்த தெரிவித்துள்ளார். ஆயுதப் போராட்டத்தின் மூலம் அரசை வீழ்த்த முயற்சிப்பதாக அரசில் உள்ள எவரேனும் குற்றம் சுமத்தினால் அவரை உள நிலை சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ச)

## கிழக்கில் சிங்களவரின் காணிகள் அபகரிப்பு

### 'திவயின' தகவல்

மட்டக்களப்பு,ஜன.18

கிழக்கு மாகாணத்தில் போர் இடம்பெற்ற போது பிரதேசத்தை விட்டு வெளியேறிய சிங்கள மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கிழக்கைவிட்டு வெளியேறிய சிங்களவர்கள் திரும்பிய போது, போலியான காணி உறுதிகளைத் தயாரித்து கோடிக் கணக்கான பெறுமதியுடைய காணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை மட்டக்களப்பு பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் பாசிக்குடா, கல்குடா, வாழைச்சேனை மற்றும் ஏறாவூர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சிங்களவர்களின் காணிகளுக்குப் போலியான காணி உறுதிகளைத் தயாரித்து விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸாருக்கு சுமார் 20 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் குறித்த காணிகளின் மொத்தப் பெறுமதி 20 கோடி ரூபாவுக்கும் அதிகமாகும் என்று திவயின பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காணி கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் குறித்து மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

## பொருள்களின் இறக்குமதி வரி அதிகரிப்பு

கொழும்பு,ஜன.18

இலங்கை அரசு அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் இறக்குமதி வரியை நேற்றுமுன்தினம் திடீரென அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ பருப்புக்கு 8 சதவீதமும், ஒரு கிலோ சீனிக்கு 5 சதவீதமும், ஒரு கிலோ பூண்டுக்கு 15 சதவீதமும் இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளன.

பாம் எண்ணெக்கான இறக்குமதி வரி லீற்றர் ஒன்றுக்கு 10 சதவீதத்தினாலும், மீனுக்கான இறக்குமதி வரி 35 சத வீதத்தினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதி வரியை அரசு திடீரென அதிகரித்துள்ளதால், உள்நாட்டில் இந்தப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பதுடன் வாழ்க்கைச் செலவும் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. (ச)



கைத்தொழில் மற்றும் முதலீட்டு அமைச்சர் றிசாட் பதியுதீனுக்கும் இலங்கைக்கான ஜப்பான் தூதர் நொப்ஹிடோ ஹோபோவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பில் அரசியல், பொருளாதரம் மற்றும் கலாசாரம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

## போலி லொத்தர் சீட்டு மூலம் பணம் பெற்றவர் கைது

கொழும்பு,ஜன.18

போலி மகாஜன சம்பத லொத்தர்ச் சீட்டுக்கள் மூலம் அதிகளவு பணம் பெற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படும் ஒருவரை மேல்மாகாண புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

இவர் பயன்படுத்தியதாகத் தெரிவிக்கப்படும் கணினியையும் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

கடுவெலவைச் சேர்ந்த இந்தச் சந்தேகநபர் உண்மையான சீட்டொன்றை ஸ்கானிங் செய்து கடைசி மூன்று இலக்கங்களை மாற்றுவதன் மூலம் 1000 ரூபா பரிசுகள் பலவற்றைப் பெற்றுள்ளார்.

இவரிடமிருந்து ஒரே இலக்கத்தைக்கொண்ட இரண்டு லொத்தர் சீட்டுக்கள் கைப்பற்றப்பட்டன.

இவர் போலி சீட்டுக்களைக் கொடுத்து வீதியோரக் கடைகளிலும் வான்களிலும் பரிசுப்பணத்தைப் பெற்றுள்ளார்.

இந்த மோசடியை இவர் நீண்டகாலமாக செய்துவந்துள்ளார் என்று புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். (ச)

## சந்தேக நபர்களுக்கு பிணை மறுப்பு

கொழும்பு,ஜன.18

களனி - வனவாசல பிரதேசத்தில் தனியார் வங்கி ஒன்றில் 8 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை கொள்ளையிட்ட சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நபர்களுக்கு பிணை வழங்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் குற்றத் தடுப்புப் பிரிவினரால் 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்பட்டால் எதிர்கால விசாரணைகளுக்கு அது தடையாக அமையும் என்று பொலிஸார் நீதிமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கருத்துக்களை பரிசீலித்த நீதிவான் சந்தேகநபர்களை எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ச)

## மின்சாரம் திருடினால் 'வாழ்நாள் தண்டனை'!

கொழும்பு,ஜன.18

மின்சாரத்தைத் திருட்டுத் தனமாகப் பெறுபவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு சட்டபூர்வமான தண்டனையும் அபராதத் தொகையும் வழங்கப்படுவதுடன் இனிமேல் சம்பந்தப்பட்டவர்களுக்கு வாழ் நாள் முழுவதும் மின்சார இணைப்பு கொடுக்கப்பட மாட்டாது என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பாட்லி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் உத்தரவின் பேரில் இந்தப் புதிய சட்டப் பிரமாணங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது ஒரு தடவை சட்டவிரோதமாக மின்சார இணைப்பை பெற்று இலங்கை மின்சார சபையை ஏமாற்றியவர்கள் வாழ் நாள் முழுவதும் தண்டிக்கப்படுவார்கள் என்று அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சட்டவிரோதமாக மின்சார இணைப்பை பெறுவதனால் இலங்கை மின்சார சபை இதுவரையில் 6ஆயிரம் மில்லியன் ரூபா நஷ்டமடைந்துள்ளது. இவர்கள் தேசிய ரீதியில் உற்பத்தி செய்யும் மின்சாரத்தில் 4 சதவீதத்தை திருடுகிறார்கள் என்று அவர் தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் மின்சாரம் சட்டவிரோதமாக பெறப்படுவதனால் கடந்த ஆண்டில் மின்சாரம் தாக்கி 25பேர் மரணித்து இருக்கிறார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## ஹெரோயினுடன் மூவர் கைது

கொழும்பு,ஜன.18

முச்சக்கர வண்டியில் ஹெரோயின் போதைப் பொருள் கடத்திச் சென்ற மூன்று சந்தேகநபர்கள் பம்பலப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பம்பலப்பிட்டி சென் பீற்றர்ஸ் சந்தியில் நேற்று செவ்வாய்க்கிழமை பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முச்சக்கர வண்டி ஒன்றை சோதனைசெய்துள்ளனர். அப்போது முச்சக்கர வண்டியில் இருந்து 230 ஹெரோயின் பைக்கற்றுக்கள் அடங்கிய இரு பொதிகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். முச்சக்கர வண்டியுடன் சேர்த்து அதில் பயணித்த மூன்று சந்தேகநபர் களையும் பம்பலப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## சிவில் சமூகத்தின் அறிக்கையை நாம் புறந்தள்ளிவிட முடியாது

மட்டக்களப்பு,ஜன.18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சிவில் சமூகத்தினர் அனுப்பிவைத்த அறிக்கையைப் புறந்தள்ளி விடமுடியாது. அதில் பல நியாயமான கருத்துக்கள் உள்ளன என்று கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

சிவில் சமூகம் யார்? யார் அதில் உள்ளார்கள்? யார் கையொப்பமிட்டார்கள்? என ஆராய்வதை விட அவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த புத்திஜீவிகள் என்பதுதான் முக்கியமானது என்கிறார் அரியநேத்திரன் எம்.பி.

அண்மையில் சிவில் சமூகத்தின் அறிக்கையொன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கை பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தது. இது தொடர்பில் கடந்த 3ஆம் திகதி மட்டக்களப்பு அமெரிக்க மிஷன் மண்டபத்தில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பின்வருமாறு தெரிவித்தார்.

''படித்து பட்டம் பெற்றவர்களே மக்களைக் குழப்புகிறார்கள். குழப்ப முற்படுகிறார்கள். சிவில் சமூகம் என்ற அமைப்பு அண்மைக் காலத்தில் வெளியிட்ட அறிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அரசுடனான பேச்சில் நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடிக்கின்றது - என்றார்.

இதற்குக் கருத்து தெரிவிக்கும் முகமாகவே மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

சிவில் சமூகத்தினர் அனுப்பி வைத்த அறிக்கையில் பல நியாயமான கருத்துக்கள் உண்டு. அந்த அறிக்கையைப் புறந்தள்ளிவிட முடியாது.

எனினும் அந்த அறிக்கையில் சில நியாயமற்ற கருத்துக்களும் உண்டு. அவர்களுடன் எமது தலைவர் சம்பந்தன் மிக விரைவில் பேசுவார். சிவில் சமூகம் யார்? யார் அதில் உள்ளார்கள்? யார் கையொப்பமிட்டார்கள்? என ஆராய்வதை விட அவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த புத்திஜீவிகள் என்பதுதான் முக்கியமானது- என்றார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பூபா.மதுரநாயகம், தமிழ் மக்கள் உரிமைகளுடன் வாழ வேண்டும் என்று விரும்புவது சிவில் சமூகம். அன்று தமிழர்களின் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதற்காக பெருபான்மையான தமிழர்களை தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வைத் தவர்கள் சிவில் சமூகத்தினர்.

தமிழ் பேசும் மக்களின் நலனில் அதிக அக்கறை கொண்டதுடன் அதற்காக பல வியூகங்களை வகுத்து திரைமறைவில் இருந்து செயற்பட்டவர்கள் சிவில் சமூகத்தை சேர்ந்தவர்கள். இதை யாரும் மறுக்க முடியாது - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர்காவற்றுறை பிரதேச சபை

# பொது அறிவித்தல் 2012

01. வியாபார உரிமம்.

ஊர்காவற்றுறை பிரதேசசபை எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் பிரதேசத்திற்குள் பொருள்களை விநியோகிப்போர் மற்றும் உயர்தொழில் நடவடிக்கை யில் ஈடுபடுவோர் 2012 ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணபப்படிவத்தினைப் பெற்று அதனைப்பூரணப்படுத்தி ஊர்காவற்றுறை, நாரந்தனை, அனலைதீவு, எழுவைதீவு உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2012 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2012 ஆம் திகதிக்கு முன் வியாபார அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

02. வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரம் அறிவித்தல்.

02.1. ஊர்காவற்றுறை பிரதேசசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச தனியார் கட்டடங்கள், எல்லைச்சுவர், மலசலகூடங்கள், கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல்/திருத்த வேலைகள் சட்டத்தின்படி தண்டனைக் குரிய குற்றமாகும் என்பதை அறியத்தருகின்றேன். எனவே ஊர்காவற்றுறை பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் கட்டட விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து முன் அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். அவ்வாறு முன் அங்கீகாரம் பெறப்படாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடு வழங்கப்படாதும் முன்னறிவித்தல் வழங்கப்படாதும் சபையினால் அகற்றப்படும்.

02.2. ஏற்கனவே அனுமதி பெற்று 01 வருட காலத்தில் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் மேலும் காலநீடிப்பு அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

02.3. அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்.

03. துவிச்சக்கரவண்டி, மிருகங்களின் உரிமம் பெறல்.
2012 ஆம் ஆண்டு துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களின் உரிமத்தை 31.03.2012 ஆம் திகதிக்கு முன் பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

04. படவரைஞராகப்பதிவுசெய்தல்
2012 ஆம் ஆண்டு படவரைஞராகப்பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் 31.01.2012 ஆம் திகதிக்கு முன் பதிவுகளைச் செய்துகொள்ளவும். புதுப்பித்துக் கொள்ளவும் முடியும். மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

05. பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கு அண்மித்து கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி மற்றும் உயிர்க்கோழிகள் விற்பனையைத் தடை செய்தல்
எமது சபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கு அண்மித்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்குக் கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி மற்றும் உயிர்க் கோழிகள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. மீறுவோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

06. விளம்பரங்களை அமைத்தல்/காட்சிப்படுத்தல்
ஊர்காவற்றுறை பிரதேசசபையின் நிர்வாகப்பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப் பட்டும் காட்சிப்படுத்தப்பட்டும் இருக்கும் விளம்பரங்களுக்கு 23.02.2012 ஆம் திகதிக்குமுன் உரிய கட்டணத்தைச் செலுத்திச் சபையின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களிலிருந்து 23.02.2012 ஆம் திகதிக்கு பின் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

07. கட்டாக்காலி கால்நடைகள்.
எமது நிர்வாகப் பிரதேசத்திற்குள் அலைந்து திரியும் கட்டாக்காலிகளை கட்டி வளர்க்குமாறு கேட்டுக்கொள்வதோடு அவ்வாறு கட்டிவளர்க்கப்படாத கால் நடைகள் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டு உரியநடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

08. சூழற்பாதுகாப்பு உரிமம் 2012
மத்திய சுற்றாடல் அதிகாரசபைத்தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழற்பாதுகாப்பு சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு எனக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் காரைநகர் பிரதேசசபையின் நிர்வாகப் பிரிவில் 1533/16 ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.01.01ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேற்குறித்த அறிவித்தலுக்கிணங்க வியாபாரத்தை/ தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டு உள்ளது. ஆகவே சம்பந்தப் பட்டவர்கள் ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் தலைமையலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப்பெற உரிய நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2012 ஆம் ஆண்டு மேற்குறித்த தொழில்களை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றியவிவரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல்களை தலைமையலுவலகத்தில் பார்வையிடலாம்.

பொதுமக்கள் தங்களுக்குரிய தகவல்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள் தரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| தலைமை அலுவலகம். | :- | 0213212398 |
| உப அலுவலகம் - ஊர்காவற்றுறை. | :- | 0213202371 |
| உப அலுவலகம் - நாரந்தனை. | :- | 0213202372 |
| உப அலுவலகம் - அனலைதீவு. | :- | 0213202374 |
| உப அலுவலகம் - எழுவைதீவு. | :- | 0213202375 |

**ம.ஜெயகாந்தன்,**
**தவிசாளர்,**
**ஊர்காவற்றுறை பிரதேச சபை.** 2012.01.18. (சி/7835) (2-7)

## மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

பளை மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவை மண்டபத்தில் இடம்பெற்றது.

பேரவைத் தலைவர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இந்திய வீட்டுத் திட்ட பொறியியலாளர் ஆனந்த் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கினார்.

ஏனைய பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் விரைவில் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(வ-207)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்ற
திருமதி இன்பமலர் சண்முகநாதன்
அவர்களின் தாயார்
திருமதி **துரையப்பா பாக்கியம்** அவர்கள்
17.12.2011 அன்று இறைபதமடைந்ததை முன்னிட்டு, இடம்பெறும் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் (18.01.2012) அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எமது கல்லூரிச் சமூகம் சார்பாக அஞ்சலி செலுத்துகின்றோம்.

**கல்லூரிச் சமூகம்,**
**கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி.**

# வலிகாமம் வடக்கு பிரதேச சபை
# காங்கேசன் துறை
# பொது அறிவித்தல் - 2012

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் மக்கள் எமது சபையினால் நடை முறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றும்படி கேட்டுக்கொள்கின்றேன். இந்த நடைமுறைகளைப் பின்பற்றத் தவறுவோர் மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றேன்.

1. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2012
சபை எல்லைக்குள் வியாபார நடவடிக்கை மேற்கொள்பவர்கள் 2012 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப் பத்திரத்தை 31.03.2012 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

2. சூழல் பாதுகாப்பு உரிமம் - 2012
1533/16ஆம் இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 ஆம் இலக்க 2008.02.01 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் விதந்துரைக்கப்பட்ட தொழில்களை அல்லது வியாபாரத்தை மேற்கொள்பவர்கள் எமது சபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு 31.03.2012 ஆம் திகதிக்கு முன்பாக சூழல் பாதுகாப்பு உரிமத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்

3. ஆதன வரி செலுத்துதல் - 2012
எமது சபையின் உப அலுவலகங்கள் மல்லாகம், தெல்லிப்பழை, மயிலிட்டி (குட்டியப்புலம்) ஆகிய இடங்களில் சேவையை வழங்கி வருகின்றது. மல்லாகம், தெல்லிப்பழை, பிரதேசங்களில் வசிப்பவர்கள் அந்தந்த உப அலுவலகங்களுக்குச் சென்று ஆதன வரியை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். 31.01.2012 ஆம் திகதிக்கு முன்னர் ஆதனவரியை செலுத்துவோருக்கு அவ் வருட மொத்தவரியில் 10% கழிவு வழங்கப்படும். குறிப்பிட்ட திகதிகளுக்குள் வரிசெலுத்தத்தவறின் 15% தண்டம் அறவிடப்படும்.

4. 1) வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம் பிரிவு 268 இன் பிரகாரம் அறிவித்தல்.
வலி. வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் அனுமதியின்றி கட்டடங்கள் அமைத்தல், புதுப்பித்தல், திருத்தம் செய்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும். சபையின் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்ட கட்டடங்கள் முன்னறிவித்தல் இன்றி எவ்வித நட்ட ஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

11) கட்டட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்குள் கட்டி முடிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பாக காலநீடிப்பு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

111) அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பாக சபையின் உப அலுவலகங்களுக்கு அறியத்தந்து உரிய அமைவுச் சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5. துவிச்சக்கரவண்டி உரிமம், மிருகவரி உரிமம் பெற்றுக்கொள்ளல்.
2012 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி, மிருகங்களின் உரிமங்களை 31.03.2012 ஆம் திகதிக்கு முன்பாக பெற்று சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.


6. விளம்பரங்களை காட்சிப்படுத்தல்
எமது சபையின் எல்லைக்குள் வீதிகளின் இருமருங்காகவும் வீதிக்கு மேலாகவும் மற்றும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் விளம்பரங்களுக்கு 31.01.2012 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணத்தை செலுத்தி அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அனுமதியைப் பெற்றுக் கொள்ளாத வர்த்தக மற்றும் சேவை நிலையங்களின் விளம்பரப் பலகைகள் அகற்றுவதற்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

7. பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்களின் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளைப்போடுதல்.

சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருள்களை கொட்டுதல் தடை செய்யப் பட்டுள்ளது. பொதுமக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலன்களில் கழிவுப் பொருள்களை சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு உரிய கட்டணத்தைச் செலுத்தி சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**சோ. சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை, (மல்லாகம்).** (சி-7843) (45-7-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஓரளவு மேகக்கூட்டத்துடன் கூடிய காலநிலை காணப்படும்.

# நுளம்பு ஒழிப்பு வாரம் நேற்றுமுன்தினம் ஆரம்பம்

தென்மராட்சி, ஜன.18

சுகாதார திணைக்களத்தின் தேசிய நுளம்பு ஒழிப்பு வார நிகழ்வுகள் நேற்று முன்தினம் நாடெங்கிலும் ஆரம்பமாகியுள்ளன.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கான நிகழ்வுகள் நேற்று முன் தினம் கைதடியில் ஆரம்பமானது.

யாழ்.பிராந்திய மலேரியா தடுப்பு இயக்க பொறுப்பதிகாரி வைத்தியக் கலாநிதி ரி.சிவசங்கர், இந்த நிகழ்வை கைதடி அரச வைத்திய சாலையில் ஆரம்பித்துவைத்தார்.

இந்த நிகழ்வில் பொலிஸாருடன் சுகாதாரத் திணைக்கள கல்வி உத்தியோகத்தர் சிவகுமாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், மலேரியா தடுப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள், சமூக சுகாதார ஊக்குவிப்பாளர்கள் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபையினரும் கலந்து கொண்டனர்.

நாவற்குளி,கைதடி தெற்கு, வடக்கு , மத்தி போன்ற இடங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன் விழிப்புணர்வைத் தூண்டும் பிரசுரங்களையும் வழங்கினார்கள்.

மேலும்கைதடிப்பகுதியில் உள்ள அனைத்து திணைக்கள அலுவலகங்கள், பாடசலைகள், முதியோர் இல்லம், வங்கிகள், கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், வர்த்தக நிலையங்கள், சந்தை போன்றவற்றில் டெங்கு ஒழிப்பு புகையூட்டல் செய்யப்பட்டன.

நேற்று மட்டுவில் தெற்கு வளர்மதி ஆரம்ப சுகாதார நிலையத்தில் தொடங்கி மட்டுவில் தெற்கு சிவன் கோவில் வீதி, கைதடி நுணாவில் வைரவர் கோவிலடி, சரசாலை போன்ற இடங்களில் தேசிய நுளம்பு ஒழிப்பு வார நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன.

இன்று சாவகச்சேரி நகர்ப்பகுதி, கோயிற்குடியிருப்பு, சாவகச்சேரி வடக்கு, கெருடாவில் ஆகிய இடங்களிலும் நாளை நுணாவில் கிழக்கு, மத்தி, மேற்கு ஆகிய இடங்களிலும் இடம்பெறும்.

நாளை மறுதினம் வரணி இடைக்குறிச்சி, சந்தைப் பகுதி, மாசேரி, கரம்பைக் குறிச்சி, மந்துவில் ஆகிய இடங்களிலும் 21 ஆம் திகதி கொடிகாமம் நகர், நாகநாதன் வீதி, கச்சாய் வீதி, பருத்தித்துறை வீதிகளில் 22 ஆம் திகதி உசன் மிருசுவில் வடக்கு, தவசிக்குளம், படித்த இளைஞர் குடியேற்றத்திட்டம் ஆகிய இடங்களிலும் இடம்பொறுமென சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் அறிவித்துள்ளனர் . (ந-207)

## தாவணியால் வந்தது வினை

தென்மராட்சி,ஜன.18

தோளில் போடப்பட்டிருந்த தாவணி மோட்டார் சைக்கிள் சில்லினுள் சிக்கியதினால் தூக்கி வீசப்பட்டதில் சகோதரிகள் இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கிளாலி -எழுதுமட்டுவாழ் வீதியில் இடம்பெற்றுள்ளது.

கிளாலியைச் சேர்ந்த விஜயமோகன் அகிலேஸ்வரி (வயது 30) நாகர் கோவில் மேற்கைச் சேர்ந்த இரத்தினசிங்கம் உஷா (வயது 21) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஏ-9 வீதியில் சென்று கொண்டிருந்த ப்ஸ்ஸின் மிதி பலகையில் பயணித்த பஸ் நடத்துனர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு பளைப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த சிற்றம்பலம் யோகரூபன் (வயது 28) என்பவர் காயமடைந்தார். இவரைப் பளைப் பொலிஸார் சாவகச்சேரி வைத்தியு சாலையில் சேர்த்துள்ளனர். (ந-207)

## சிறப்பாக நடைபெற்றது கால்கோள் விழா

யாழ்ப்பாணம்,ஜன.18

தரம் 1 இல் அனுமதி பெறும் பாடசாலை மாணவர்களுக்கான கால்கோள் விழா வட பகுதியிலும் நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொரு பாடசாலையிலும் இந்த நிகழ்வு பாடசாலை நிர்வாகத்தினரால் கொண்டாடப்பட்டது.

யாழ். வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் வசதிகுறைந்த 26 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, கால்கோள் விழாவுக்கென யுனிசெப் அமைப்பால் தலா இரண்டாயிரத்து 500 ரூபா வீதம் அன்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலைகளில் இடம்பெற்ற கால்கோள் விழாவில் கல்வி அதிகாரிகள் பங்குபற்றியிருந்னர். தரம் 1 மாணவர்கள் மட்டுமன்றி அவர்களது பெற்றோரும் இதன்போது அழைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-4-207)

## சாவகச்சேரியில் காப்புறுதிக் கிளை

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சாவகச்சேரிக் கிளையின் திறப்பு விழா சாவகச்சேரி நகரில் நாளை காலை 9.16 மணியளவில் நடைபெறவுள்ளது.

## பஸ் கட்டணத்தில் ஒழுங்கின்மை

யாழ்ப்பாணம்,ஜன.18

யாழ்ப்பாணம் கொடிகாமம் பயணிகள் சேவைக் கட்டணமாக இபோச நிர்வாகத்தினரால் தற்சமயம் ரூபா 32 அறவிடப்படுகின்றது. முன்பு இந்தச் சேவைக்கான கட்டணமாக ரூபா 36 ஆக அறவிடப்பட்டு வந்தது. இருந்தும் தனியார் பஸ் சேவைக் கட்டணமாக முன்பு நடைமுறையில் இருந்த கட்டணத்துக்கமைய தற்சமயம் சில நடத்துனர்கள் சில்லறைக்காசு மற்றும் சிரமம் காரணமாக ரூபா 35 ஐயும் அறவிடுகின்றனர். அதேசமயம் சில இ.போ.ச பஸ் நடத்துனர்களும் குறைக்கப்பட்ட கட்டணங்கள் தொடர்பில் ரூபா 34 ஐக் கட்டணமாக அறவிடுகின்றனர் . பஸ்கட்டணங்களை கூட்டியும் குறைத்தும் அறவிடுவதால் பயணிகள் மத்தியில் குழப்பம் நிலவுகின் றது. தனியார் பஸ்சேவை நிர்வாகத்தினர் தமது கட்டணத்தை குறைத்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுகின்றனர். (ந-122)

## கோழிக் குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா No.1 புறொயிலர், பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் (19-01-2012) விநியோகிக்கப்படும்.

தொடர்பு-

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ். 021-2226944 | நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி. 077-6225944. | சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 077-8996085 |

## மூன்று தொடர் கடைகள் வாடகைக்கு

அச்சுவேலி பஸ் தரிப்பிடத்துக்கு முன்னால் 49 அடி நீளமும், 12 அடி அகலமும் மற்றும் சகல அடிப்படை வசதிகளையும் கொண்ட புதிதாக திறந்து வைக்கப்படவுள்ள மூன்று தொடர்கடைகள் முழுமையாகவோ, தனித்தனியாகவோ வாடகைக்கு விடப்படும். விவரங்கள் நேரில் பேசித் தீர்க்கப்படும். 18.01.2012 அன்று திறப்புவிழா நடைபெறும்.

தொடர்பு- செல்லத்துரை தவமணி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
077 615 8066, 021 490 8566, 077 468 1475

## போட்டோ அல்பம் தவறிவிட்டது

குடும்பப் படங்கள் அடங்கிய சிறிய அல்பம் இருபாலைக்கும் வல்லைவெளிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்
T.P: 077 3565349


## ஒத்து மாறல்

யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஆசிரியர், வவுனியா சித்திர பாட ஆசிரியருடன் ஒத்து மாற விரும்புகிறார்.

தொடர்பு:
077 7174511,
021 321 6731

## நீங்காத நினைவலைகள்

56ஆம் நாள்



அமரர்
அல்பிரட் அன்ரன் பாலேந்திரன்
(ஊழியர் - லங்கா சிமெந்து)

32ஆம் நாள்



அமரர்
ஞானப்பிரகாசம் அல்பிரட்

21.12.1961 - மலர்வு - 27.09.1927
24.11.2011 - உதிர்வு - 18.12.2011

நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய
கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடமிருந்து
கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு
கண்ணீருக்கு தடை போட்டது போல
உம் நினைவுகளுக்கு தடைபோடமுடியவில்லை
நினைவுகள் மட்டும் நிறையவே தந்து
நிதர்சனமாய் சென்று விட்டீர்கள்

கடந்த 24.11.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு அல்பிரட் அன்ரன் பாலேந்திரன் அவர்களினதும், 18.12.2011 அன்று சிவபதமடைந்த குடும்பத் தலைவர் ஞானப்பிரகாசம் அல்பிரட் அவர்களினதும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (18.01.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோ

அம்மன் கோயில் றோட்,
சுதுமலை வடக்கு, மானிப்பாய். (C\7825) (6,10) குடும்பத்தினர்,

## ஒன்பதாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
தம்பு சிவபாக்கியன்
(18.01.2012)

அன்னை மடியில்
12★01★1922

இறைவன் அடியில்
18★01★2003

காலமெல்லாம் கூட இருந்து கண்மணிபோல் எமைக்காத்து
கனமான புத்திமதிகள் பல புகட்டி வாழும் வகை எல்லாம் சொல்லி
வையகத்தில் வாழ்வாங்கு வாழவைத்த எம் தந்தையே
எங்கு நீங்கள் சென்றாலும் எம் இதயத்தில் நீங்காது நிற்கின்றீர்கள்
நன்றியோடு உங்களை நாம் [illegible]

200, சென் பெனடிக்றோட்,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். (13075)(2-7) - [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** பழகிய சிலர் மூலம் பணவரவுகளைப் பெறலாம். பெண்கள் குடும்ப விடயங்களில் விட்டுக் கொடுத்துச் சென்று பாராட் டுப் பெறுவர். பிள்ளைகள் வழியில் சுபச் செலவு களைச் சந்திக்கலாம். கணவன், மனைவி இடையே ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்வுக்கு வரும். வெளியிடங் களுக்குச் செல்லும் போது உறவினர் ஒருவரைச் சந்திக்கலாம்.



**இடபம்:** பெரிய அளவில் கவலைப்பட்ட ஒரு விடயம் சுமூகமாக முடிவுக்கு வரலாம். பெண் கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். பொலிஸ் தொடர்பான வேலைகளில் பணிபுரிவோர் கடும் அலைச்சல் களுக்கு ஆள்படலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள். நல்ல காரியம் ஒன்றைச் செய்வீர்கள்.



**மிதுனம்:** பிடிவாதமான செயற்பாடுகளால் குடும்ப உறுப்பினர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம். வீண் விரயங்களைத் தவிர்க்க எதிலும் முன் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். வெளியூர் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகலாம். சில வேலைகளில் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டாலும், பின்னர் விறுவிறுப்பாக முடிவுக்கு வரும்.



**கடகம்:** தொழில் ரீதியான செல்வாக்கு அதிகரிக்கும். கடன் மிகுதிகளைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். தேடிவரும் சிலருக்காக செலவு செய்ய நேரிடலாம். அரசியல்வாதிகள் வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். உறவினர் அல்லது சக ஊழியர் ஒருவர் உங்களை உதாசீனப்படுத்தும் வகையில் நடந்து கொள்ளலாம்.



**சிங்கம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் நாள். இரண்டு நாள்களாக வராமல் இருந்த பணவரவு ஒன்று இன்று கைக்குக் கிடைக்கலாம். பெண்கள் கணவரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். நண்பர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் நல்ல விதமாக முடியலாம். நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம்.



**கன்னி:** எதிர்பாராத செலவுகளைச் சந்திக் கலாம். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். குடும்ப உறுப்பினர்கள் உங்களைப் புரிந்து கொள்ளா மல் நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். வழக் கமான வேலைகளில் சில மாற்றங்களைச் செய்யலாம். எதிர் பார்த்த பணவரவுகள் வருவது தடைப்படலாம். தூக்கமின்மையால் சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும்.



**துலாம்:** செல்வாக்கும், சொல்வாக்கும் அதி கரிக்கும் நாள். நண்பர்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கலாம். காலை நேரத்தில் சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். சில விடயங்கள் ஆரம்பத்தில் பாதகமாக நடப்பது போலத் தோன்றினாலும், இறுதியில் சாதகமாக முடியும். குடும்ப உறுப்பினர்கள் மீதான பாசம் அதிகரிக்கும்.



**விருச்சிகம்:** நீங்களே சிரமத்தில் இருக்கும் போது, சிலர் உங்களிடம் உதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். உடல் நலம் பற்றிய கவலைகள் அதிகரிக்கும். விருந்தினர்கள் வருகையால் நீங்கள் திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் போகலாம். விவசாயிகள் விளை பொருள்கள் விற்பனை மூலம் கூடுதல் லாபம் பெறலாம்.



**தனுசு:** பழைய நண்பர் ஒருவர் மூலம் புதிய நண்பரின் அறிமுகம் கிடைக்கலாம். பெண்கள், உறவினர்கள் தொடர்பான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். மலையாக இருந்த பிரச்சினை ஒன்று எளிதில் முடிவுக்கு வரலாம். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த வேலை ஒன்றில் அதிக ஆதாயம் கிடைக்கலாம். வழக்கத்துக்கு மாறாக நீண்ட நேரம் தூங்கலாம்.



**மகரம்:** இரண்டு நாள்களாக வராமல் இருந்த பணவரவு ஒன்று இன்று கைக்குக் கிடைக்கலாம். உங்களின் வேலை ஒன்றை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க நேரிடலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பார். சேமிப்பு கூடும் நாள்.



**கும்பம்:** அயலார் மத்தியில் மதிப்பு, கௌரவம் மேம்படும். வயிறு உபாதைகள், உடல் உபாதைகளைத் தவிர்க்க உணவு விடயங்களில் எச்சரிக்கை அவசியம். செய்ய நினைத்த வேலை ஒன்றை சோம்பலால் மாற்றி அமைப்பீர்கள். தொழில் ரீதியான உங்களின் செயற்பாடு களை மற்றவர்கள் பாராட்டலாம். ஏமாற்றங் களைச் சந்திக்கலாம்.



**மீனம்:** சில தவறுகளைச் செய்து விட்டு குடும்பப் பெரியவர்களின் அதிருப்திக்கு ஆள்படலாம். விரும்பத்தகாத சில சம்பவங்கள் நடக்கலாம். உங்களிடம் உதவி பெற்ற சிலரே உதாசீனம் செய்து பேசலாம். வீண் பழிகளைத் தவிர்க்க மற்றவர்கள் விவகாரங்களில் தலையிட வேண்டாம். நினைத்த வேகத்துக்கு சில வேலைகளை செய்ய முடியாமல் தடை ஏற்படலாம்.

---

தை 05 வியாழக்கிழமை 19.01.2012
திதி: ஏகாதசி மு.இ. 07.18 வரை
நட்சத்திரம்: அனுஷம் மு.இ. 07.08 வரை
சுபநேரம்: 08.05 - 09.35 வரை,
ராகு காலம்: 02.05- 03.35 வரை

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 2 | 5 | | | 9 | | 7 |
| | | | | 6 | | 5 | | 2 |
| 1 | | | 9 | | | | 6 | |
| | | | 4 | 5 | | 7 | 3 | |
| 2 | 5 | | | | | | 4 | 1 |
| | 8 | 4 | | 3 | 6 | | | |
| | 2 | | | | 7 | | | 6 |
| 5 | | 6 | | 4 | | | | |
| 9 | | 7 | | | 5 | 1 | | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும்கொண்டிருக்கிறது.(உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானிய சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

---


அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வரையறுக்கப்பட்டது)
அக்கராயன்குளம் பதிவு இலக்கம் KN/150

## பதவி வெற்றிடம்

கீழ் குறிப்பிடப்படும் பதவிக்கு இலங்கைப் பிரஜைகள் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின் றன.

பதவி:- 1) பயிற்சிக் கிளை முகாமையாளர்கள்
2) அலுவலக உதவியாளர்

வயதெல்லை:- 18 - 45 வரை

தகைமைகள்:- கூட்டுறவுப் பணியாளர் (சா.த) பத்திரம்/ க.பொ.த. (சா.த) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம், வர்த்தக எண் கணிதம்/ தூய கணிதம்/ தமிழ் என்பவற்றை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தி. சம்பந்தப்பட்ட துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

* பயிற்சியாளர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்புப் படி வழங்கப்படும்.
* மேற்படி பதவிக்குத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் சங்கத்தினால் கோரப்படும் ரொக்கப் பிணையும் ஆதனப்பிணையும் செலுத்தவேண்டும்.

மேற்படி பதவிக்கான விண்ணப் படிவங்களை சுயமாகத் தயாரித்து, விண்ணப்பப் படிவத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ் அண்மையில் பெற்ற வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ், ஏனைய தகைமைகள் இருப்பின் அச்சான்றிதழ்கள் ஆகியவற் றின் போட்டோப் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 24.01.2012 ஆம் திகதிக்கு முன்னதாக பொது முகாமையாளர் அக்கராயன் ப.நோ.கூ.சங்கம் அக்கராயன் குளம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் மேல் மூலையில் பதவியைக் குறிப்பிடவேண்டும்.

**டினேஸ்குமார் தங்கமணி**
தலைவர்
அக்கராயன் ப.நோ.கூ.சங்கம், அக்கராயன்குளம்.



### வீடு விற்பனைக்கு

யாழ் நகரில், பலாலிவீதி 1/13, 2ஆம் ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 8767947 (13048) (6-45)

### கோழி இறைச்சி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் இறைச்சி நியாயமான விலையில் விற்கப்படும். காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் பாம் சென்ரர், இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

### T Vகள் மலிவு விற்பனை

யாழ்நகரில் எங்கும் இல்லாத மிக மலிவு விலையில் Japan Sony Flat T V கள் 21"-10000/=, 25" -15000/= (sw, AR, Fx) Poineer amp- 10000/= குளிர் சாதனப்பெட்டிகள் - 20000/=, CD-Casstte-Radio- 2000/=
தொடர்புகளுக்கு: 077 0440570 - 077 9712956
சோனி றேட்ற்சென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக 56, K.K.S. வீதி, சுன்னாகம்.

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் 2ஆம் கட்டையடியில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 0773569709, 077 3146053 (11558) (6-9-45)

### வேலையாள் தேவை

* மருந்தகம் ஒன்றுக்கு கணக்கு பதிவு மேற் கொள்ள பெண் பிள்ளை தேவை (A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது).
* நல்லூர் பிரதேசசபை எல்லைக் குட் பட்ட பிரதேசங்களில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
* தகுந்த சம்பளம் வழங்கப்படும்

தொடர்பு: தொலைபேசி இல. 077 1183374

### கடை வாடகைக்கு விடப்படும்

இல. 615 பரந்தன் வீதி தருமபுரம், தருமபுரம் மகா வித்தியாலயத்திற்கு அருகில் 16 x 32 அடியில் 2 கடை களும் 11 x 32 அடியில் ஒரு கடையும் கொண்ட கடைத் தொகுதி வாடகைக்கு விடப்படும் ... முன்னுரிமை
தொடர்புகளுக்கு: 077 0579536 (13099 (45-9-6)





மீசாலை இலந்தைக்கூடல் வீரகத்திப்பிள்ளையார் திருக்கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா

## மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா

நாளை 19.01.2012 வியாழக்கிழமை காலை 8.33 தொடக்கம் 9.45 மணிவரை வரும்கும்பலக்ன சுபமுகூர்த்தத்தில் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. அடியவர்கள் தரிசித்து திருவருள் பெறுவீர்களாக. தொடர்ந்து 15 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்- உபயம் செய்ய விரும்புபவர்கள் ஆலயத்தில் தொடர்பு கொள்ளவும்.
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இலந்தைக்கூடல், மீசாலை.
திருப்பணியில்: பா. முரளீதரக்குருக்கள்



தெல்லிப்பழை தென்மேற்கு - விழிசிட்டி
அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய
பொதுக் கூட்ட அறிவித்தல்

மேற்படி ஆலய அங்கத்தவர் பொதுக் கூட்டம் இந்த ஆலய மண்டபத்தில் எதிர்வரும் (22.01.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல், 10 மணிக்கு நடைபெறும். ஆலய அங்கத்தவர்கள் தவறாது சமுகமளிக்கவும்

(13171) (45-6)
பரிபாலன சபையினர்


## மூன்றாம் வருட நினைவஞ்சலி



அமரர்
**சற்குணநாதன் குலதாசன்**
(உப அஞ்சல் அதிபர், விடத்தற்பளை)
தோற்றம் 27★ 03 ★ 1977
மறைவு 19 ★ 01 ★ 2009

ஓடிப்போனதடா மூன்று வருடம்
உன்னை மறந்ததேயில்லை ஒரு நிமிடம்
ஆறாது தவிக்குது எங்கள் உள்ளம்
அழுது வெறுமையானது எங்கள் இல்லம்
அன்பு தவழும் உந்தன் முகம் அதை
நினைக்கையில் துடிக்குது எங்கள் மனம்
எங்கெங்கோ இருந்தாலும் தினம் தினம்
விழிகள் நீர் சொரியுது
உன் நினைவைச் சுமையாக்கி விட்டு நீ
தங்கிவிட்டாய் விண்ணுலகத்தில் எமை மறந்து
வந்தகடன் முடித்து வானுறையச் சென்ற உன்னை
என்றும் மறவாத நினைவிருக்கும்

விடத்தற்பளை, மிருசுவில்.
என்றும் உன் நினைவுடன்: குடும்பத்தினர்.
(13013)(2-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடாநாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு தீவிரம்

யாழ்ப்பாணம், ஜன.18

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் ஒழிப்புச் செயற் திட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் 22ஆம் திகதி வரை இந்தச் செயற் திட்டம் நடைபெறவுள்ளது.

உடுவில் பிரதேச செயலகம், உடுவில் பிரதேச வைத்திய அதிகாரி பணிமனை, உடுவில் பிரதேச சபை, சுன்னாகம் பொலிஸார், பாடசாலை சுகாதாரக் குழுக்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மருத்துவ மாதுகள் ஆகியோர் இணைந்து செயற்படுத்தும் இந்தச் செயற் திட்டத்தில் வீடுகள், பொது இடங்கள் போன்ற இடங்களில் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு, குப்பிளான் வடக்கு, தெற்கு ஆகிய பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்ட டெங்கு ஒழிப்பில் இன்று புதன்கிழமை சுன்னாகம் நகரப் பகுதியை அண்மித்த கிராம அலுவலர் பிரிவுகளிலும், நாளை வியாழக்கிழமை சுன்னாகம் நகரப் பகுதியை அண்டிய அயல் கிராம அலுவலர் பிரிவுகளிலும் உடுவில் பிரதேசமும், எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை உடுவில் சங்குவேலி பகுதிகளிலும், எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை தாவடி மற்றும் இணுவில் பகுதிகளிலும், எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஏற்கனவே பரிசோதனை செய்யப்பட்டு டெங்குநோய் பரவும் சூழலாக இனங்காணப்பட்ட பிரதேசங்களிலும், பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (எ-86)

## 'பிரிந்து' செல்வோர் எடுத்துச் செல்லும் ரயில்வே கூரைகள்

யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான விடுதிகளில் உள்ள பொருள்களைக் களவாடிச் செல்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடுதிகளை விட்டுச் செல்வோர் விடுதிகளில் உள்ள பொருள்களைக் களவாடிச் செல்கின்றனர். விடுதிகளின் பின்பக்கக் கூரைகளைப் பிரித்தும் களவாடிச் செல்கின்றனர்.

இது சம்பந்தமான முறைப்பாடுகள் ரயில்வே திணைக்களத்துக்குக் கிடைத்துள்ளதாகவும் களவாடிச் செல்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-17)

## புகையிலைச் செய்கை வேலணையில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.18

வேலணைப் பகுதியில் தற்சமயம் புகையிலைச் செய்கை அதிகரித்துள்ளதாக வேலணை கமத்தொழில் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புகையிலை விலையேற்றம் காரணமாகவே உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும், மண்டைதீவில் இம்முறை விவசாயிகள் நெல் உற்பத்தியில் ஈடுபட்டபோதும் அவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**வேலணைப் பிரதேசத்தில் 235.52 ஹெக்டேயரிலும், நெடுந்தீவு புங்குடுதீவுப் பகுதிகளில் மொத்தம் 46.5 ஹெக்டேயரிலும் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது**

கட்டாக்காலி மாடுகளின் தொல்லைகளாலும் நெல் விளைச்சல் பாதிப்படைந்து காணப்படுவதாகவும் நெல் விலையேற்றம் இன்மையும் இம்முறை விவசாயிகள் நெல் உற்பத்தியில் அதிக நாட்டம் கொள்ளாததற்கு காரணமாகிறது எனவும் கூறப்பட்டது.

இம்முறை வேலணைப் பிரதேசத்தில் 235.52 ஹெக்டேயரிலும், நெடுந்தீவு புங்குடுதீவுப் பகுதிகளில் மொத்தம் 46.5 ஹெக்டேயரிலும் நெல் உற்பத்தி பண்ணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-7)

## முத்திரை 'ஸ்கந்தா' வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன.18

தெல்லிப்பழை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் 118ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் தபால் அமைச்சினால் புதிய முத்திரை வெளியிடப்பட்டது.

கடந்த 8ஆம் திகதி மாலை 5 மணிக்கு மேற்படி மண்டபத்தில் கல்லூரி பழைய மாணவர் ந.கருணை ஆனந்தன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக சிரேஷ்ட மனித வள அமைச்சர் டியு.குணசேகரா கலந்துகொண்டு முத்திரையை வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து கல்லூரி அதிபர் ஆறுதிருமுருகன் வாழ்த்துரையை வழங்கினார்.

மேலும் பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.பரமநாதன், கொழும்பு பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.பத்மநாதன் உட்படப் பலர் உரையாற்றினர்.

ஸ்கந்தவரோதயா கல்லூரி மாணவிகள் வழங்கிய 'மாதவியின் துறவறம்' என்ற நாட்டிய நாடகமும் இடம் பெற்றது. (எ-36)



*சங்கானை பட்டர்பிளை சர்வதேச பாடசாலையின் வருடாந்த சிறுவர் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் பி.வரதராஜா மங்கல விளக்கேற்றி சிறுவர் நிகழ்வினை ஆரம்பித்து வைக்கிறார். அருகில் அவரது பாரியார். (எ)*

## பஸ் போக்குவரத்து, குடிதண்ணீர் வசதிகளை உடன் சீர் செய்க

### மண்டைதீவு மக்கள் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜன.18

மண்டைதீவு பஸ் போக்குவரத்து மற்றும் குடிதண்ணீர் விநியோகச் சேவைகளை உடன் சீரமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 6.20 க்குப் புறப்பட வேண்டிய பஸ் குறிப்பிட்ட நேரத்துக்குப் புறப்படுவதில்லை எனவும் அதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து மேற்படி பஸ்ஸில் மண்டைதீவுக்குச் செல்லவேண்டிய மக்கள் நீண்டநேரம் பஸ் நிலையத்தில் காத்திருந்து அடுத்து புறப்படும் பஸ்ஸிலேயே வரவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் மண்டைதீவில் இருந்து யாழ்.நகர் செல்ல வேண்டிய மக்கள் குறிப்பாக மாணவர்கள் யாழ்.நகர் செல்வதிலும் தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுவதுடன் குடிதண்ணீர் சேவையும் ஒழுங்காக குறிப்பிட்ட நேரத்துக்கு இடம்பெறுவதில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் பாவனையாளர்கள் பெரும் சிரமப்படவேண்டியுள்ளதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-7)

## மோசமான நிலையில் இராசபாதை வீதி

யாழ்ப்பாணம், ஜன.18

கோப்பாய் இராசபாதை வீதி மோசமான நிலையில் சேதமடைந்திருப்பதால் அந்த வீதியூடாகச் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இராசபாதை வீதி பூங்கனிச் சோலை முன்பாகவும், கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அருகிலும் சேதமடைந்து காணப்படுகிறது.

இரு இடங்களிலும் ஐந்து மாதத்துக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 3 தடவைகள் வீதி புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மீண்டும் அந்த வீதி சேதமடைந்து காணப்படுகிறது.

பருத்தித்துறை வீதி அகலிப்பு வேலைகள் இடம் பெறுவதால் அநேகர் இராசபாதை வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

எந்த நேரமும் சைக்கிள் தொடக்கம் பார ஊர்திகள் வரை இந்த வீதியூடாகப் பயணிக்கின்றன.

**பருத்தித்துறை வீதியில் அகலிப்பு வேலைகள் இடம் பெறுவதால் எந்த நேரமும் சைக்கிள் தொடக்கம் பார ஊர்திகள் வரை இந்த வீதியால் பயணிக்கின்றன**

ஆகவே இந்த வீதியைத் தரமான முறையில் புனரமைப்புச் செய்து தருமாறு மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதியைப் புனரமைப்புச் செய்யும்போது தரமானதாகச் செய்யுமாறும் மாதத்துக்கு ஒரு தடவை செய்யாது ஆகக் குறைந்தது ஒரு வருடமாவது பயன்படுத்தும் முறையில் புனரமைப்புச் செய்து தருமாறு மக்கள் மேலும் கேட்டுள்ளனர். (எ)

## சங்கிலி அறுக்க முயன்ற வைத்தியர்

யாழ்ப்பாணம், ஜன.18

வைத்தியர் எனக் கூறி வீட்டுக்குள் சென்றவர் தனிமையிலிருந்த வயதான பெண்ணின் சங்கிலியை அறுக்க முயன்ற சம்பவம் கல்வியங்காட்டுப் பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தை அண்டிய ஞானபாஸ்கரோதய விளையாட்டு மைதானத்துக்கு அருகில் செல்லம்மா என்பவரின் வீட்டிலேயே தைப்பொங்கலுக்கு முதல் நாள் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தத் திருட்டு முயற்சி தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

நடுத்தர வயதுடைய நபர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் குறித்த பெண்மணியின் வீட்டுக்கு வந்து இரத்த அழுத்தம் இருக்கிறதா என்று சோதித்துச் சொல்கிறேன் அம்மா எனக் கூறி வீட்டுக்குள்ளே நுழைந்தார்.

இரத்த அழுத்தம் சோதிப்பது போல் வயதான பெண்ணின் கையில் உபகரணம் ஒன்றை வைத்துப் பரிசோதித்த நபர் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியை அறுக்க முயன்றுள்ளார். வயதானவர் உடனே கத்திக் கூக்குரலிட வந்தவர் ஓடிச்சென்று தப்பி விட்டார். (எ-14)

## முதியோருக்கு 'கிளினிக்' சாவகச்சேரியில் தேவை

தென்மராட்சி, ஜன.18

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் முதியோர்களுக்குத் தனியான வைத்திய சிகிச்சைப் பிரிவை ஆரம்பிக்க வேண்டும். இவ்வாறு இந்த வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் சார்பாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவு மற்றும் ஏனைய சிகிச்சைகளை பெற வரும் முதியோர்கள் பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் உடல் உபாதை அதிகரிப்பதாகவும், எனவே தமது நிலையைக் கருத்திற்கொண்டு தனியான சிகிச்சைப் பிரிவை ஆரம்பித்து உதவுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

இவ்வாறு முதியோருக்கு தனிப்பட்ட கிளினிக் வேறு சில வைத்தியசாலைகளில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன்படி 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தனியான கிளினிக்கை ஆரம்பிக்க சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை நிர்வாகத்தினரும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கேட்டுள்ளனர். (ஙு-10-207)

## படையினர் வெளியேற மின்சாரமும் 'விடைபெற்றது'

யாழ்ப்பாணம், ஜன.18

மண்டைதீவு வித்தியாலயத்தில் கணினிக் கற்கை நெறிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் படையினர் பயன்படுத்திய மின்சாரத்தினைப் பயன்படுத்தியே பாடசாலையில் கணினி கற்கைநெறிகள் நடைபெற்று வந்தன. படையினர் அந்தப் பகுதியில் இருந்து வெளியேறிய பின் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலை மாணவர்கள் மட்டுமல்லாது மாலைநேர கணினிக் கல்வியைத் தொடரும் கணினி கற்கும் ஆர்வமுள்ளவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமக்கு எப்போது மின்சாரம் கிடைக்கும் தமது வாழ்வுக்கு எப்போது ஒளி பிறக்குமென அங்கலாய்க்கின்றனர்.

இக் கிராமத்தில் 1990க்கு முதலே மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதுவரையும் அவர்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இவ்விடயத்தில் அக்கறை எடுத்து ஆவன செய்யுமாறு மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். ([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழா காணும் நாயகியை வாழ்த்துகின்றோம்

### திருமதி ஜெயதேவி சுஜிதன்

(SLTS-1,Spe.Tr.in English,
பகுதித்தலைவர், பாட இணைப்பாளர்)



சேவைக்காலம்:
மு/முத்தையன்கட்டு வலதுகரை
(1983.05.02 - 1983.05.18)
மு/கருவேலன்கண்டல் அ.த.க.பா
(1983.05.19-1987.12.31)
மு/விஸ்வமடு அ.த.க.பா
(1988.01.05-1989.08.15)
யா/முத்துத்தம்பி ம.வி
(1989.08.16-1990.02.28)
யா/இந்து மகளிர் கல்லூரி
(1990.03.01-2012.01.15)

வளம் கொழிக்கும் நீர்வேலிப் பதியில்
புகழ் பூத்த குடும்பமதில்
பூத்த பூங்கொடியாள்-ஜெயதேவி
கல்வியில் நாட்டம் மிகக்காட்டி
ஆங்கிலத் துறையை அழகாகத் தேர்ந்தெடுத்து
அகிலத்தோர் போற்றும் வண்ணம்
நயமாகக் கற்பித்து
இந்து மகளிர் கல்லூரி மாணவிகள்
நலனோம்பலில் நாட்டம் மிகக்காட்டி
நல்லாசிரியராய் பகுதித் தலைவராய்
கடமையும் ஒழுக்கமும் மேலோங்க
பணிகள் பல புரிந்து
அகவை அறுபதில் இளைப்பாறும்-எம்
ஆசிரியை நலம் பலபெற்று பல்லாண்டு
இனிதே வாழ வாழ்த்துகிறோம்.

பாடசாலை சமூகம்,
யாழ்/இந்து மகளிர் கல்லூரி.

(13185) (7,22,10)

## நன்றியுடன் வாழ்த்துகின்றோம்



கரவெட்டி பிரதேச செயலராக நிகரற்ற சேவைநலம் பெருக்கி, எமது ஆலய வளர்ச்சிக்கு அரும்பணி நல்கி, ஆலய அறநெறிப் பாடசாலை விருத்திக்கும் மேலாக எமது ஆலய வரலாற்றின் ஆவணப்படுத்துகையாக வெளிவந்த 'சிவநெறி 02' எனும் இறுவட்டினூடாக, சமய விழுமியப்பண்புகளின் விருத்திக்கு அடித்தளமிட்ட

### திருமிகு சிவலிங்கம் சத்தியசீலன்

அவர்கள் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக பதவி உயர்வு பெற்றுள்ளமையையிட்டு எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் இவ்வேளை அவர் மென்மேலும் பல உயர்வுகள் பெற்று வாழ்வில் சிறக்க எல்லாம் வல்ல எம்பெருமாட்டியின் ஆசிகளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்**
நெதிரி உல்லியனொல்லை கண்ணகை அம்பாள் தேவஸ்தானம்
நெதிரி கரவெட்டி

(12653) (45-7-22)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கேதீஸ்வரன் விஜயநந்தினி



தோற்றம் - 26.12.1969
மறைவு - 10.01.2010

திதி - அபரபட்ச தசமி
திதி - 18.01.2012

குடும்பத்தின் குலவிளக்காய் அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் - சுடர் பரப்பி
நற்பண்புகளுடன் எமை வழி நடத்தி
எமக்காகவே வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே
நீங்கள் மீளாத்துயில் கொண்டு - ஈராண்டுகள்
ஓடி மறைந்து விட்டதென்று நம்ப முடியவில்லை- எம்
ஆழ் மனதில் சோகம் ஆழ்கடல் போல் இருந்தாலும்
நாளும் பொழுதும் எம் இதயத்தில் அகல்விளக்காய்
பிரகாசித்துக் கொண்டுதான் இருக்கின்றீர்கள்.
ஆற்றுவாரும் தேற்றுவாரும் பலர் இருந்தும்
அனலிடைப்பட்ட புழுவாய்த் துடிக்கும் - எங்களுக்கு
ஒப்பாக உங்களைப் போல் யாரைத்தான்
காணமுடியும் தாயே!...?

உங்கள் நினைவழியா,
கந்தர்மடம். கணவன் மற்றும் பிள்ளைகள்.

## வீடு விற்பனை

இல.27, 6ஆம் குறுக்குத் தெரு, குருநகர் யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் வீடு விற்பனைக்குண்டு, மற்றும் யாழ். நகரை அண்டிய பகுதிகளிலும் வீடுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு- 0779398896

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

13.01.2012 வெள்ளிக்கிழமை கண்டி வீதி, கொடிகாமத்தில் மின்னிணைப்புப் பொருள்கள் (Vairing) அடங்கிய பெட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் மிதிலை புத்தக நிலையம் கொடிகாமம் எனும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

## அறை வாடகைக்கு உண்டு

யாழ். வைத்தியசாலை வீதியில் படிக்கும், தொழில்புரியும் இரு பெண்கள் தங்கக்கூடிய அனைத்து வசதியும் கொண்ட அறை வாடகைக்குண்டு.
தொடர்பு- 0779238376, 0758040920

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள செல் மொடல் வெள்ளை நிறமுடைய வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0776158977

17-01-2012 உதயனின் 26ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய திருமதி லூர்த்துமலர் அமிர்தநாதன் எனும் மரண அறிவித்தலை, கச்சாய் புனித இராயப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் கச்சாய் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என வாசிக்கவும்.

## நெல்லியடியில் வீடு விற்பனைக்கு

நெல்லியடி முருகன் கோயில் வீதியில் 1¾ பரப்புக்காணியில் அமைந்த வீடு உடன் விற்பனைக்கு.

தொடர்பு : 0777111001 (10196)

## மணமகள் தேவை
### ஆனந்தி திருமண சேவை

1983இல் பிறந்த ரேவதி, செவ்வாய் தோஷம் அற்ற கிரகபாவம் 13 ½ மட்டக்களப்பில் பிறந்த, நில அளவைத்துறையில் டிப்ளோமா பெற்று யாழ்ப்பாணத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிபவருக்கு வெளியூர் மணமகள் தேவை:
தொடர்பு :V.A. சிவராசா சோதிடர்
56, அம்மன் றோட், கந்தர்மடம்
யாழ்ப்பாணம். தொ.பே: 0212228708 (13195)

## தேயிலை விற்பனைக்குண்டு

தரமான No.1 மலை நாட்டுத் தேயிலை யாழ்ப்பாணத்தில் மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ ரூபா 300/=இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
Note
மொத்த வியாபாரி, தேநீர்க் கடை (Hotel) போன்றவற்றுக்கு விசேட கழிவு விலையில் வழங்கப்படும். (Free Delivery)
Tel: 0776220087 (சி/7913) (45-7-22)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, நல்லூர் கந்த சாமி கோயிலுக்கு சமீபமாக 1½ பரப் புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: 077 3120259

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் இயக்குநர் சபை உறுப்பினர்
திருமதி தவமலர் ஆனந்தராஜா
அவர்களின் அன்புத்தாய்

### திருமதி பாக்கியம் துரையப்பா

அவர்கள் 17.12.2011 சனிக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் மாவட்ட சி.க.கூ.
சங்கங்களின் சமாசத்தலைவர்,
செயலாளர், இயக்குநர் சபை
உறுப்பினர்கள், பணியாளர்கள்.

(C/7845)(5,7,22)

## மணிவிழா நாயகனாம் எங்கள் பிரதிக்கல்விப் பணிப்பாளரை மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம் (09.01.2012)



கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் தன்னை அர்ப்பணித்து நல்லாசிரியராக, பகுதித்தலைவராக, உப அதிபராக, அதிபராக, கொத்தணி அதிபராக, உதவிக்கல்விப் பணிப்பாளராக, பிரதிக்கல்விப் பணிப்பாளராக அயராது பணிபுரிந்த ஆற்றல் மிகு பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)

### கிட்டினபிள்ளை சின்னராசா

அவர்களின் தன்னிகரற்ற சேவையைப் பாராட்டுவதுடன், அவர்தம் குடும்பத்தாருடன் நோய் நொடியின்றி நீடூழி காலம் வாழ இறையருள் கிட்டுவதாக.

பாடசாலைச் சமூகம்,
(13191)(5,7) கிளி/உமையாள்புரம் அ.த.க. பாடசாலை.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி தங்கம்மா மயிலுப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியை, சாவகச்சேரி இந்துக்கல்லூரி)



தோற்றம் : 23-09-1926
மறைவு : 18-01-2008
திதி: 03.02.2012

துணைவியென்று வந்து துணையாக நீயிருப்பாய் என்றிருக்க தூர விலகியென்னை தனிமரமாய் தவிக்கவிட்டு அம்மா என்ற உறவை வளர்த்து உவப்புறவே வாழவைத்து - எம் ஆன்மாவை அதிரவைத்து அகன்று விட்ட எம் தாயே மாமியென்றும் பேரன் பேத்தியென்ற உறவுகளை ஏங்கவைத்து மௌனித்துப் போய்விட்ட மர்மம் என்ன நாமறியோம். மறவோம் நாம் மறவோம் என்றென்றும் நினைத்திருப்போம் நான்காண்டென்ன! நம் உயிர் உள்ளவரை.

என்றும் உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தனைசெய்யும்,
கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

16/9, பொலிஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி. (13189)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எமது ஆசிரிய சகோதரத்துவ உறுப்பினர்
க.உதயசந்தர் ஆசிரியர் அவர்களின்
அன்புத் தாய்

### திருமதி கமலாதேவி கணேசலிங்கம்


அவர்களின் 31ஆம் நினைவு நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
சாவகச்சேரி.

(C/2913)(5,7,22)

## மரண அறிவித்தல்

### செல்லன் கேதீஸ்வரன் (வரதன்)



மந்திரிமலை புத்தூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் வல்லியாவத்தை கரணவாய் மேற்கை வசிப் பிடமாகக் கொண்ட செல்லன் கேதீஸ்வரன் 15-01-2012 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அகால மரண மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லன்-தங்கச்சியம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் கரணவாய் மேற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை-பார்வதி தம்பதியரின் மருமகனும், வதனமதியின் அன்புக் கணவரும், லலித், சியாமினி, ஷியாந்தன், லிசானுகா ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-01-2012) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லியாவத்தை,
கரணவாய் மேற்கு. (12654)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பாரதிக்கு வெற்றிக் கிண்ணம்



புதியபாரதி வி.க.



பரந்தன் இளைஞர் வட்ட வி.க.

வலி. வடக்கு, ஜன 18

ஜனாதிபதி வெற்றிக் கிண்ணத்துக்கான கிளிநொச்சி மாவட்ட பெண்கள் கரப்பந்தாட்ட அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் கிளிநொச்சி புதிய பாரதி விளையாட்டுக்கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பரந்தன் இளைஞர் வட்டம் விளையாட்டுக் கழகமும் பாரதிபுரம் புதிய பாரதி விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு சுற்றுக்களை புதிய பாரதி விளையாட்டுக் கழகம் 25:18, 25:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

(ம-86)

# இரண்டாம் சுற்று ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.18

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவை யொட்டிப் 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இந்த சுற்றுப்போட்டித் தொடரின் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறவுள்ளது.

இதில் தென்றல் விளையாட்டுக்கழகம், அம்மன் விளையாட்டுக் கழகம், மருத நிலா விளையாட்டுக் கழகம் ஈகிள் விளையாட்டுக்கழகம், யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம், ஈஸ்வரன் விளையாட்டுக் கழகம் கோல்டன் பிரதர்ஸ் விளையாட்டுக்கழகம் உதய தாரகை விளையாட்டுக் கழகம் ஆகியன கலந்து கொள்ளவுள்ளன. (த-28)



## பாடசாலைகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜன.18

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயது, 19 வயது பிரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை வியாழக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

17 வயதுபிரிவு

* வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக்கல்லூரி
* வட்டு மத்திய கல்லூரி எதிர் அருணோதயாக் கல்லூரி.
* இணுவில் மத்திய கல்லூரி எதிர் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்
* இளவாலை கென்றியரசர் கல்லூரி எதிர் ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயம்.

19 வயது பிரிவு

வட்டு இந்துக்கல்லூரி எதிர் புனித கென்றியரசர் கல்லூரி.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி எதிர் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி.

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி எதிர் இணுவில் மத்திய கல்லூரி. (த-86-23)

# எமில் ரூபனுக்கு கௌரவம்



வலி.வடக்கு ஜன 17

இளவாலை யங் ஹென்றீஸ் விளையாட்டுக்கழக வீரன் முடியப்பு எமில் ரூபன் யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகத்தில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்துகொண்டு விளையாடிவருவதை கௌரவிக்கும் வகையில் விளையாட்டுக் கழகத்தினால் பொற்கிளி வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளார்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியின் பரிசிளிப்பு நிகழ்வின்போது விளையாட்டுக்கழகத்தினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி இடம் பெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டியைத் தொடர்ந்து இவரின் கௌரவிப்பு இடம்பெற்றுள்ளது. (த-86)

## மலர்மகளை வெற்றி கொண்டது உதயதாரகை

யாழ்ப்பாணம், ஜன.18

வவுனியா பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்,பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டி இறுதியாட்டம் கடந்த வாரம் வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

ஆண்கள் பிரிவில் இறுதியாட்டத்தில் உதய தாரகை விளையாட்டுக்கழக அணியை மலர் மகள் விளையாட்டுக்கழகம் மோதியது.

இரண்டு அணியினரும் தத்தமது அணியின் வெற்றிக்காக கடுமையாகப் போராடினர்.

ஆட்ட முடிவில் உதயதாரகை விளையாட்டுக் கழகம் 79:76 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இவ் வருடச் சம்பியனானது. (த-23)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

'ஷில்ப கர்மாந்த-2011' தேசிய விருது வழங்குவதற்கான தெரிவில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் வேறு உற்பத்திகள் மற்றும் சேவைகள் எனும் துறையில் 167, நாவலர் வீதியைச் சேர்ந்த

**ம.மகேந்திரலிங்கம்** (தவம் போட்டோ)

அவர்கள் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும், மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல சாதனைகள் புரிய வாழ்த்துகின்றோம்.

மீசாலை மேற்கு,
மீசாலை.

சு.விநாயகமூர்த்தி (ஆசிரியர்)
குடும்பத்தினர்.

(C/2914)(5,7,22)

தைப் பொங்கலை முன்னிட்டு

ஆண்டுதோறும்

**சரவணா ரெக்ஸ்**

இன் மாபெரும்

**பிரமாண்டமான மலிவு விற்பனை**

**இடம்:**

கே.கே.எஸ். வீதி தட்டாதெருச் சந்தியில்
இருந்து இடது பக்கமாக 300m தூரத்தில்
உள்ள கெங்காதரன் மருத்துவமனை முன்பாகவுள்ள
சிவப்பிரகாசம் வீதி (ஆடித் தள்ளுபடி நடைபெற்ற இடம்)

**காலம் : 11.01.2012 முதல்**
**நேரம் : காலை 9.00 மணிமுதல்**
**இரவு 7.30 மணிவரை**

△ இந்தியன் திருமணப் பட்டு சாறிகள்
△ இந்தியன் சீக்குன்ஸ் சாறிகள்
△ இந்தியன் சில்க்ஸ் சாறிகள்
(Office ware Sarees)
△ இந்தியன் கொட்டன் சாறிகள்
(Office ware Sarees)
△ இந்தியன் பஞ்சாபிகள் பஞ்சாபித் துணிகள் மற்றும்
அனைத்து ஆடைத் தெரிவுகளும்








இவ் வருடம்
முழுவதற்குமான விசேட
தள்ளுபடி

ஆடித் தள்ளுபடி
நடைபெற்ற
விஸ்தீரணமான
இடத்தில்

Office
ware Sarees
Special
Selection

தைப் பொங்கலை முன்னிட்டு
இந்தியாவில் இருந்து விசேடமாக
இறக்குமதி செய்யப்பட்டது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்பாலும் பண்பாலும் எம்
அனைவரையும் அரவணைத்த
எம் அன்புத் தெய்வமே நீங்கள்
மீளாத்துயில் கொண்டு
ஓராண்டு ஓடி முடிந்து விட்டதையே நம்ப
முடியவில்லை எம்
ஆழ்மனதில் சோகம் ஆழ்கடல் போல்
பரந்து மாமலைபோல்
உயர்ந்து நின்ற போதும்
நாளும் பொழுதும் எம் இதயத்தில்
அகல் விளக்காய்ப் பிரகாசித்துக்
கொண்டிருப்பதனால் உங்களை
மறக்க முடியாது தானே!
நீங்கள் எங்களுடன் வாழ்ந்த
நாள்களும் நீங்காத நினைவுகளும்
என்றும் ஆறாதவை
உங்கள் நினைவே எங்களுயிர் மூச்சாய்
வாழ்கின்றோம்.

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி 21.01.2012 அன்று (சனிக்கிழமை) பொற்பதி புனித இராயப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட
அழைப்பாகவும்
ஏற்றுக் கொள்ளவும்)

அமரர்
**மனுவிற்பிள்ளை**
**செல்வராசா (பீற்றர்)**

பிறப்பு 10.12.1947
இறப்பு 21.01.2011

பொற்பதி,
குடத்தனை
0771494153

திருமதி செல்வராசா தவமணி
குடும்பத்தினர்.

(அ/7849)(2-25-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசில் வழங்கல்

தென்மராட்சி, ஜன.18

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த 40 பாடசாலைகளில் தரம் ஒன்று வகுப்பில் இணைந்த மாணவர்களுக்கு சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியினர் விசேட பரிசில்களை வழங்கியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கால்கோள் விழாவில் வைத்து 500க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு அவர்கள் பரிசில்களை வழங்கினர். இதேவேளை, தேசிய சேமிப்பு வங்கி யால் சிறுவர் சேமிப்புக் கணக்கான 'ஹப்பன் புந்தி' கணக்குக்கு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ந-207)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தங்கராசா

*(கிளாக்கர் அல்லது சின்னக்கிளி)*

*(பிரபல வர்த்தகரும் கஜானி, அம்பாள் லொறி உரிமையாளரும்)*



சுன்னாகம் வரியப்புலத்தைப் பிறப்பிடமாகவும் புகையிரத நிலைய வீதி, சுன்னாகத்தைப் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தங்கராசா 17.01.2012 செவ்வாய்க்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பவானியின் அன்புக் கணவரும் சுரேஸ்குமார் (கண்ணன், கனடா), தினேஸ்குமார், கணேஸ்குமார், கபிலாஜின் (விளையாட்டு விஞ்ஞான பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்), கஜானி (யா/ யூனியன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.*
*021 224 0037.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## சபரிமலை விபூதிப் பிரசாதம்

### ஐயப்பன் காவல் நூல் வழங்கல்

அகில இலங்கை சபரிமலை
ஸ்ரீ சாஸ்தாபீடத்தின் **29ஆவது ஆண்டு**
சபரிமலை யாத்திரை நிறைவை முன்னிட்டு
**சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி**
சிவாகம கலாநிதி சபரிமலைக் குருஜீ
ஆன்மீக அருள்ஜோதி கலாநிதி
**ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்**



தலைமையில் யாழ்/ மாவட்ட அடியார்களுக்கு சபரிமலை விபூதி, ஐயப்பன் காவல் நூல்கட்டும் நிகழ்வு 19.01. 2012 வியாழக்கிழமை பகல் 12 மணிமுதல் 2 மணிவரை சங்கானை இலுப்பைத்தாழ்வு முருகமூர்த்தி கோயிலிலும் பி.ப. 3 மணி முதல் 6 மணிவரை நல்லை ஆதீனத்தில் நடைபெறும்
அனைவரும் வருக! ஐயன் அருள் பெறுக!

*பிரம்ம ஸ்ரீநித்ய சுதானந்த சர்மா*
*(IDM சங்கானை)*

# வாழ்த்துக்களும் வரவேற்பும்



வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில்
தன் கடமையை நிலைநிறுத்தி இடமாற்றலாகிச்
சென்ற பிரதேச செயலர் **திருமதி தேவந்தினி பாபு**
அவர்களுக்கு எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் தன்
செயற்பாட்டுக் காலங்களில் கண்ட
ஆற்றல்மிகு செயல் வீராங்கனையே
பெண்ணரசியாய் புனிதமுறும் நிர்வாக தலைமைப் பணி புரிந்து
பெண்மியத்தின் ஆற்றலுக்குப் பொற்காலம் அமைத்து
பெருமை மிகு சிறப்பு நிலைகளை வலி.மேற்குப் பிரதேசத்துக்கு
சீரமைத்த நேரிழையே - உமக்கு நிகர் நீரே!!!
பொதுமக்கள் சேவையே மன்னர் சேவையென
வலி.மேற்கின் அபிவிருத்தியில் ஆர்வமுடன் பணிபுரிந்து
பணிநிலையில் மக்களின் மனதில் ஆழமான இடம்பிடித்து
சங்கை மண்ணின் அரசியாய் திகழ்ந்திட்ட
தேவந்தினி பாபு எனும் பெருமை மிக்க பேரரசியே
உழைப்பால் உயர்வு கண்ட உத்தமியே ஆறாண்டு காலம்
தொழிலகமே குடும்பமாய் தித்திக்கப் பணிபுரிந்து
திரைகடல் கடந்து காரையில் பணியாற்றச் செல்லும்
காலமதில் உங்களுக்கு
எம் மனம் கனிந்த வாழ்த்துக்கள்!
வாழ்த்தும் வேளையிலும் பிரிவால்
நோகும் எம்மனத்தைநிலைநிறுத்தி மீண்டும்
ஒன்றாய் வாழ்த்துகின்றோம்
என்றும் வளர்க!! வளமுடன் வாழ்க!! !

புதிய பிரதேச செயலராகக் கடமையேற்றுள்ள
**திரு அ.சோதிநாதன் அவர்களுக்கான**
வரவேற்பும் வாழ்த்தும்

சீர் மிகுந்த சங்கை நகர் பிரதேச செயலகத்தில்
புதியதொரு துருவ நட்சத்திரமாய்
புதுவரவு காட்டிப் புகுந்துள்ள பொன்மகனே!!
உமது பணியில் இம்மக்கள் மனை ஓர் பொற்காலம் காணட்டும்!
பீடும் பெருமையும் பெருவளமும் பெருநலமும்
இங்கே பக்தி பெருக தங்கள் பணிக்காக
தயவுடன் கரந்தந்து காத்திரமாய் வரவேற்கின்றோம்
திசை எட்டும் உம்பணியின் பெருமை புகழ் பேசட்டும்.

**வாழ்த்துவோர்:**

கந்தசாமி அன் சன்ஸ்
சுகா பட மாடம்
பாக்கியரத்தினம் [illegible] விற்பனை நிலையம்

புதிய வினோ நகை மாடம்.
ஆசைப்பிள்ளை அன் சன்ஸ் நகைமாடம்
(சங்கானை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாடியது மழை!

முதலிரண்டு ஒரு நாள் ஆட்டங்களையும் தென்னாபிரிக்க அணி வெற்றி கொண்டிருந்தது. நேற்றைய வெற்றியின் மூலம் 3:0 என்ற ரீதியில் இலங்கையுடனான தொடரை தென்னாபிரிக்கா தன்வசமாக்கிக் கொண்டது.



தொடர்ச்சியான தோல்விகள் மூலம் துவண்டிருந்த இலங்கை அணி நேற்றைய ஆட்டத்தில் உத்வேகத்தோடு ஆடியபோதும் அவர்கள் மழையிடம் தோற்றுப் போனார்கள்.

தென்னாபிரிக்காவுடனான மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்தில் குறுக்கிட்ட மழை தோல்வியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த தென்னாபிரிக்க அணிக்கு வெற்றியைப் பரிசளித்தது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு இலங்கை அணி விளையாடி வருகின்றது. முதலில் இடம்பெற்ற டெஸ்ட் தொடரை 2-1 என்று இழந்த நிலையில் ஒரு நாள் தொடர் ஆரம்பமானது. முதலிரண்டு ஒரு நாள் ஆட்டங்களையும் தென்னாபிரிக்க அணி வெற்றி கொண்டிருந்தது. தொடரை வெல்ல வேண்டுமாயின் இன்றைய ஆட்டத்தில் வென்றாகவேண்டிய கட்டாயத்தில் இலங்கை அணி களம் புகுந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தரங்க - டில்ஷான் களமிறங்கினர். கடந்த இரண்டு ஆட்டங்களிலும் ஓட்டமெதையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்த டில்ஷான் இந்த ஆட்டத்தில் ஆரம்பத்திலிருந்து நிதானமாக ஆடினார். மறு முனையில் தரங்க வேகமாக அடித்தாடினார். மிகவும் பொறுப்பாக ஆடிய இந்த ஜோடி 65 பந்துகளில் முதலாவது அரைச்சதத்தை கடந்தது.

சிறப்பாக துடுப்பெடுத்தாடிய தரங்க தனது 22 ஆவது சர்வதேச ஒரு நாள் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். பந்து வீச்சு பவர்பிளேயில் இலங்கை அணி வேகமாக ஓட்டங்களைக் குவித்ததுடன் முதலாவது இலக்கினையும் பறிகொடுத்தது. 18.3 பந்து பரிமாற்றங்களில் 94 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில், தரங்க 65 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள் 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 58 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். தரங்கவைத் தொடர்ந்து டில்ஷானும் 33 ஓட்டங்களுடன் டுமினியின் பந்து வீச்சில் ஆட்டமிழக்க இலங்கை அணி 20.1 பந்து பரிமாற்றங்களில் 102 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்தது.



அதன் பின்னர் ஜோடி சேர்ந்த சங்ககார - சந்திமால் இருவரும் வேகமாக ஓட்டங்களைக் குவித்தனர். தென்னாபிரிக்காவின் பந்து வீச்சை பதம் பார்த்து சங்கா விளாசினார். முதலிரண்டு ஒரு நாள் ஆட்டங்களிலும் சோபிக்கத் தவறிய சங்கா நேற்று வெளுத்துக் கட்டினார். 51 பந்துகளில் 50 ஓட்டங்களை மூன்றாவது இலக்குக்காக இணைப்பாட்டமாக இந்த ஜோடி பகிர்ந்தது. இருப்பினும் அணி 154 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சங்கா 37 பந்துகளில் ஓர் ஆறு ஓட்டம், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 38 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் துரதிஷ்டவசமாக 'ரன் அவுட்டானார்'.

சந்திமால் 36, மஹேல 15, குலசேகர 40, மத்தியூஸ் 15, நுவாக் குலசேகர 19, மலிங்க 2 ஓட்டங்களோடு ஆட்டமிழக்க இலங்கை 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்புக்கு 266 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப் பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணியை மலிங்க மிரட்டினார். அவரது பந்தில் சிமித் 2 ஓடடங்களுடனும், கிங்ரம் 13 ஓட்டங்களுடனும் 'கிளீன் போல்ட்' ஆயினர். எனினும் பிளஸிஸ் அரைச்சதம் கடந்து அணியைத் தூக்கி நிறுத்தினார். எனினும் டுமினி 25 ஓட்டங்களுடனும் அவரைத் தொடர்ந்து பிளஸிஸ் 72 ஓட்டங்களுடனும் அடுத்த டுத்து 'ரன் அவுட்' ஆக வெற்றி இலங்கையின் பக்கம் திரும்பத் தொடங்கியது. ஆனால் ஆட்டத்தின் 34 ஆவது ஓவரில் குறுக்கிட்ட மழை இலங்கையின் வெற்றிக் கனவுக்குத் தடைபோட்டது. மழை தொடர்ந்து பெய்ததால் 'டக்வேர்த் லூயிஸ்' முறைப்படி 4 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வென்றதாக அறிவிக்கப்பட்டது. ஆட்டநாயகனாக பிள ஸிஸ் தெரிவானார்.

(ங-15)




# சுழற்றிப் பிடித்தார் அஜ்மல்

## மாட்டிக் கொண்டது இங்கிலாந்து!

அஜ்மலின் சிறப்பான சுழற் பந்து வீச்சை சமாளிக்க முடியாத இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 192 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான் அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில் இலக்கு நஷ்ட மின்றி 42 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் டுபாயில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அணித்தலைவர் ஸ்ரோஸ், குக் ஆகியோர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். பாகிஸ்தானின் சிறப்பான பந்து வீச்சை சமாளிக்க முடியாத இந்த ஜோடி முதலாவது இலக்குக்காக 10 ஓட்டங்களை மட்டுமே பகிர்ந்த நிலையில் குக் 3 ஓட்டங்களுடன் மொஹமட் ஹபீஸின் சுழற்



பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த ரொரட் 17 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் ஸ்ரோரஸ் 19 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க அணி 42 ஓட்டங்களுக்கு மூன்றாவது இலக்கையும் இழந்தது. அடுத்து நுழைந்த பெல் 0, பீற்றர்ஸன் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற இங்கிலாந்து அணி 43 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது.

### ஹட்ரிக் நழுவல்

19 ஆவது பந்து பரிமாற்றத்தின் இறுதிப் பந்தில் ஸ்ரோரஸையும், 21 ஆவது பந்து பரிமாற்றத்தின் முதலாவது பந்தில் பெல்லையும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க செய்ததன் மூலம் ஹட்ரிக் வாய்ப்பை அஜ்மல் பெற்றார். இருப்பினும் அடுத்த பந்து வீச்சை மோர்கன் தடுத்தாட ஹட்றிக் வாய்ப்பு பறிபோனது. தொடர்ந்து அதே பந்து பரிமாற்றத்தின் 4 ஆவது பந்தில் பீற்றர்ஸனை ஆட்டமிழக்கச் செய்தார்.

வேகமாக முதல் ஐந்து இலக்குகளையும் இழந்த நிலையில் மோர்கன், மத் பிரையர் இருவரும் ஆறாவது இலக்குக்காக ஆறுதல் இணைப்பாட்டத்தை பகிர்ந்து கொண்டனர். பாகிஸ்தானின் சுழலில் சிக்காமல் ஒருவாறு சமாளித்து 39 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டது. அணி 82 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மோர்கன் 24 ஓட்டங்களுடன் அஜ்மலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து களம்புகுந்த புரோட்டும் 8 ஓட்டங்களுடன் அஜ்மலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

94 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்து தடுமாறிக் கொண்டிருந்தபோது, பிரையர் - ஸ்வான் ஜோடி இணைந்து அணியை மெல்ல தூக்கி விட்டது. எட்டாவது இலக்குக்காக 57 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் ஸ்வான் 34 ஓட்டங்களுடன் அப்துர் ரஹுமானின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். சிறப்பாக ஆடிய மத்தியவரிசை துடுப்பாட்ட வீரரான பிரையர் தனது 19 ஆவது டெஸ்ட் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். பின்வரிசையில் ரெம்லெட் 1, அண்டர்ஸன் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 72.3 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 192 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. பிரையர் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் சயிட் அஜ்மல் 55 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய பாகிஸ்தான் அணி மொஹமட் ஹபீஸ், தௌபீக் உமர் ஜோடி சிறந்த அடித்தளத்தை அமைத்தது. நேற்றைய ஆட்டநேர நிறைவில் பாகிஸ்தான் அணி 15 பந்து பரிமாற்றங்களில் இலக்கு நஷ்டமின்றி 42 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் ஹபீஸ் 22, உமர் 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

(15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
18/01/2012

# தமிழர் மீதான கெடுபிடிகளை நீக்காவிடில் எதிர்கால விளைவுகள் விபரீதம் ஆகிவிடும்

## ஐ.தே.க எம்.பி சுவாமிநாதன் எச்சரிக்கை

வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் கெடுபிடிகளைக் கட்டுப்படுத்த அரசு தவறுமாயின் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை எதிர்கொள்ளவேண்டிவரும்.

- இவ்வாறு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சுவாமிநாதன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையிலும், தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் கெடுபிடிகள் முடிவுக்குக் கொண்டுவரப்படாமை தமிழ் மக்களின் எதிர்காலத்தை இந்த அரசு கேள்விக்குறியாக்கியுள்ளது என்பது நிரூபணமாகிறது.

**காணிகள் அபகரிப்பு, பாதுகாப்புக் கெடுபிடிகள், பொலிஸ் பதிவுகள், வெள்ளைவான் கடத்தல் ஆகியவை போன்ற சம்பவங்கள் தமிழ் மக்கள் மத்தியில் மேலும் பீதியை அதிகரித்துள்ளது.**

குறிப்பாக, இன்று வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் வாழும் தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்படும் கெடுபிடிகள் நாட்டின் வேறு எந்தப் பகுதியிலும் இடம்பெறுவதில்லை. கடந்த சில தினங்களாகத் தமிழ் மக்கள்மீதுமேற்கொள்ளப்படும் கெடுபிடிகள் அதிகரித்துக்கொண்டு வருகின்றமை கவலைக்குரிய விடயமாகும். இவைகளைக் கட்டுப்படுத்த அரசு தவறும் பட்சத்தில் பாரிய விளைவுகளை எதிர்காலத்தில் எதிர்நோக்க நேரிடும்.

2010 ஆம் ஆண்டு வன்னியில் கைதுசெய்யப்பட்ட இளைஞர், யுவதிகள் முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டு குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்பட்ட பின்னரும் மீண்டும் அடிக்கடி இவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை இளைஞர், யுவதிகளை மாத்திரமின்றி, குடும்பத்தினர்களையும் பெரும் அசௌகரியங்களுக்கு இட்டுச்சென்றுள்ளது. அதுமாத்திரமின்றி, இந்த இளைஞர், யுவதிகளுக்கு நிரந்தரத் தொழில் வாய்ப்புகளை மேற்கொள்ள முடியாத நிலையும், திருமண வாழ்க்கையை ஆரம்பிக்க முடியாத சூழலும் ஏற்பட்டுள்ளது.

அரசால் அறிவிக்கப்பட்ட 'டெங்கு ஒழிப்பு வாரத்தில்' டெங்கு ஒழிப்பில் ஈடுபட்டு வந்த வலிகாமம் வடக்கு தவிசாளர் மற்றும் பொது மக்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலை இந்த அரசு ஏற்றுக்கொள்கின்றதா என்ற கேள்வியையும் கேட்க விரும்புகின்றேன்.

இவ்வாறு இதற்கு முன்னரும் பொதுமக்கள் மீது வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது அரசு மௌனம் காத்தமையே இவ்வாறான தாக்குதல்கள் அதிகரிப்பதற்குப் பிரதான காரணமாகும்.

ஆரையம்பதி எல்லை வீதிக்கு அருகாமையில்அமைக்கப்பட்டிருந்த சுவாமி விவேகானந்தரின் உருவச்சிலை சேதமாக்கப்பட்ட சம்பவம் போன்ற சம்பவங்கள் தமிழ் மக்களைச் சீண்டும் செயற்பாடுகளாகும்.

மேலும், பலவருடகாலமாக சிறையிலடைக்கப்பட்டுள்ள தங்களது உறவுகளை தைப்பொங்கல் தினத்தன்று பார்க்கச்சென்ற உறவினர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட விடயம் அனுமதிக்க முடியாத மனிதநேயமற்ற செயற்பாடாகும்.

தமிழ் மக்களின் காணிகள் அபகரிப்பு, பாதுகாப்புக் கெடுபிடிகள், பொலிஸ் பதிவுகள், வெள்ளைவான் கடத்தல் ஆகியவை போன்ற சம்பவங்கள் தமிழ் மக்கள் மத்தியில் மேலும் பீதியை அதிகரித்துள்ளது.

வன்னியில் மீள்குடியேறிய மக்கள் அடிப்படை வசதிகள்கூட இன்றி அல்லல்படும் இச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கான நிவாரணங்களை வழங்காது, அவர்களைப் புறம்தள்ளிவிட்டு, தமிழ் மக்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் இவ்வாறான தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவர அரசு முன்வரவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## 3ம் ஆண்டு நினைவாக...

பூத்த மலராய்
1996
09
15



வாடிய மலராய்
2009
01
20

### மனோரஞ்சிதன் - பிரஷாந்

*பாசமிகு மலராய் பூமியிலே*
*அவதரித்தாய் எம்மிடம்*
*தாய் தந்தை சகோதரர்களை வியக்க*
*வைக்கும் பாசத்தை வைத்திருந்தாயே*
*படிப்பிலும் செயல்களிலும் வல்லவனும்*
*நல்லவனுமாய் இருந்தாயே*
*பாசமா பாசம் நீ வைத்த பாசம்*
*இப்போ அழுகுரலாய் ஒலிக்கிறதே*
*அடே தம்பி பிரஷாந்!*
*நீ வருவாய் என எண்ணி எண்ணி*
*காத்திருப்போம் எம் மூச்சு*
*ஓயும் வரை*

12/2, புது வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

உன் அன்பைப் பெற்ற அப்பா, அம்மா,
தங்கை, தம்பிமார்.

---

# 'இஸட்'புள்ளி முறைமையை நீக்கக் கோருகிறார் ரணில்

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவதில் இஸட் புள்ளி முறைமையை நீக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று வலியுறுத்தினார்.

2002-2004 ஆம் ஆண்டுகாலத்தில் ஆட்சியிலிருந்த தனது தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு இம்முறைமையை நீக்குவதற்கு முயற்சித்தது எனவும் ஆனால் ஜனநாயகத்திற்கு விரோதமான வகையில் 2004 ஆம் ஆண்டு தனது அரசு கலைக்கப்பட்டதால் அதை செய்ய முடியாமல் போய்விட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

ஆரம்பத்திலிருந்தே நாம் இஸட் புள்ளி முறைமையை எதிர்த்தோம். மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்பை நாம் விஸ்தரிக்க வேண்டும் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்று குளறுபடிகள் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பரீட்சைகள் திணைக்களத்தின் மீதான நம்பகத்தன்மை ஒருபோதுமில்லாத வகையில் பாதிக்கப்பட்டுள்ளது - என்றார்.

இக்குளறுபடிக்கு அமைச்சரவை பொறுப்பேற்க வேண்டுமென அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஒரு தடவை கூறினார். எனினும், அவை வெறும் வார்த்தை மாத்திரம்தான். இதற்கு பொறுப்பேற்பதற்கு ஒருவரும் இல்லை என்றும் ரணில் தெரிவித்தார்.

கல்வி அமைச்சராக தாம் பதவி வகித்தபோது இதேபோன்ற குளறுபடியொன்றையடுத்து பரீட்சைகள் ஆணையாளரை நீக்கியதையும் ரயில் சுட்டிக்காட்டினார்.

---


**சாவகச்சேரியில்....**

**கணினிக் கற்கை நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**

பிரிவு I
21.01.2012 at11.am

பிரிவு II
21.01.2012 at 4.pm

**சிங்கள வகுப்புகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**

21.01.2012 at 4.pm

**தரம் 10, 11 மாணவர்களுக்கான ICT வகுப்புகள் ஆரம்பம்**


21.01.2012 at 4.pm

**மேலதிக விவரங்களுக்காக...**

**SCOT** கண்டி வீதி,
சாவகச்சேரி


---

## 17ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் சுப்பிரமணியம் குமாரசாமி(குட்டி)
அன்னை மடியில் :-18.12.1957
அம்மன் மடியில் :-26.01.1995

"ஊருக்கு ஒளியிந்த உதயநிலாவே
யாருக்கும் நன்மை செய்த நாயகனே
பாருக்கு பண்பு சொன்ன பாலகனே-எம்
சீருக்குச்சிரித்து நின்ற தெய்வமே -அப்பாவே
எங்குற்றாய் என்று தேடுகின்றோம் பதிலில்லை
தங்கம் பதித்தவுன் தனிமுகத்தை காணவில்லை
பதினேழு ஆண்டுகள் சென்றாலும்
உன் முகம் தான் மறந்திடுமோ
ஆண்டுகள் பதினேழு அவனியில் ஓடினாலும்
ஆறவில்லை எம் துயரம் அப்பாவே
உங்கள் ஆத்மசாந்தியடைய பிராத்திக்கின்றோம்."

குடும்பத்தினர்,
அம்மன் கோவிலடி,
கச்சாய் தெற்கு கொடிகாமம்.

---


## "சாதனை படைக்க காத்திருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு"

உலகெங்கும் 27.8 கோடிக்கும் அதிகமான குடும்பங்களின் ஆயுள் பாதுகாப்பினை நடைமுறையில் பேணிக் கொண்டிருக்கும் உலகின் மிகப்பெரும் சக்தி வாய்ந்த ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனத்தில் நீங்களும் இணைந்து கொள்ள

**இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்.**

**ஆயுள் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சாவகச்சேரி எமது அலுவலகத்துக்குத் தகுதியும் திறமையும் வாய்ந்த ஆண், பெண் விற்பனை மேற்பார்வையாளர்கள் மற்றும் காப்புறுதி ஆலோசகர்கள் தேவை.**

**விற்பனை மேற்பார்வையாளர்கள்**

➤தகுதி வயது 23க்கு மேல்
➤க.பொ.த. உயர்தரம் அல்லது அதற்கு மேல்
➤வழி நடத்தல் திறமை
➤காப்புறுதித் துறையில் குறைந்தது 2 வருட அனுபவம்
➤மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல்

***ஊதியம்:-*** அடிப்படைக் கொடுப்பனவு + விற்பனைக் கொடுப்பனவு

**காப்புறுதி ஆலோசகர்கள்**

தகுதி ➤18 வயதுக்கு மேல்
➤க.பொ.த. சாதாரணத்தில் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
➤வேறு வேலைகளில் இருப்பவர்களும் பகுதி நேரமாக தொழிற்படலாம்.

**ஊதியம்:-** திறமைக்கு ஏற்ப.

*தொழில் திறமைகளை வளர்க்கும் பயிற்சிகள் மிக சிறந்தமுறையில் வழங்கப்படும். திறமைசாலிகள் நல்ல ஊக்குவிப்புகளுக்கும் சன்மானங்களுக்கும் உரித்தாவர்.*

*14 நாள்களுக்குள் தங்கள் "சுய விவரக் கோவையை" கீழ் காணும் முகவரிக்கு அனுப்பவும்.*

**ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை**
*இலக்கம் 05, கண்டி வீதி, சாவகச்சேரி.*
P. NO- 021 227 0070
Fax - 021 227 0070

LIC
Life Insurance Corporation (Lanka) Ltd.
The Hands that Protect


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் அறிக்கைக்கு இராஜதந்திரிகள் கடும் எதிர்ப்பு

கொழும்பு,ஜன.18

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கைக்கு கொழும்பிலுள்ள இராஜதந்திரிகள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிலறிக்கையை ஊடகங்களுக்கு வெளியிடுவதற்கு முன்னர், அதன் பிரதிகளை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு வழங்கி அவற்றின் அனுமதியைக் கோரியிருந்தது. இது போன்ற நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கும் என்று இராஜதந்திர சமூகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவித்துள்ளதாக ஆங்கில நாளிதழ் வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரித்து போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரிக்க அனைத்துலக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று இந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது திட்டப் படியே இந்திய வெளிவிவகார அமைச்சரின் வருகைக்கு முன்னதாக இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரித்து போரின் இறுதிக் கட்டத்தில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரிக்க அனைத்துலக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று இந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

உண்மையான அதிகாரப் பகிர்வுக்கு அழுத்தம் கொடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்த கொழும்பைத் தளமாகக் கொண்ட இராஜதந்திர சமூகம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# அரசு - கூட்டமைப்பு பேச்சு நேற்று நடைபெறவில்லை

1 »

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற பேச்சுக்களின் போது ஜனவரி மாதம் 17, 18, 19 ஆம் திகதிகளில் அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மீண்டும் சந்தித்துப் பேச்சு நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் முடிவடைந்த பின்னர் நேற்று மாலை இரு தரப்பும் சந்தித்துப் பேசுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. கூட்டமைப்பினரும் பேச்சுக்குத் தயாராக இருந்தனர். அரசு தரப்பில் பேராசிரியர் ஜி. எல்.பீரிஸ் வரதராஜன் காரணமாக பேச்சு நடை பெறாது என்று நேற்றுக் காலையில் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் ஜி.எல்.பீரிஸ் நாடாளுமன்றக் கூட்டத் தொடருக்கு வருகை தந்த போதும் பேச்சு இடம் பெறவில்லை. இது குறித்து அரசு தரப்பு எமக்கு எதுவும் தெரிவிக்கவில்லை. முன்னர் திட்டமிட்டதைப்போல இன்றும் பேச்சு இடம் பெறுமா என்று சந்தேகமே என்றார்.

அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சு திட்டமிட்டபடி 17 ஆம் திகதி நடைபெறும் என அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-15)

# 13 + திருத்தத்துக்கும் மஹிந்த அரசு தயார்!

1 »

அநேக சந்தர்ப்பங்களில் எமக்குத் தெரிவித்துள்ளது. இது இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டிருக்கும். அதன் மீது இது கட்டியெழுப் பப்படும். அதன் வாயிலாக அர்த்தபுஷ்டியான அதிகாரப் பகிர்வை அடையலாம் என்றும் விளக்கிவந்துள்ளது.

**அரசியல் தீர்வுக்கு வழி சமைக்குமா?**

எனவே, பேச்சுகள் முன்னெடுப்புகளில் துரிதமான, காத்திரமான அணுகுமுறையையே நாம் எதிர்பார்க்கின்றோம். அதேவேளை, அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே தொடரும் பேச்சுகளும், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிந்துரையும் அரசியல் தீர்வுக்கு வழிசமைக்கு மென்றே நாம் நம்புகின்றோம்.

இலங்கை விஜயத்தை நான் மீள மேற்கொண்டமைக்காக மகிழ்ச்சியடைகிறேன். எனக்கும், எனது குழுவினருக்கும் இதயபூர்வமான வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக அமைச்சர் பீரிஸுக்கும், இலங்கை அரசுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதற்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பதற்கு வாய்ப்புக் கிட்டியது. இரு தரப்பு உறவை முன்னெடுப்பதற்கான பயனுள்ள கருத்துப் பரிவர்த்தனையில் நாம் ஈடுபட்டோம்.

வர்த்தகம், சேவைகள், முதலீடு, அபிவிருத்திக் கான ஒத்துழைப்பு, அறிவியல், தொழில்நுட்பம், கலாசாரம், கல்வி ஆகிய துறைகள் உட்பட பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் குறித்து நாங்கள் உரையாடினோம்.

எமது கூட்டு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள், எனது முன்னைய விஜயம் முதல் அபிவிருத்தி கண்டுவருகின்றன என்பதை அறிந்து திருப்தியடைகிறேன்.

இலங்கையின் ஒருமைப்பாடு, இறையாண்மை, ஆட்புல ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு இந்தியா பெரிதும் உதவும். ஆயுதப் போராட்டத்துக்கு முடிவுகட்ட உதவிய அமானுஷ்ய நோக்கும், தலைமைத்துவமும் நேர்மையான அரசியல் இணக்கப்பாட்டுக்கும் தற்போது வழிசமைக்கும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம்.

இதற்கான முன்னெடுப்புகளுக்காக இலங்கை அரசுடன் இணைந்து நாமும் தொடர்ந்தும் செயற்படுவோம். இயன்ற வழிகளில் அதற்கு உதவுவோம். இந்த முன்னெடுப்புகளுக்காக பங்குதாரர் என்ற ஆத்மார்த்த உணர்வுடன் நாம் ஒத்துழைப்போம்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் சமீபத்திய அறிக்கை குறித்து நான் இன்று (நேற்று) காலை ஜனாதிபதியுடன் கலந்துரையாடினேன். அவர் 13ஆவது திருத்தத்துக்கும் அப்பால் செல்வதற்கான நிலைப்பாட்டில் தாம் இருக்கிறார் என எனக்கு உறுதியளித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் மீனவர்கள் விவகாரம் குறித்தும் நான் வலியுறுத்தினேன். இது உணர்வுபூர்வமான ஒரு விடயம். இரு தரப்புகளும் அவதானமாக கையாள வேண்டிய ஒரு விடயம். நாம், மீனவர்களுக்கு எதிராகப் பலவந்தம் பிரயோகிக் கூடாது. அவர்கள் மனிதாபிமான அடிப்படையிலேயே நடத்தப்படுவார்கள் என [illegible] என்றார் கிருஷ்ணா.

# ஆழ்கடலில் விடப்பட்டது இராட்சத திமிங்கிலம்

கொழும்பு, ஜன.18

கற்பிட்டிக் கடற் பிரதேசத்திலுள்ள தீவொன்றின் அருகில் கரையொதுங்கிய இராட்சத திமிங்கில மொன்றை மீளவும் ஆழ்கடலில் கற்பிட்டி விஜய கடற்படையினர் கொண்டு சென்று விட்டனர்.

பன்னிரண்டு அடி சுற்றளவையும் 38 அடி நீளத்தையும் கொண்டுள்ள இந்தத் திமிங்கிலம் கரை ஒதுங்கியிருந்த போது அங்கு வந்த கடற்படையினர் கயிறுகளால் பிணைத்து ஆழ்கடலுக்குள் விட்டுள்ளனர்.

அறுபது பேர் வரையிலான கடற்படை உத்தியோகத்தர் களால் ஐந்து மணி நேர முயற்சியின் பின்னர்



இந்தத் திமிங் கிலம் ஆழ்கடல் பிரதேசத்துக்குள் பெரும் சிரமத்துடன் கொண்டுசெல்லப்பட்டது. (ச- 22)

# ஓமந்தைச் சோதனைச் சாவடிக்கு நேற்று சில மணி நேர மூடுவிழா

1 »

தவமிருக்க வேண்டியேற்பட்டது. சுமார் மூன்று மணி நேரத்துக்கும் அதிகமாக இந்தச் சோதனைச்சாவடியூடான போக்குவரத்துத் தடை செய்யப்பட்டிருந்ததாகத் தெரியவருகின்றது.எதற்காகத் திடீரெனப்பாதை பூட்டப்பட்டது என்பதை அறியமுடியாத மக்கள் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்தனர்.

அரச உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பொது மக்கள் என்போர் இதன் காரணமாகப் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டனர்.

மாலை 5 மணிக்குப் பின்னரே மீண்டும் ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடான பொதுமக்களின் பயணத்துக்குப் படையினர் அனுமதி வழங்கினர்.

யாழ்ப்பாணத்துக்கு ஆர்ப்பாட்டம் நடத்த வந்திருந்த மக்கள் போரட்ட அமைப்பின் பயணத்தைத் தடுப்பதற்காகவே இவ்வாறு ஓமந்தைச் சோதனைச் சாவடி திடீரெனச் சில மணி நேரம் மூடப்பட்டதாகத் தெரியவருகிறது.(ங-14-04-86-435)

# சமாதான பேரவையின் வாகனம் மீது தாக்குதல்

1 »

மாற்று அணியினரால் பத்திரிகையாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் ஜே.வி.பியின் மாற்று அணியினர் அங்கு வரவில்லை.

இதற்கு முன்பதாகவே 11.15 மணியளவில் குறித்த விடுதியினுள் புகுந்த சிலர் அங்கு வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களின் கண்ணாடிகளைக் கொட்டன்களால் அடித்து நொருக்கியுள்ளனர். அத்துடன் கல்லால் எறிந்தும் சேதப்படுத்தினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விடுதியில் இருந் தவர்கள் தெரிவிக்கையில், ''சத்தம் கேட்டு வெளியில் ஓடி வந்தபோது சிவப்பு நிறச் சேட் அணிந்தவர் ஒருவர் ஓடித் தப்புவதைக் கண்டேன்'' என்றார்.

இந்த விடயம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ங-15)

# இணை மருத்துவ சேவையாளர் இன்று சுகவீன விடுப்பில்

1 »

இனை மருத்துவ சேவையாளர் மூப்பிற்கான பதவியுயர்வு, விசேட வகுப்புகளைத் தத்தமது சேவையில் உருவாக்குதல், இணை மருத்துவ சேவையிலுள் ளவர்களைப் பட்டதாரிகள் சேவைக்குள் உள்வாங்குதல், இடமாற்றங்களில் காணப்படும் இடையூறுகளை நீக்குதல், வரி விடுப்புகளைப் பெற்றுத் தருதல், வாழ்க்கைச் செலவுக்கு இணையான சம்பள அதிகரிப்பு போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபடு கின் றனர்.

இணை மருத்துவ சேவையாளர் பிரிவினுள் மருத்துவ ஆய்வு கூடத் தொழில் நுட்பவியாளர் 'எக்ஸ்' கதி ரியக் கவியலாளர் மருந்தாளர், இயன் மருத்துவர், தொழில் வழிச் சிகிச்சையாளர் ஆகிய பிரிவினர் உள்ளடங்கு கின்றமை குறிப்பிடத்தக்கது.

பொரளை சிறுவர் வைத்தியசாலை, மகரகம புற்றுநோய் வைத்திய சாலை ஆகிய இரண்டு வைத்தியசாலைகளையும் தவிர ஏனைய அனைத்து அரச வைத்தியசாலையினுள் இணை மருத்துவ சேவையாளர்கள் இன்று சுகவீன விடுப்பில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத் தக்கது. (த-4-17-149)

# இந்தியாவின் 150 வீடுகளில் 48 மட்டுமே கட்டிமுடிந்தன

1 »

மானிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 50 வீடுகளும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு மற்றும் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தலா 30 வீடுகளும், யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் 40 வீடுகளும் நிர்மாணிக்கப் படவிருந்தன. இதற்கான அடிக்கல்லை கடந்த 2010 ஆம் ஆண்டு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா நட்டார்.

14 மாதங்களில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அரியாலையில் அமைக் கப்பட்டுள்ள 50 வீடுகளில் 48 வீடுகள் மாத்திரமே முற்று முழுதாக கட்டி முடிக்கப்பட்டுப் பயனாளிகளிடம் கையளிக்கப்படும் நிலையில் உள்ளது.

ஏனைய இடங்களில் ஆரம்பிக்கப்படும் வீட்டுத் திட்டங்கள் யாவும் நிறைவடையாமல் அரைகுறையில் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டது. யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் சில வீடுகள் அமைப்பதற்கு மாநகர சபை அனுமதி வழங்கவில்லை யெனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் அரியாலையில் வீடுகள் கையளிக்கப்படவுள்ளதால் ஏனைய பிரதேச செயலர் பிரிவில் வீட்டுத் தோட்ட வேலைகள் மேற்கொண்டுவந்த ஒப்பந்த காரர்கள் எல்ரோரும் அரியாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இனால் வேலைகள் தாமதமடைந்துள்ளதாகவும் எஞ்சிய வீட்டுத் திட்டப் பணிகள் பெப்ரவரி மாதத்துக்குள் முடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தினத்தை முன்னிட்டு 4 ஆயிரம் கைதிகள் விடுதலை

கொழும்பு, ஜன.18

தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு சுமார் 4 ஆயிரம் கைதிகள் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலைசெய்யப்படவுள்ளனர் என சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் டபிள்யூ. கொடிப்பிலி நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

கடந்த வருடம் பல்வேறு சந்தர்ப்பங்களில் சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டாலும், இம்முறை சுதந்திர தினத்தில் மாத்திரமே கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

நாட்டின் சுதந்திரதினமான பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி கைதிகள் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படுவது வழமை.

அந்தவகையில், இந்த வருடம் எத்தனைபேர் விடுதலை செய்யப்படவுள்ளனர் எனக் கோட்டபோதே, சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சுதந்திர தினத்தை முன்னிட்டு கைதிகளை விடுவிப்பது தொடர்பிலான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்வதற்கு சில வரையறைகள் உள்ளன. அவற்றினடிப்படையில் சுமார் 4 ஆயிரம் கைதிகள் விடுதலை செய்யப்படுவர் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

கடந்த வருடம் 2600 ஆவது புத்த ஜயந்தி, சுதந்திரதினம், சிறைச்சாலைக் கைதிகளின் தினம் ஆகியன உட்பட முக்கியமான சில தினங்களில் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். ஆனால், இந்த வருடம் சுதந்திரதினத்தில் மாத்திரமே கைதிகளை விடுதலை செய்வதற்குத் திட்டமிட்டுள்ளோம்" - என்றார்.

(ங-சி)

# இலங்கை மீது எந்நேரத்திலும் சர்வதேச விசாரணை பாயலாம்

## ஐ.நா.வின் முன்னாள் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.18

இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்யாமல் இந்தியாவும், சீனாவும் இலங்கையை பாதுகாத்து வருகின்ற போதிலும் இதனைத் தொடர்ந்தும் எதிர்பார்க்க முடியாது - என்று ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக் கிளைக்கான முன்னாள் பேச்சாளர் கோர்டன் வைஸ் தெரிவித்துள்ளார்.

போரில் கொல்லப்பட்ட பொதுமக்கள் குறித்து சர்வதேச விசாரணைகள் நடத் தப்படலாம் என்றும் ஆறு மாதம், ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்களில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்படலாம் என்றும் முன்னாள் பேச்சாளர் கோர்டன் வைஸ் தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட போரின்போது இடம்பெற்ற பொதுமக்கள் இழப் புகள் குறித்து கேஜ் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விவரத் தரவுகள் சரியானவையே எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறுகிய காலத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் வெற்றியளிக்காது. தமிழர் பிரதேசங்களில் சிங்கள மக்களின் ஆதிக்கம் சாதகமான நிலைமையல்ல.

இறுதிக்கட்டப் போரின் உண்மை நிலைமைகள் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை. இதனை அறிந்து கொள்ள இன்னும் நீண்டகாலம் காத்திருக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ங-சி)

# இந்திய வீட்டுத் திட்டத்தில் முஸ்லிம்களுக்கும் வீடுகள்

## கிருஷ்ணாவிடம் மு.கா. கோரிக்கை

இந்திய வீடமைப்புத் திட்டத்தில் வட மாகாண முஸ்லிம் மக்களுக்கும் வீடுகள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். இதில் எதுவித பாகுபாடும் இருக்கக்கூடாது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், தேசிய இனப்பிரச்சினைக்கு 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தித் தீர்வு காணப்படவேண்டும் எனத் தமது உறுதியான நிலைப்பாட்டை இந்திய அமைச்சரிடம் எடுத்துரைத்த முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளும் முழுமையாக உள்வாங்கப்படும் வகையிலேயே இறுதித் தீர்வு அமையவேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறியுள்ளது.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகளுக்குமிடையிலான பேச்சு நேற்று முன்தினம் இரவு கொழும்பில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அதன் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம், செயலாளர் நாயகம் ஹஸன் அலி, பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினர் கலந்துகொண்டனர்.

இதன்போது, சமகால அரசியல் விவகாரங்கள் உட்பட முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்திய அமைச்சர் கிருஷ்ணாவுடன் இடம்பெற்ற சந்திப்பு குறித்து 'உதயனு'க்குக் கருத்து வெளியிட்ட ஹசன் அலி எம்.பி. கூறியவை வருமாறு:-

இந்திய அமைச்சர் கிருஷ்ணாவுடன் இடம்பெற்ற பேச்சுகள் சுமுகமாக அமைந்தன.

தீர்வுத்திட்ட விடயம் உட்பட முக்கியமான சில விடயங்கள் குறித்து கலந்துரையாடினோம். குறிப்பாக இந்திய அரசின் பூரண ஒத்துழைப்புடன் வடக்கில் நிர்மாணிக்கப்பட்டுவரும் வீடுகளில் வட மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களுக்கும் பங்கு வழங்கவேண்டும். எதுவித பாகுபாடும் இத்திட்டத்தில் இருக்கக்கூடாது என நாம் அவரிடம் கூறினோம்.

அதுமட்டுமன்றி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்போது அதில் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளும் முழுமையாக உள்வாங்கப்படவேண்டும். அவ்வாறானதொரு தீர்வையே நாம் விரும்புகின்றோம்- என்றார் ஹசன் அலி எம்.பி. (ங-சி)

# இன்று முதல் புதிய இடத்தில்

யாழ்ப்பாணம், ஜன.18

தெல்லிப்பழை ஆயுர்வேத அரச மருந்தகமும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இன்று முதல் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக் கட்டடத்தில் இயங்கவுள்ளன.

ஆயுர்வேத அரச மருந்தகம் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில் வளாகத்திலும், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அளவெட்டி பிரதேச வைத்தியசாலைக் கட்டடத்திலும் இதுவரை காலமும் இயங்கிவந்தன. இன்று முதல் இவை தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக் கட்டடத்தில் இயங்கவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

(ங-319-36)

**கார் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள Silver கலர் TOYOTA ALLION கார் உடன் விற்பனைக்கு உண்டு. (Reg. in 2006)
தொடர்புக்கு:
0777177592 / 0789979849

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

புதிய பிரிவு ஆரம்பம் – 18.01.2012 (புதன்கிழமை)

| | |
|---|---|
| 182, ஸ்ரான்லி வீதி யாழ்பாணம் காலை 9.00 - 10.00 | இலங்கை வங்கி மாடி சங்கானை மாலை 4.00 - 5.00 |

புதிய பிரிவு ஆரம்பம் – 19.01.2012 (வியாழக்கிழமை)

| | |
|---|---|
| NSB அருகில் கொடிகாமம் வீதி நெல்லியடி காலை 9.00 - 10.00 | நகரசபை அருகில் ஸ்ரேசன் வீதி சாவகச்சேரி மாலை 4.00 - 5.00 |

சனி, ஞாயிறு புதிய பிரிவுகளும் ஆரம்பம்

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

**கட்டடம் அல்லது காணி தேவை**

கிளிநொச்சி நகரில் A9 பாதையில் 3 பரப்புக்கு மேற்பட்ட காணியுடன் கட்டடம் அல்லது தனிக் காணி தேவை.
தொ.பே.இல.:
0771366695
0772683602
0217201282

மாணவர்களின் குறையை நிவர்த்தி செய்ய
**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L 2012 Day Class
A/L 2013, 2014

| பொருளியல் M.C.சுதாகரன் யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர் | ஆரம்பம் 21.01.2012 சனி 11 மணி |
|---|---|

தனித்துவமான ஆசிரியர் குழு சங்கமமாகிறது
**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L 2012 Day Class with Rivision
A/L 2013, 2014
வர்த்தகப் பிரிவு

| Eco | Bist | Acc |
|---|---|---|
| M.C.சுதாகரன் (யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர்) | S.முகுந்தன் (கொழும்பு, யாழ். பிரபல ஆசிரியர்) | M.P.றொஜிந்தன் (வலி. மேற்கின் பிரபல ஆசிரியர்) |

ஆரம்பம் 21.01.2012 சனி 11 மணி
A/L 2012 (11 மணி), A/L 2012 Day Class
2013, 2014 நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**அரிய சந்தர்ப்பம்**

A/L பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்ல முடியாத மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
1) Telecommunication Systems Eng
2) Civil engineering / Quantity surveying
3) Electrical & Electronics Engineering
ஆகிய துறைகளில் தமிழ் மொழி விளக்கங்களுடன் கொழும்பில் உள்ள APPS நிறுவனத்துடன் இணைந்து City & Guilds exam (London) இற்கு பயிற்றுவிக்கப்படுகின்றது. பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு அந்தந்தத் துறைகளில் அதிகூடிய சம்பளத்துடன் வேலை வாய்ப்பு பெற்றுத்தரப்படும்.
அல்லது
London இல் மேற்படிப்பினைத் தொடர்வதற்கு Visa பெற்றுத் தரப்படும்.

வகுப்புக்கள் ஆரம்பம் 21.01.2012

விவரங்களுக்கு நேரில் வரவும்.

JAFFNA TECHNICAL INSTITUTE

கிளை: 92/1, இராமநாதன் வீதி, (கலட்டிச்சந்தி அருகில்) யாழ்ப்பாணம். T.P.: 0215670345

இல.45, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயில் முன் வீதி) யாழ்ப்பாணம். T.P.: 0718561654, 077824[illegible]

**கனடா விசா**

கனடா விசா தொடர்பான இலவச ஆலோசனைகள்.
திசைகாட்டி பிறைவேற் லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
021 221 9016

தமிழ் N.சத்தியவேந்தன்

என்னுடைய வகுப்புக்கள் பின்வரும் நிறுவனங்களில் மாத்திரமே நடைபெறும் என்பதை மாணவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

- பொருளியற் கல்லூரி நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
- பொருளியற் கல்லூரி கே.கே.எஸ். வீதி, இணுவில்.
- புகழ் - சுதுமலை.

வேறு கல்வி நிறுவனங்களில் என்னுடைய வகுப்பு நடைபெறுவதில்லை

C/7848

**ஷாம்சன் இங்கிலீஷ்- 3மாத பயிற்சி நெறி**

இன்றுவரை உங்களால் ஆங்கிலத்தால் பேச முடியாதிருப்தற்கான காரணம் ஆங்கிலம் கடினம் என்பதால் அல்ல, தவறான வழிமுறையில் கொப்பியில் எழுதியும், CD, புததகத்தின் வாயிலாக அதை முயற்சித்தலாகும்.

ஆங்கிலத்தை மட்டுமல்ல உலகில் எந்தவொரு மொழியையும் இலக்கணம், CD, புததகத்தின் வாயிலாகக் கற்று சரளமாகப் பேசவே முடியாது. நீங்கள் கூட தாய் மொழியை அவ்வாறு படிக்கவில்லையே!

எமது பழக்கப்படுத்தல் மூலமான ஆங்கிலப் பயிற்சியானது ஒரு சிறு குழந்தை எவ்வாறு தாய் - தந்தையாருடன், அயலவருடன் பேசிப் பேசி மொழியைப் பழகியதோ அதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

நீங்களும் எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சிப் பட்டறையில் (WORK SHOP) இணைய விரும்புகிறீர்களா? அப்படியானால் எதிர்வரும் 21.01.2012 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள். (இம் முறை O/L எழுதும் மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில்புரிவோர், பட்டதாரிகள் மற்றும் 15 வயதுக்கு மேற்பட்ட அனைவரும்)

ஒரு பிரிவில் 20 பேருக்கு மட்டுமே அனுமதி.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I மு.ப 8-10 பிரிவு III பி.ப 01- 03
பிரிவு II மு.ப 10- 12 பிரிவு IV பி.ப 03- 05

SAAMSON ENGLISH 279, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி பின்புறம்)
TEL: 0776214567

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிதொறும்
அறியாமை
கண்டற்றால் காமம்
செறிதொறும்
சேயிழை மாட்டு.
வள்ளுவர்

# புதன் பொய்கை A

உதயன் 18 ஜனவரி 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# பாடசாலைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி பயனற்று இருக்கிறது

■ வெண்கட்டியன்



பாடசாலை நிதி ஒதுக்கீட்டில் ஒன்றுதான் தர உள்ளீட்டு நிதிப்பகிர்வு. இதில் ஆசிரியர் மட்ட, மாணவர் மட்ட செயற் பாடுகளுக்காக இருதரப்பட்ட நிதிகள் ஒதுக்கப்படுகின்றன. மாணவர்களின் இணைபாடவிதான செயற்பாடுகள் உள்ளிட்ட மேலதிக கற்றல் செயற்பாட்டுக்காக ஒதுக்கப்படும் நிதி மேலும் இருவகைப்படும். அது ஆரம்பப்பிரிவு, இடைநிலை என்பனவாகும். இதனைவிட ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காக ஒரு தொகை நிதி ஒதுக்கப்படுகின்றது. இது பாடசாலைகளின் தரத்திற்கேற்ப இலட்சக் கணக்கில் ஒதுக்கப்படுகின்றது. இதனைச் சுருக்கமாக (E.G.D.F.P) எனக் கூறுவர்.

அன்றாடக் கற்றல் கலைத்திட்டம் தவிர்ந்த மேலதிக பல செயற்பாடுகளை மாணவர்கள் முன்னெடுக்க வேண்டும். அறிவு, திறன், மனப்பாங்கு ரீதியான மாற்றத்தினை உண்டு பண்ணவேண்டும். இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மூலமாகவே தற்கால சவால்களை எதிர்கொள்ளும் சமூகத்தினைக் கட்டியெழுப்ப முடியும் என்பதற்காக பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியே மாணவர்மட்ட உயர்நிலை செயற்பாடு (S.B.H.O.P) என்கின்ற பெயரிலும், ஆசிரியர்களின் பலம் பலவீனங்கள்தான் மாணவரின் முன்னேற்றத்தினை எடைபோடும். ஆகவே ஆசிரியர்களை வலுவூட்ட வேண்டும். கல்விமான்கள் துறைசார் நிபுணர்களை வள ஆளணிகளாகப் பயன்படுத்தி ஆசிரியர்களிற்குப் பயிற்சிகளை வழங்கி வளர்ப்பதன் மூலம் மாணவ சமூகம் வளர்க்கப்படும் என எதிர்பார்த்து ஒதுக்கப்பட்ட நிதியே ஆசிரியர் மட்ட உயர்நிலை செயற்பாடு (T.B.H.O.P) என்கின்ற பெயரிலும் அழைக்கப்படும்.

இவ்வாறான தூரநோக்கங்களுடன் ஒதுக்கப்பட்ட நிதியானது பல பாடசாலைகளில் பயனற்றுப் போய்க் கிடக்கின்றது என்பது கல்விச் சமூகம் அனைவரும் அறிந்த ஒன்றே. சில பாடசாலைகளில் நிதி பயன்பாடற்று அடுத்த ஆண்டுக்கு கொண்டுசெல்லப்படுவதும், பொருத்தமற்ற செயற்திட்டங்களை முன்வைத்து நிராகரிக்கப்பட்டு மீள்விண்ணப்பங்கள் கோரப்படாமல் இருப்பதும், கோரப்பட்ட விண்ணப்பங்கள் வேறாகவும், அனுமதி அளித்த விண்ணப்பங்கள் வேறாகவும், நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள் வேறாகவும் இருப்பதையும் பல பாடசாலைகளில் காணமுடிகின்றது. பல பாடசாலை ஆளணிகளுக்கு, ''இதற்கென கருத்திட்ட இலக்கத்துடன் கூடிய தலைப்புப் பட்டியல்'' இருப்பது தெரியாது. ''எந்தத் தலைப்பிற்கு எந்தச் செயற்பாடு? அதற்குரிய இலக்கம் என்ன? எந்தச் செயற்பாடுகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படலாம்'' என்கின்ற சுற்றறிக்கைப் பட்டியல் உள்ளது. இதனைப் பார்க்காது நிதியினை முடிக்க வேண்டும் எனும் திணைக்கள அழுத்தங்களுக்காக இது பயனற்றமுறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.


இது மிகப்பெரிய தவறு என்பதை எவரும் புரிந்து கொள்வது இல்லை. மாணவர்களின் மத்தியில் கலைத்திட்டம் சாராத பல திறன்விருத்திகள் அவசியம் தேவைப்படுகின்ற இவ்வேளை, வருகின்ற நிதியினைக்கூட நாம் சீரற்றுப் பயன்படுத்துவது எந்த வகையில் நியாயம்? பாலியல் பிரச்சினைகள், ஒழுக்கவியல் பிரச்சினைகள், ஆளுமைப் பிரச்சினைகள் என பல வகைப் பிரச்சினைகள் உள்ளன. இந்த நிதிகளை சீராகப்பயன்படுத்தும்போது வெளியீடு என்பது போதிய அளவு ஏற்பட வாய்ப்பு உண்டு.

> “ பாலியல் பிரச்சினைகள், ஒழுக்கவியல் பிரச்சினைகள், ஆளுமைப் பிரச்சினைகள் என பல வகைப் பிரச்சினைகள் உள்ளன. ”

இதனைவிட ''மாணவர்களின் ஒவ்வொரு தரத்திற்கும் தேவையான செயற்திட்டம் என எதிர்பார்த்து ஆண்டுக்காண்டு ஒதுக்கப்படும் நிதியானது, பயன்படுத்தப்படாது அடுத்த ஆண்டுக்கும் சேர்த்து முன்னெடுக்கப்படும் போது தரரீதியான பயன்பாடு இல்லாது போகின்றது. இறுதித் தரமான O/L , A/L செயற்திட்டத்தை இழந்து போகின்றது. இது நியாயமா?

இதனைவிட பாடசாலைகளில் பல பிரச்சினைகள் இச் செயற்திட்டத்தினை முட்டுக்கட்டையாக்கிக் கொண்டு இருக்கின்றன. வள, ஆளணிகளைத் தெரிவு செய்யும்போதும் துறைசார் நிபுணர்களைத் தெரிவுசெய்யும்போதும் வெளியீடுகளை, மாணவர்களின் ஆசிரியர்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்ய வேண்டும். ''அவரைத்தெரிவு செய்வதா? எமது தராதரம் என்ன? அவரது தராதரம் என்ன?'' இவ்வாறான குறுகிய எண்ணங்களும், வலயத்தில் இருந்து மாத்திரம் தெரிவு செய்ய வேண்டும் என்கின்ற அழுத்தங்களும் இதனைத் துண்டு போடுகின்றது. தயவு செய்து தேவைகள் இருக்கும்போது ஒதுக்கப்படும் நிதிகளை வீண்விரயம் செய்யாதீர்கள். வலயங்களின் மேற்பார்வைகளை சீர்ப்படுத்துங்கள். செயற்திட்ட ஆரம்பம், இடை, முடிவு என மேற்பார்வைகள் இடம்பெறாமையால்தான் செயற்திட்டம் திசை மாறுகின்றது. இதனை சீர்ப்படுத்துங்கள். எம்மாலே எமது சமூகம் திசைமாற இடமளிக்காதீர்கள். இது குறை கூறும் படலமல்ல. நிறைவிற்காக நாமெல்லோரும் சேர்ந்து சிந்திப்போம். ✦

# முடிவல்ல ஆரம்பம்



■ பாலா

## நிரந்தர வெற்றியையோ, தோல்வியையோ யாராலும் எய்திக் கொண்டே இருக்க இயலாது!

குழந்தைப் பருவத்திலே, தவறாக ஏதேனும் எழுதிவிட நேரிடும்போது, அழிறப்பர் என்கிற ஓர் உபகரணத்தின் உதவியுடன் எழுதியதை எளிதாக அழித்துவிட்டு புத்துணர்வோடு புதியதாக எழுதத் தொடங்கி விடமுடியும்! ஆனால், அச்சின்னஞ்சிறார்களே வளர்ந்து பெரியவர்களான பின்னர், தேர்விலோ, வாழ்விலோ தவறுகள் செய்ய நேரிடும்போது, அவற்றை மிகப் பெரிய தோல்வியாக நினைத்து மனமுடைந்து துவண்டு போய்விடுகிறார்கள்.

எண்ணப் போக்கிலோ, செயல் முறையிலோ தவறுகள் நேரிடுவது இயற்கையே! இன்னும் சொல்லப் போனால், சில சந்தர்ப்பங்களில், தவறு எனத் தெரிந்திருந்தும், பாதியில் பயணத்தைக் கைவிட விருப்பமின்றி, தொடர் நடைபோட்டு பின்னர் தோல்வியினுள் தஞ்சம் புகுபவர்களும் உண்டு. அத்தகையோர்கூட தோல்வியினுள் புதைந்து விடாமல், ''நடக்க வேண்டியது நடந்து முடிந்துவிட்டது. அடுத்து ஆக வேண்டியதைப் பார்ப்போம்'' என்பதாக மீண்டும் புதியதாகப் பயணத்தைத் தொடங்க முற்படவேண்டும்.


கடமையாற்றும் போதோ, செயல்களத்தில் நடைபயிலும் போதோ, தவறுகள் ஏற்படுதல் சகஜம். ஆனால், அவற்றையே முடிவாகக் கொண்டு, எடுத்த வேலையை அப்படியே விட்டு விடுவதென்பது ஏற்பட்டுவிட்ட தவறைக் காட்டிலும் மிகப் பெரிய தவறாகும். கடமையாற்றிடும் போது, அறிவுபூர்வமாக அணுகி, அனுபவபூர்வமாக சிந்தித்து ஆக்கபூர்வமாகச் செயற்பட முற்படவேண்டும். மீண்டுமொரு முறை புதியதாகத் தொடங்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிய போதிலும், தன்னம்பிக்கையைத் தளரவிடாமல், உற்சாகமாக, உத்வேகமாக மீண்டும் புதிதாகத் தொடங்கத் தயாராக வேண்டும். ஆடுகளத்தில் எத்தனை முறை நிலை தடுமாறி கீழே விழுகிறோம் என்பது முக்கியமல்ல; இன்னும் சொல்லப்போனால், அவற்றைத் தோல்வியின் பிரதிபலிப்பாகக் கருதக் கூடாது. எத்தனை முறை விழுந்தாலும், எவ்வளவு விரைவில், எழுந்து நின்று மீண்டும் களத்தில் குதிக்க தயாராகிறோம் என்பதைப் பொறுத்தே நாம் வெற்றி பெறுவது அமையும். தோல்வி என்பது தற்காலிகமானது தான்! நிரந்தர வெற்றியையோ, தோல்வியையோ யாராலும் எய்திக் கொண்டிருக்க இயலாது! தோல்வி என்பதை முடிவின் ஆரம்பமன்று; மாறாக, ஒரு புதிய ஆரம்பத்திற்கானதோர் அரிய வாய்ப்பு! செயற்பாட்டின்போது தோல்வியடைவதன் மூலம் மட்டும் மனிதனின் கடமை முடிவடைந்து விடுவதில்லை!

எந்தக் கட்டத்தில், இனிமேல் என்னால் முடியாது; ஆதலால் நான் விலகிக் கொள்கிறேன் என்பதாகச் சிந்திக்கத் தொடங்குகிறானோ, அந்தத் தருணத்தில்தான் அவன் நிரந்தரமான தோல்வியை நீக்கமறத் தழுவுகிறான்!

தவறோ, தோல்வியோ நேரிடும் போது, உணர்ச்சி வசப்பட்டு கடமையைக் கைவிட்டுவிட முற்படாமல், காரணகாரியங்களை ஆராய்ந்து, அறிந்து எங்ஙனம் செயலைச் செப்பனிடலாம் என்பதாகச் சிந்திக்க முற்படவேண்டும். கடமையாற்றும் போதுகூட, வெற்றி இலக்கினை எய்திட்ட பிறகு, வேலை முடிந்துவிட்டது என்கிற பாணியில் ஓய்வெடுக்க முயலாமல், புதியதொரு பயணத்தைத் தொடங்க முற்படவேண்டும் அப்படிச் செயல்பட்டால்தான், முன்னணி கூட்டணியில் நிரந்தரமான ஓர் இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள இயலும். ஒவ்வொரு முடிவிலும் ஒரு புதிய ஆரம்பம் காத்து நிற்கிறது என்பதே உண்மை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியத்துக்கு உடற்பயிற்சி



உடற்பயிற்சி என்பது எமது ஆரோக்கியத்துக்கு மிக மிக முக்கியமான ஒரு விடயமாகும். ஆனால் நம்மில் பெரும்பாலானவர்கள் உடற்பயிற்சி என்பதையே மறந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் இன்றைய நவீன காலத்தில் மனிதனின் தேவைகள் அதிகரித்து காலத்தின் கட்டாயமாக நாம் இயந்திர வாழ்க்கை வாழ்வதேயாகும். நேரம் இன்மை மிகப்பெரும் காரணமாக இருந்தாலும் சோம்பேறித்தனமாக வாழ்வதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியது.

# விருந்தாளியாக வீட்டுக்குள் நுழைந்த முதலை



ஆஸ்திரேலியாவில் அழைக்காத விருந்தாளியாக முதலை ஒன்று வீட்டுக்குள் நுழைந்து பரபரப்பை ஏற்படுத்தியது. அங்குள்ள டார்வின் என்ற இடத்தில் வசிக்கும் குடும்பத்தினர் அதிகாலையில் எழுந்தபோது வளர்ப்பு நாய் குரைத்துக் கொண்டே இருந்தது.
அப்போது வீட்டில் இருந்த அறைக்குள் சுமார் 1.7 மீற்றர் நீளமுள்ள கடல்வாழ் முதலை நிற்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.
இதுதொடர்பில் வனவிலங்குத் துறையினருக்குத் தகவல் கொடுத்தனர். உடனே அதிகாரிகள் விரைந்து வந்து முதலையைப் பிடித்துச்சென்றனர்.

# கடலுக்குக் கீழே பாதாள உலகம்

அந்தாட்டிக்கா கடல் பரப்பிலிருந்து எட்டாயிரம் அடிக்குக் கீழே இதுவரை அறியப்படாத ஒரு பாதாள லோகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், அறியாத பல புதிரான உயிரினங்கள் அதில் இருப்பதாகவும் இங்கிலாந்து விஞ்ஞானிகள் கூறிகின்றனர். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு குழு, பிரிட்டிஷ் ஆய்வு அமைப்புடன் இணைந்து இந்த ஆய்வில் ஈடுபட்டது. அப்போது தாங்கள் ஒரு புதிய உயிரினத் தொகுப்பைக் கண்டுபிடித்ததாக அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஆய்வில் பலவகை நண்டுகள், நட்சத்திர மீன் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டன. இவை, அறிவியல் உலகத்துக்கு முற்றிலும் புதியவை என்று பிரிட்டன் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். கடலுக்கு அடியில் உள்ள எரிமலைகளுக்கு மேலாக அந்த உயிரினங்கள் காணப்படுகின்றன. அந்த எரிமலைகள் சீறும்போது கரும்புகையைக் கக்குகின்றன. எரிமலைக் கரும்புகையில் உள்ள அதீத நச்சுத் தன்மை வாய்ந்த வேதிப்பொருள்களை உடைப்பதன் மூலம் அந்த உயிரினங்கள் தங்களுக்குத் தேவையான சக்தியைப் பெறுகின்றன.

# நாய்கள் மனிதர்களின் சிந்தனையை எளிதில் புரிந்துகொள்ளும்



மோப்ப சக்தி அதிகம் கொண்ட நாய்கள் திருடர்களைப் பிடிப்பதில் மட்டுமின்றி மனிதர்களின் சிந்தனையையும் எளிதில் கண்டுபிடிக்கும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். பிரிட்டனில் உள்ள விலங்குகள் குறித்த ஆய்வு நிறுவனம் ஒன்று, நாய்களைப் பற்றி மேற்கொண்ட ஆய்வில் இந்தத் தகவல் வெளியாகி உள்ளது. அனைத்து நாய்களுக்கும் இது பொருந்தும் என்றும் தெரிவித்துள்ளனர். இதனால் மனிதர்களின் கட்டளைகளை அவை நன்கு புரிந்துகொண்டு செயற்படும். சொல்வதற்கு முன்பே சிந்தனையில் உள்ளதையும் புரிந்து கொள்ளும். அவற்றின் மோப்பசக்தி மற்றும் மூளைத்திறன் ஆகியவற்றால் நாய்களுக்கு இது எளிதாகிறது. பிறந்து சிறிது நாள்களே ஆனாலும் நாய்க்குட்டிகளுக்கு 2 வயதுக் குழந்தைக்கான மூளையின் பக்குவம் இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

# விநோதமான வடிவங்களைக் கொண்ட மரங்கள்



பொதுவாக மரங்கள் அளவில் பெரிய வடிவத்துடன் நிலத்தில் தோன்றி, இடம் விட்டு இடம் தானே நகராமல் நிலைத்து வளரக் கூடியவையாகும். மரங்கள் இயற்கை நிலத்தோற்றத்தில் முக்கியமான அம்சமாக இருப்பதுடன் நிலத்தோற்றக் கலையில் ஒரு முக்கியமான கூறுமாகும். ஏனைய வகைகளைச் சேர்ந்த செடி, கொடி போன்ற வகைகளை விட மரங்கள் நீண்டகாலம் வாழக்கூடியவை. சிலவகை மரங்கள் 100 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியவை. சில இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலும் வாழக்கூடியவை. இவ்வாறான பலவகையான மரங்கள் வித்தியாசமான தோற்றத்துடனும் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (19)

**புதன் ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் பலன்கள் குறித்த விபரங்கள் மேலும் தொடர்கின்றன.**

**புதன் ஆதிக்கத்தவரின் தொழில்கள்**

வியாபாரம்தான் சிறந்தது. எந்த வியாபாரமும் செய்து பொருள் ஈட்டலாம். கலைத்தொழில்கள், கூட்டம் அதிகமுள்ள இடத்தில் செய்யும் தொழில்கள், அரசியல் , பத்திரிகை, தத்துவம், விஞ்ஞானம், மருத்துவம் போன்ற தொழில்களால் லாபம் அடைவார்கள்.

**புதன் ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நாள்கள்**

5, 14, 23, 9, 18, 27 ஆகிய திகதிகள் அதிஷ்ட நாட்களாகும். திகதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டிவரும் கூட்டு எண் 5 வரும் நாள்களும் அதிர்ஷ்ட தினங்கள் ஆகும். மேற்கண்ட நாள்களில் ஈடுபடும் காரியங்கள் முழு வெற்றியைத் தரும்.நீடித்து நிலைக்கக் கூடிய காரியங்களைக் கூட்டு எண் 5 வரும் நாட்களில் செய்து வர வேண்டும். அதே நேரத்தில் திகதி எண்ணும் சாதகமாக அமைய வேண்டும்.

**அதிர்ஷ்டமான நிறங்கள்**

சாம்பல், பொன்னிறம், மஞ்சள், வெளிர்நீலம், வெளிர் பச்சை, சீமெண்ட் கலர் போன்ற வர்ணங்கள் புதன் ஆதிக்கரின் அதிர்ஷ்ட நிறங்களாகும்.

**அதிர்ஷ்ட ரத்தினங்கள்**

வைரம், சிர்க்கான் (வெள்ளைக்கல்) போன்றவற்றை வலது கை மோதிர விரலில், தோலில் உரசும்படி அணிந்து கொண்டால் நல்ல அதிர்ஷ்டம் விருத்தியாகும்.

**5 ஆம் எண்காரர்களின் அதிஷ்டக் கையெழுத்து**

பெயரை அதிஷ்டமாக அமைத்துக் கொண்ட இவர்கள் தங்கள் கையெழுத்தையும் வசியமாக்கிக் கொண்டு வளமான தொழில், வசதியான வாழ்க்கையைப் பெறலாம். கையை எடுக்காமல் கையெழுத்திட வேண்டும்.

**5 ஆம் திகதி பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

சிறு வயதிலேயே பெரிய பெரிய விசயங்களால் கவரப்படுவார்கள். பிறரை மதிக்கும் பண்பு சிறு வயது முதலே அமைந்துவிடும். அனைத்து மேலான நற்பண்புகளையும் உடையவராக இருப்பார்கள். கலைகளில் மிகுந்த பிரியமுடையவராக இருப்பார்கள். அமானுஷ்ய சக்திகள் கொண்டவராக இருப்பார்கள். மனதில் பெரிய லட்சியத்துடன் வாழ்வார்கள். நீண்ட காலமாகப் போராடி லட்சியத்தை அடைவார்கள்.

தெய்வீக நம்பிக்கை அளவு கடந்து இருக்கும். தெய்வீகமான வாழ்க்கை வாழ்வார்கள். அனைத்துத் தரப்பினரையும் மதிக்கும் மனிதாபிமானம் உள்ளவராவர். நல்ல வசீகரமான சக்தியிருக்கும். நண்பர்களிடம் நன்மதிப்பு இருக்கும். கவர்ச்சிகரமான தோற்றமும்,



பேச்சும், கம்பீரமும் தொழில் மேன்மையும் இருக்கும். தனது சுய அறிவைப் பயன்படுத்திக் காரியம் சாதிப்பார்கள்.

**14 ஆம் திகதியில் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

பல கலைகளில் தேர்ச்சி பெற்ற இவர்கள் சுய முயற்சியால், பொருள் சேர்க்கும் அதிர்ஷ்டமுடைய நபர்கள். செய் தொழிலில் நிகரற்ற லாபம் அடைவார்கள். புகழ்மிக்க தொழில் செய்வார்கள். மக்கள் தொடர்பு உடைய தொழில்கள் செய்வார்கள். காதல் விசயத்தில் எச்சரிக்கை தேவை. பொருள் சேர்ப்பதில் சாமர்த்தியசாலிகள். குடும்ப வாழ்க்கை இனிமையாக இருக்கும்.

**23 ஆம் திகதியில் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்**

மிகுந்த தன்னம்பிக்கை உடையவர்கள். இவர்களால் சாதிக்க முடியாதது என்று உலகில் எதுவும் இல்லை. செயற்கரிய செயல்கள் செய்து பலரது பாராட்டையும் பெறுவார்கள். இவர்களைவிட மேலான நிலையில் உள்ளவர்கள் இவர்களைப் புகழ்வார்கள். இவர்களின் உதவியை நாடுவார்கள்.கலைகளில் தேர்ச்சி உண்டாகும். சில நேரங்களில் எதிர்பாராத அதிர்ஷ்டம் கிடைக்கும். தானாகப் பல பெரிய பதவிகள் தேடிவரும்.

**புதன் ஆதிக்கப் பெயரெண்களின் பலன்கள்**

**பெயர் எண் 05**

புதன் ஆதிக்கம் பெற்ற இந்த எண் ஆக்கும் சக்தி பெற்றது. சுகபோகமாக வாழச் செய்யும். உயர் அந்தஸ்து, பெரும்புகழ், கீர்த்தியை உருவாக்கும். கம்பீரமாகவும் வாழச் செய்யும். பெரும்பணம் திரட்டி செல்வந்தனாக்கும். மன ஒருமைப்பாடு, விடா முயற்சி, கட்டுக்கோப்புடன் வாழ்வார்கள். புதுமையில் நாட்டங்கொள்ள வைக்கும். தர்ம சிந்தனைகளோடு மகிழ்ச்சியான வாழ்க்கை வாழச் செய்யும் அற்புதமான எண்ணாகும்.

**பெயர் எண் 14**

புதன் ஆதிக்கம் படைத்த இவ்வெண் வியாபாரத்தில் கொடிகட்டிப் பறக்கச் செய்யும். வியாபாரத் துறையின் மூலகர்த்தாவே இவர்கள் தான். மக்களை ஈர்க்கும் வசியமுடையவர்கள். சகலவிதமான வியாபாரத்திற்கும், தொழிலில் பெரும் பணம் ஈட்டுவார்கள். அரசியல் புகழைத் தரும். இது மிக்க அதிஷ்டமான எண்ணாகும். இவ்வெண்ணைப் பெயராக உடைய வியாபாரம் மக்களால் பெரிதும் பேசப்படும்.

**பெயர் எண் 23**

இவ்வெண், எடுத்த காரியத்திலெல்லாம் வெற்றி தரும் திறனும், எண்ணும் எண்ணத்தை ஈடேற்றும் வல்லமையும் நிறைந்தது. திறமைசாலிகள். பெரிய பெரிய திட்டங்கள் போட்டு வெற்றிவாகை சூடுவார்கள். அரசாங்கத் தொடர்பால் ஆதாயம் கிடைக்கும்.

**பெயர் எண் 32**

பொதுஜன ஆதரவு மிகுந்த எண்ணாகும். வெகு எளிதில் முக்கிய பிரமுகராக மாற்றிவிடும். அறிவின் தலைமையிடமோ இவர்கள் தான். காதல் விவகாரம் அவமானத்தை ஏற்படுத்தும்.

**பெயர் எண் 41**

நல்ல அறிவும், மதி நுட்பமும் வாய்ந்த எண்ணாகும். திடீர் பணவரவு கிட்டும். வெற்றி வீரராக்கும். நல்ல பதவிகள் தானாக வந்து சேரும். பொதுவாழ்வில் பிரகாசிப்பார்கள்.

**பெயர் எண் 50**

தீவிரமான ஆராய்ச்சி உடையவர்கள். நல்ல கற்பனை வளமிருக்கும். பல கலைகற்ற கல்விமான்கள். விடாமுயற்சி, அயராத உழைப்பு இருக்கும். மனைவியால் பொருள் சேரும்

(தொடரும்)

## நாட்டாமையும் அமைச்சரும் சேர்ந்தால்...

**ஏன்... எதற்கு... எப்படி?**

யாழ்ப்பாணத்திலும் சரி, வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் சரி நடக்கின்ற அரச நிகழ்வுகள் எல்லாவற்றிலும் வடக்கின் நாட்டாமை தலையை நுழைத்துக் கொண்டிருக்கின்றார். இவர் முன்னர் படைத் தளபதியாய் இருந்தபோது கட்டளைகள் பிறப்பித்ததைப் போன்றே இப்போது சிவில் நிர்வாகத்திலும் கட்டளைகளைப் போடுகின்றார்.

நீண்ட காலமாக இழுபறியில் இருந்த மாவட்ட மட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் இரண்டு தினங்களுக்கு முன்னர் ஒருவாறு ஒப்பேற்றப்பட்டு விட்டது. இந்தக் கூட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரது தலைகளைக் காண முடியவில்லை.

கூட்டத்துக்கான திகதியையும் நேரத்தையும் அரசியல் செய்யும் தியேட்டர்காரர் நிர்ணயித்துக் கொடுத்திருந்தார். தனக்கு வசதியான நேரத்தில் - கூட்டமைப்பினர் இல்லாத சந்தர்ப்பம் பார்த்து - அதனைக் குறித்துக்கொடுத்திருந்தார். அமைச்சருக்கு தியேட்டர் காரருக்கு வசதியான நேரத்துக்குத்தான் கூட்டமைப்பினரும் வரவேண்டும் என்று அரச அதிகாரிகளும் கூட்டமைப்பினருக்கு கடிதம் அனுப்பினர்.

கிருஷ்ணாவுடன் கூட்டமைப்பின் சந்திப்பு இருப்பதை அறிந்தே தியேட்டர்காரர் அந்தத் திகதியை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு ஒதுக்கியிருந்தார். தனக்கு வசதியாக எல்லாவற்றையும் மாற்றி விட்டு பின்னர் அவர்கள் வரவில்லை என்று நீலிக் கண்ணீரும் வடித்தார்.

இவற்றையெல்லாம்விட, அரச அதிகாரிகள் முதலில் தயாரித்த நிகழ்ச்சி நிரலில் வடக்கின் நாட்டாமைக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் தியேட்டர்காரரிடம் காட்டப்பட்டபோது, வடக்கின் நாட்டாமையையும் கட்டாயம் அழைக்க வேண்டும் என்று அரச அதிகாரிகளுக்கு 'அன்புக்' கட்டளையிட்டாராம்.

கூட்டத்துக்கு வந்த வடக்கின் நாட்டாமைதான் முந்தி வகித்த தொழிலிலை இப்பவும் பற்றுதியோட இருக்கிறதையும் காட்டினார். அதோட தியேட்டர்காரர் ஏன் வடக்கின் நாட்டாமையை எல்லாத்துக்கும் அழைச்சுக் கொண்டு போறாரெண்டால், ரெண்டு பேரும் சேர்ந்து 2006 ஆம் ஆண்டு தொடங்கி புதைச்ச குழிகளின்ர விவகாரம் வெளியில வரக்கூடாதெண்டதுக்காக வேண்டி இருக்குமோ?

-நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

08.01.2012 ஞாயிற்றுக்கிழமை உதயன் 11 ஆம் பக்கத்தில் ''ஓட்டைப் பானையும் திருட்டு எலியும்'' என்ற பாடல் காணப்பட்டது.

கவிமணி.தேசிக விநாயகம்பிள்ளையின் ''மலரும் மாலையும்'' என்ற கவிதைத் தொகுப்பில் இந்தப் பாடல்'' நெற்பானையும் எலியும்'' என்ற தலைப்பில் உள்ளது.

கவிமணியின் இந்தப் பாடலைச் சீரழித்து, கொலை செய்த நிலையில், ஒரு பாடல் உங்கள் பத்திரிகையில் வெளி வந்ததைப் பார்த்து மிகவும் வேதனைப்பட்டேன்.

தமிழ் இன்று பல நிலைகளிலும் பலராலும் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்படுகிறது. இலத்திரனியல் ஊடகங்களின் நாகரிகம், புதுமை, கவர்ச்சி என்ற பெயரில் உச்சரிப்புக் கொலை சகிக்க முடியாத நிலையில் பாழாகிறது. கற்றவர்கள், தமிழ் அறிஞர்கள் என யாருமே இதைக் கண்டு திருத்த முயலாமைதமிழராகிய நாம் செய்த பாவங்களில் ஒன்று. இப்பொழுது பெருமக்கள் பாடிய பாடல்களையும் தமது என்று கூறித்திரித்து அனுப்பினால் தயவு செய்து பிரசுரிக்காது விடுமாறு ஒரு தமிழன் என்ற முறையில் மிகப் பணிவாகத் தங்களை வேண்டிக் கொள்கிறேன்.

இ.சுப்பையாபிள்ளை.

★ ★ ★

உண்மைகளை உரத்து உரைக்கும் உதயனுக்கு முதல் வணக்கம். தினந்தோறும் விடியலிலே உன்மேல் விழிவைக்கக் காத்திருப்பேன். எத்துறை சார்ந்தோருக்கும் களமாய் விளங்கும் எம் இனிய நண்பனே; செய்திகள், கருத்துக்கள், கவிதைகள் என்று சுவாரஸ்யமான கலவைகளைத் தந்து களிப்பூட்டுகின்றவனே; மக்களுக்காக மகத்தான சேவை நாட்டுபவனே! உன் சேவை தொடரட்டும். உன் ஓசை ஓங்கி ஒலிக்கட்டும். ஒளி பிறக்கட்டும்.

வி.திவாகரன்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

★ ★ ★

உள்ளங்கள் நிறைந்த உதயன் அவன்
உதயவானில் ஒளிரும் உதயசூரியன் போல்
ஒவ்வொரு நாளும் உலக மக்களின்
அறிவு ஓங்க உதிப்பவன்
உண்மைகளை உயர்வுடனே
வெளியிடும் விடிவெள்ளியானான்
எண்ணத்தில் இனிமையாய்
இதயத்தில் தூய்மையாய்
செய்திகளை வெளியிடுவதில் சிறந்தோனாய்
உன்னதமாய் உத்தமனாய்
பல்கலை புகட்டுபவனாய்
பாரினிலே பவனிவந்து
பரிசில்களைத் தந்து
பாவங்களை நீக்கி
சொற்களில் இரத்தினமாய்
பொருளில் பொன்மணிகளாய்
ஆக்கத்தில் அரவணைப்பாய்
பணிகள் ஆற்றுவதில் பண்பாளனாய்
தீய செயல்களை அழிப்பதில் அகல் விளக்காய்
தொல்லுலகில் தொல்லைகளை நீக்கி
சுகங்கள் பெருகிட தூய்மையுடனே
இன்று போல் என்றும் வரவேண்டும்
வைகறைப் பொழுதில் வாழ்வாங்கு
வாழ்வதற்கு வாழ்த்துகிறோம்
வணங்குகின்றோம் வருக வருக
எனப் பாராட்டுகின்றோம்.

வ.ஜெயவாணி,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சைச் சட்டையால் எனக்குள்ளே மாற்றம்



முன்னாள் போராளியிடமிருந்து...

பச்சைச் சட்டையுடன் வரும் போது எனக்குள்ளே ஒரு மாற்றம். பச்சை வரி வரி உடுப்புக்கு என்ன மதிப்பு இருந்தது. அந்தக் காலப் பகுதி எமக்கானதென்று சொல்ல ஓர் இடம் இருந்தது. வன்னி பச்சைக்காட்டில், பச்சைச் சட்டையுடன் திரிந்தோம். எம்மைப் பாதுகாத்தது பச்சை மரங்கள். பெண்கள் வெளிப்பட்டார்கள். பெண் விடுதலை பெற்று விட்டதான ஓர் உணர்வு என்னில் ஓடிக் கொண்டே இருந்தது. பஜிறோவில் ஏறிவரும் போது பெண்களுக்கு ஒரு சுதந்திரம். என்னை விட கூடுதலாக மக்கள் என்னைப் பார்த்தார்கள். துப்பாக்கி ஏந்திப் போராடுகின்ற போது மக்கள் வீடு வீடாக எமக்கு விருந்து கொடுத்தார்கள். மனதில் ஓர் துணிவு, வாழ்க்கை பயம் அற்றுப் போனது எது வேண்டுமானாலும் முடித்து விடுவோம் என்ற நம்பிக்கை எமக்குள் இருந்தது. துப்பாக்கி தோளில் தவழும் போது வாழ்க்கையில் முன் நோக்கித்தான் கூடுதலாக நகர்ந்தோம்.

அந்தக் காலப் பகுதியில் எனது உறவுகள் வாழ்க்கையை நகர்த்துவதற்காக கஷ்ரப்பட்டதாக நான் அறியவில்லை. போராடும் போதும் குடும்பமானோம். பிள்ளைகளைப் பெற்றோம். சுமை தெரியவில்லை. சந்தோஷமாக வாழ்க்கை நகர்ந்தது. உதவி செய்ய வருபவர்கள் கூடுதலாக இருந்தார்கள். உதவி கேட்டு வருபவர்கள் குறைவாக இருந்தார்கள். போர்க்கள முனையில் இருந்து விடுமுறை நாளில் வீட்டுக்கு வரும் போது அம்மா, அப்பா, சகோதரர்கள், சகோதரிகள் என பாசத்துக்கு அளவே கிடையாது.

ஊர் மக்கள் திரண்டு வீட்டுக்கு வந்து நலம் விசாரிப்பார்கள். வரும் போது என்னை அவர்கள் பிள்ளையாக நினைத்து தின்பண்டம் எல்லாம் கொண்டு வந்து தருவார்கள். அவர்கள் என்னைப் பார்க்க அவர்களை நான் பார்க்க எமக்குள்ளே ஓர் ஒற்றுமை இருந்தது. அந்த அழகான நாள்களை எத்தனை பேர் நாட்குறிப்பேட்டில் எழுதி வைத்திருக்கிறோம். நாட்குறிப்பேடு எழுதப் பழகியதும் அந்த சந்தோசமான வாழ்வில் தான். சண்டையில் நான் இருப்பேனோ, அல்லது வேறு யாராவது இருப்பார்களோ தெரியாது? ஆனால் இருக்கின்ற நாள்களில் முழுமையாக வாழ்ந்ததான ஒரு உணர்வு எமக்குள்ளே இருக்கும். பயிற்சியிலும் ஆறுதலிலும், விட்டுப் பிரிதலிலும் பல கதைகள் இருக்கும். அந்தக் கதை எல்லோருக்கும் புதுமையாக இருக்கும். பெண்களிடையே ஒரு வரம்பு மீறாத கட்டுப்பாட்டை உருவாக்கிய பெருமை எமக்கு இருந்தது. பெண்ணானவள் பெண்ணாய் வாழ்ந்தாள் என்ற பெருமையை சேர்த்த நாள்களை எவராலும் மறக்க முடியாது. இன்றோ தலை முடிக்கு பூ மாலை கட்டி, உடலினை தங்கத்தால் நிறைத்து, விலை உயர்ந்த சேலை கட்டியும் அவமானப்பட்டு நிற்கிறோம். பெண்களுக்காக பெண்கள் எழுச்சி கொண்ட வரலாறு ஈழத்தில் உண்டு.

''அன்று புலியை முறத்தால் அடித்தாள் இன்று அதுவாக வெடித்தாள்'' என்ற தமிழ் நாட்டுக் கவிஞர் அறிவுமதியின் கவிதை நினைவுக்கு வருகிறது.

ஈழத்துப் புரட்சிப் பெண்களைத் தமிழ் நாட்டுக் கவிஞர்கள் இப்படிப் புகழ்ந்தார்கள். பாரதி, தமிழ் மங்கை, தமிழவள், தமிழ் நிலா, தமிழரசி, தமிழினி போன்ற பெயர்கள் பெண்மையை வெளிப்படுத்தத் துணிந்த பெண்கள், தங்களுக்குச் சூடிக்கொண்ட தமிழ் பெயர்கள். தமிழுக்குள் மூழ்கி, தமிழர்களுக்காய் போராடி, தமிழ்ப் பண்பாட்டில் மேலோங்கியவர்கள் - நாங்கள்.

இன்று எங்களின் வாழ்க்கையை யாராவது பார்த்தீர்களா? என்ன ஏது என்று கேட்டீர்களா? தடுப்பு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்டு பெரும் கஷ்ரங்களை சுமந்து நிற்கிறோம். அன்று சமூகம் ஏற்றுக் கொண்டது. இன்று எங்களைக் கைவிட்டுள்ளது. பிறை நிலா நிலவில், வெண் பரப்பு முற்றத்து மணலில் பாட்டி சோறு ஊட்டிச் சொல்லும் கதைகள் எல்லாம் பாழாகிவிட்டன. எல்லாக் கதைகளையும் பொய்யாக்கி விட்டோம். எமக்கான கதையை புதுப்பிக்க ஆரம்பிக்க முன்னரே நாம் உடைந்து போனோம். எப்படி எங்கள் பேரப்பிள்ளைகளுக்கு கதை சொல்லப் போகிறோம்? பொய்யான கதை சொல்லி ''சான்விச்சா'' ஊட்டப் போகிறோம். வெளிப்பட்டவர்களுக்கான வரலாறு ஒன்று இருக்கிறது. அதில் எவ்வளவு கஷ்டங்களையும், துன்புங்களையும் அனுபவிக்கிறது என்ற உண்மை கண்டிப்பாக பதிவாகும்.

நாம் பட்ட துன்பம் எம்முடன் போய்விட வேண்டும் என்று பார்க்கிறோம். ஆனால் இன்று நிலைமை இப்படி இல்லை. நான் பட்ட துன்பங்களை எமது பிள்ளைகளும் அனுபவிக்கும் போதுதான் எமக்கு வலி அதிகமாக இருக்கிறது. இந்த வலிக்கு மருந்து போட யாருமில்லை. எங்கள் உணர்வையும், கற்பனைகளையும் சிதைக்கும் அரசு எமக்கான வாழ்க்கையைத் தருமா? முள்ளிவாய்க்காலிலேயே நாம் செத்து மடிந்திருக்கலாம். இங்கு வந்து அணு அணுவாகத் துன்பப்படுகின்றோம்.

எங்கள் இனமே எங்களைச் சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறது. நாங்கள் போராட வழியைக் காட்டியவர்கள் ஏன் போராடினீர்கள் என்று இப்போது கேட்கிறார்கள். தை பிறந்தால் வழி பிறக்கும் என்று ஒவ்வொரு தையையும் எதிர்பார்த்துக் காத்திருந்தும் தையும் பிறக்க வில்லை, வழியும் பிறக்கவில்லை. அரச அலுவலகங்கள் தொடக்கம், பாடசாலை வரை எங்களை எங்கள் பிள்ளைகளை குற்றவாளிகள் போல் பார்க்கிறார்கள். மக்களுக்கு அல்ல சிங்கள அரசுக்கு சேவை செய்யும் சிலரால் எப்படி தமிழ் மக்களின் சேவையை நிறைவேற்றப் போகிறார்கள். இதற்குள் எப்படி எங்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றப் போகிறார்கள். ஈழத்தில் பெண் விடுதலையும் நிராகரிக்கப்பட்டு விட்டது.

அரச அலுவலகங்களில் தலைமைப் பதவி வகிக்கும் பெண்கள் சிங்கள அரசுக்கு ஆதரவாக செல்பவர்கள் என்று வடக்கு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி சொல்லுகிறார். பெண்களால் விடிவு காண புறப்பட்ட ஈழம் இன்று பெண்களால் அடிமை யுகத்துக்கு செல்கிறதா? பண, பதவி ஆசைக்கு எதையும் விட்டுக் கொடுக்கும் தறுவாயில் இருக்கிறமோ? பெண்களே சுயபுத்தியோடு கொஞ்சம் யோசியுங்கள். நாங்கள் பெண் விடுதலைக்காக போராடினோம். இன்று கஷ்டப்படுகின்றோம். ஆனாலும் எம்மிடம் நல்ல சமுதாய சிந்தனை இருக்கிறது. அதனை நீங்கள் வளர்ப்பீர்களா?.

# வளைவின் நினைவுகள்

■ ஓடுகாலி

"இப்போது வீதி அகலிப்புக்காக இந்த வளைவு உடைக்கப்பட்டு புதிய அகலமான வளைவு உருவாக்கப்படப் போகின்றது. மனதுக்கு கஷ்டமாகத்தான் இருக்கின்றது. ஆனாலும் அகலிப்பாளர்கள் இதை அகற்றாமல் விட மாட்டார்கள்."

## கோணல் கோலங்கள்

யாழ்ப்பாணம் என்றவுடனேயே ஞாபகவரிசையில் அணிவகுப்பது ஒரு சில அடையாளங்கள் தான். நல்லூர்க் கந்த சுவாமி ஆலயம், யாழ்.நூலகம், அதற்கடுத்து செம்மணியில் உள்ள யாழ்ப்பாணம் வரவேற்கிறது வளைவு இவையே யாழ்ப்பாணத்தைக் குறிக்கும் சின்னங்களாக பொதுமைப்படுத்தப்பட்டு நிலை எல்லோர் மனங்களிலும் படிந்துபோயுள்ளது. இந்த மூன்று சின்னங்களும் யாழ்ப்பாண மக்களைப் போலவே போரால் பட்டபாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. அதைப் போல போருக்குப் பின்னர் பழையபடி இவை மீண்டெழவும் தவறவில்லை.

இவற்றில் செம்மணியில் உள்ள யாழ். வரவேற்பு வளைவு உடைக்கப்படப் போவதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன. மேற்கூறப்பட்ட யாழ்ப்பாணச் சின்னங்களில் வயதில் இளமையானது இதுதான். ஆனால் இந்தச் சின்ன வயதில் வாங்கிய அடிகள் ஏராளம். யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் அமைந்திருந்த தால்-போர் நடக்கின்ற காலங்களில்-முழுவிசளமாக இந்த வளைவு முறையாக வாங்கிக் கட்டும்.

சிறுவயதில் இந்த வளைவைக் கடக்கின்ற போது அது உள் எலும்புகள் வெளித் தெரிய, உருக்குலைந்து போன நிலையில் முனகிக் கொண்டிருப்பதையே நான் காண நேர்ந்தது. அதுவும் ஒரு போர்க் காலம். ''எதிரியின் கைகளில் சிக்காமல் இருக்க யாழ்ப்பாணத்தை விட்டுவெளியேறுங்கள்''. யாருமே எதிர்பாராத இந்த அறிவிப்பு ஒரு இரவில் எல்லா வீடுகளையும் விழிக்கச்செய்தது. முக்கியமான பொருள்களை எடுத்துக் கொண்டு முழு யாழ்ப்பாணமும் குறுகலான ஒரு வீதியில் குழுமியது. முழு ஆட்டை அப்படியே விழுங்கிய பாம்பு போல அந்த வீதி , செய்வதறியாது ஒருவித மந்தத்தனத்தோடு இறுகிப் போனது.எல்லோரும் கால் கடுக்க நின்ற போதும், சனம் அங்குல தூரம் கூட நகர்வதாகக் காணோம். நெரிசலில் சிக்குண்டு, இறந்து போன ஒரு சில முதியவர்களின் சடலங்கள் மீதும் ஏறி நடக்கவேண்டியிருந்தது.இல்லாவிட்டால் அப்படியே நிற்க வேண்டியதுதான்.

இரவு எட்டு மணிக்கு செம்மணி வீதியில் இறங்கியவர்கள், அடுத்தநாள் காலை பத்து மணிக்குப் பின்னரே கைதடியில் மிதக்க முடிந்தது. அந்த நெரிசலில் நிற்கும் போது, யாழ்ப்பாணம் வரவேற்கிறது என்ற சொற்களோடு, காயம்பட்டிருந்த இந்த வளைவை அடைந்த பின்னரே பலருக்கு கைதடியைச் சென்றடைவோம் என்ற நம்பிக்கை பிறந்தது. ஏனெனில் சனம் நகரும் வேகத்தைப் பார்த்தால் ஆயுள் முழுக்க இந்த வீதியில்தான் நிற்கவேண்டியிருக்குமோ? என்ற நினைப்பே பலரிடம் உருவாகியிருந்தது.

குறிப்பாகச் சிறிசுகளின் கால்கள் நெடு நேரம் நின்றதால், விறைக்கத் தொடங்கியிருந்தன. அவர்களைக் கைதடி வரை எப்படி நடத்திக் கூட்டிக் கொண்டு செல்லப்போகிறோம்? என்ற கவலை பல பெற்றோருக்கு எழுந்திருந்தது. எனினும் செம்மணி வளைவைக் காட்டி, ''பாத்தீங்களே, நாங்கள் இஞ்சால வந்திட்டம். இனிப் பிரச்சினை இல்லை. ஒரு சொட்டுத்தூரம் நடந்தால் நாங்கள் போக வேண்டிய இடம் வந்திடும்''. என்று பேய்க்காட்ட உதவியது இந்த வளைவுதான். அன்றைக்கு பலருக்கு செம்மணி வளைவு பிள்ளைகளைக் கைதடி வரை நடக்க வைப்பதற்கு உதவிய கண்கண்ட தெய்வமாக மாறியிருந்தது.

அத்துடன் நின்று களைத்துப்போன சிறுவர்களும், முதியவர்களும் இந்த வளைவில் சிறிது நேரம் சாய்ந்து நின்று ஓய்வெடுத்துக் கொண்ட பின்னே, தொடர்ந்து நடந்தனர். அவர்களுக்கெல்லாம் இது அப்போது ஒரு இளைப்பாறுக் கருவி. மாபெரும் இடப்பெயர்வில் மக்களின் சிரமங்களை ஓரளவு குறைக்க தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து விட்டு, வெற்று நிலத்தோடு , யாழ்ப்பாணம் வரவேற்கிறது வளைவு தன் இரு அந்தங்களிலும் போரில் ஈடுபட்ட தரப்புகள் நிலைகொண்டிருக்க, நட்ட நடுவே தனியாக நின்று கொண்டிருந்தது.

அதன் பின்னர் வந்த காலங்களில் யாருமறியா இரவுகளில் நடந்த செம்மணிப்படுகொலைகளையும் பார்த்துக் கொண்டிருந்த மௌன சாட்சியும் இந்த வளைவுதான். மிகக் குறுகிய காலத்திலேயே மக்களின் மனதோடு நிறைந்து, யாழ்ப்பாணத்தின் தவிர்க்க முடியாத அம்சமாக இது மாறிவிட்டது.

இப்போது வீதி அகலிப்புக்காக இந்த வளைவு உடைக்கப்பட்டு புதிய அகலமான வளைவு உருவாக்கப்படப் போகின்றது. மனதுக்கு கஷ்டமாகத்தான் இருக்கின்றது. ஆனாலும் அகலிப்பாளர்கள் இதை அகற்றாமல் விட மாட்டார்கள்.

வளைவு இடிக்கப்படும் செய்தி தெரிந்த நண்பர் ஒருவர் இப்படி ஒரு யோசனை சொன்னார்-

வளைவை அப்படியே விட்டு விட்டு, அதனை யாழ்ப்பாணத்துக்கு உள்நுழையும் வழியாகவும், அதனுடன் சமாந்தரமாக ஒட்டியபடி அதேயளவு பாதையை அமைத்து அதனை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறும் வழியாகவும் பயன்படுத்தலாமே. இதன் மூலம் வளைவும் பாதுகாக்கப்படும். வீதியும் அகலிக்கப்படும். விபத்துகளும் தவிர்க்கப்படும் என்றார். எனக்கென்னவோ அவர் சொன்னது மிக நல்ல யோசனையாகவே தோன்றுகிறது. ஆனால் உரியவர்களுக்கும் அவ்வாறு தோன்றவேண்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org